

KALKI 13.11.2005
ரூ.7.00
96 பக்கங்கள்
குடும்பத்துடன் களிக்க...
கல்கி
தீப்பிடிக்கும்
திண்டிவனம்!
"தேசிய விருது
நிச்சயம்!"
-சேரன் சேலஞ்ச்

உங்கள் குடும்பத்துக்காக என்றால்!
எப்போதெல்லாம் வாய்ப்பிருக்கிறதோ
அப்போதெல்லாம் உயர்ந்த தரத்தைத்
தானே தேர்ந்தெடுக்கிறீர்கள்?
ஏனென்றால் உங்கள் குடும்பத்துக்கு
எப்போதும் சிறந்தது மட்டுமே தேவை!

எந்த விதமான மாசுப்
பொருட்களும் இருக்கக்கூடாது என்றால்!
மற்ற சர்க்கரைகளைப் போல்
இல்லாமல், பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு
சர்க்கரை மிக கடுமையான சிறப்பான
முறைகளின் மூலம்
சுத்திகரிக்கப்படுகிறது!

நல்ல விலை கொடுத்து ஒரு பொருளை ஏன் வாங்குகிறீர்கள்?

உங்களால் அதற்கான
வித்தியாசத்தை கண்கூடாகப்
பார்க்க முடிந்தால்!
பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
கறையில்லாமல் தூய்மையாக
ஜொலிப்பதை பார்க்க முடியுமே!

எதுவும் எப்போதுமே ஃப்ரெஷ்ஷாக
இருக்க வேண்டுமென்றால்!
பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
மிகத் தூய்மையாகப் பேக்
செய்யப்பட்டிருப்பதால் நீங்கள்
திறக்கும் போதும் ஃப்ரெஷ்ஷாக,
தூய்மையாக இருக்கும்!



பாரீஸ் ப்யூர் ரிஃபைன்டு சர்க்கரை
தூய்மையானது, இனிமையானது.
குழந்தைகள் பேசுவதைப் போலவே.



தூய்மை! இனிமை!!

'அந்நியன்'ல இந்தப் போடு போட்ட விக்ரமா இது!' எனக்கு மட்டுமில்ல, 'மஜா' படம் பார்க்க வந்த அத்தனை பேருக்குமே இந்தக் கேள்வி மனசை நெருடியிருக்கும். சும்மா சொல்லக் கூடாது, விக்ரம் ரொம்ப 'மஜா'வாவே தன்னோட ரசிகர்களை கடுப்பேத்தியிருக்காரு. கட்டப் பஞ்சாயத்து, நாட்டாமை, தாலி சென்டிமெண்ட், முறை மாமன், பழிக்குப் பழின்னு கொஞ்ச காலமா தமிழ் சினிமா மறந்திருந்த அத்தனை கச்சடாவும் இந்தப் படத்துல கொஞ்சம் கூடுதலாவே இருக்கு. வழக்கமா மலையாளக் கதைன்னா யதார்த்த வாசனையடிக்கும். இதுல எல்லாமே தலைகீழ்.

அரிவாளும் கையுமாவே பார்த்துப் பழகின பசுபதிதானேன்னு இனி நாம நினைக்க முடியாதபடிக்கு பார்ட்டி பிரமாதப்படுத்தியிருக்கு. அதேபோல வடிவேலு. இவராலதான் தியேட்டர்ல உட்காரவே முடியுது. மணிவண்ணன் சாரையும் மறந்துடக்கூடாது. மத்தபடி அசின் கிசினெல்லாம் சுத்த வேஸ்ட்.

'நீ தப்பா வேணா தாலி கட்டியிருக்கலாம். ஆனா அதை அறுக்க உனக்கு எந்த உரிமையுமில்லை'னு அசின் (கூட) தாலி சென்டிமெண்ட் டயலாக் பேசும்போது, தமிழ் சினிமா பரிதாபமா காட்சியளிக்குது. விக்ரம் - அசின் ஜோடிக்கு நடுவுல எந்த ஈர்ப்பும் இல்லை. மலையாள நடிகர் முரளியையும் இப்படி வேஸ்ட் பண்ணியிருக்க வேணாம்.

எப்பவும் நூத்துக்கு நூத்திப் பத்து மார்க் எடுப்பாரு வித்யாசாகர். என்னாச்சுன்னே தெரியல, அம்பதுக்கு மேல அண்ணன் தாண்டல. திரைக்கதை படுத்துது. ஒவ்வொருத்தரும் வசனத்த முழும் நீளத்துக்கு நீட்டி முழக்கறாங்க. எப்படி இப்படி ஒரு படத்த விக்ரம் தேர்ந்தெடுத்தாருன்னு ஆச்சர்யமா இருக்கு. சுரத்தில்லாத கதைகள்ல சிக்கி நல்ல நடிகர் வீணாப் போயிடக் கூடாதேன்னுதான் வருத்தமா இருக்கு.

'மஜா'வா இருக்கலாம்னுதான் தீபாவளியன்னிக்கு ப்ளாக்ல டிக்கெட் வாங்கிப் போனேன். ஆனா பேஜாரா திரும்பினதுதான் மிச்சம்!

- லஜ்ஜாவதி



"யப்பா... ஒற்றா... இனிமே உன் மேட்டரை பாலிடிக்ஸ், சினிமா, டீ.வி.ன்னு எல்லாத்தையும் கலந்து கட்டி குடுப்பா"ன்னு சொன்னாலும் சொன்னோம்... ரெண்டு நாளா ஆளு கண்ணுல படவே இல்லை. வெயிட்டா மேட்டர் வந்தா சரின்னு விட்டாச்சு. ஒரு வழியா வரும்போதே ஒற்றனும் "ஹா.. ஹா"ன்னு டூமச்சாக எஃபெக்ட் கொடுத்தபடி வந்தார். "ஆஹா... கராத்தே மேட்டரு மாட்டியிருக்கு போல. அதான் இப்படி வீட் கொடுத்துட்டே வர்றார்"னு நினைச்சு மேட்டரை சீக்கிரம் எடுத்துவிடச் சொன்னோம்.

"நீங்க நினைக்கறது சரிதான். நம்ம பெட்ரோல் மணிசங்கர், கராத்தேவுக்கு ஓவரா சப்போர்ட் பண்றது பவன் ஆட்களுக்குப் பிடிக்கவே இல்ல. 'கராத்தேவுக்குத் தன் கோட்டாவுல எம்.எல்.ஏ. சீட் வாங்கிக் கொடுத்து மெட்ராஸ்ல பாலிடிக்ஸ் பண்ணலாம்னு பார்க்கறாரு அய்யரு. இதெல்லாம் ரொம்ப ஓவரு..'ன்னு பவனுக்குள்ளே ஒரே புகைச்சலா இருக்கு" என்றவர், அருகிலிருந்த சிப்ஸ் பாக்கெட்டைப் பிரித்து கொஞ்சம் வாயில் அள்ளி போட்டுக் கொண்டார்.




• போலீஸ் பிடியில் மதுரை மேயர்...

"சென்னை துணை மேயரைப் பத்தி சொன்னீங்க... மதுரை மேயர் மேட்டர் ஒண்ணு ஓடிக்கிட்டு இருக்கே.. அதைப் பத்தி..." என்று நாம் முடிப்பதற்குள்,

"ஐ... அம்மா மேட்டர்" என்று குஷியில் துள்ளியபடி பேசத் தொடங்கினார் ஒற்றன்.


"அது ஒண்ணுமில்ல... 'ஏற்கெனவே ஓ.பி.எஸ்க்கு முன்னால அம்மா சி.எம்.மா இருந்தப்போ, சென்னை மேயரா இருந்த ஸ்டாலினே அம்மாவை சந்திக்காத சூழல்ல, மதுரை மேயரு ராமச்சந்திரன் அம்மாவை சந்திச்சாரு. அப்போ இருந்தே இவரு அம்மாவோட



அ.தி.மு.க.வில் அமிதாப்!

செல்லப் பிள்ளைன்னு ரெண்டு கழகத்துலயுமே பேச்சு கிளம்புச்சு. இவரும் அம்மா கட்சியில ஐக்கியமாயிடுவார்னும் சொன்னாங்க. ஆனா அவரு தி.மு.க.வுலயே ஸ்டெடியா இருந்துட்டாரு. அதான் இப்போ கொலை.. கேஸ்னு அனுபவிக்கறாரு. புத்திசாலித்தனமா நடந்துக்கலன்னா இப்படித்தான்'னு பேச ஆரம்பிச்சிருக்காங்க." என்று ஒற்றன் சீரியஸாகப் பேச, அவரது மூடை மாற்ற, "ஒற்றா... காமெடி மேட்டர் ஏதாச்சும் இருந்தா எடுத்து விடறது..." என்றோம்.

மீண்டும் குஷிமூடுக்கு வந்தவர், "அம்மா கட்சியில எலக்ஷனுக்கு அமிதாப்பச்சனை யூஸ் பண்ணப் போறாங்களாம்" என்று பெரிய பிட்டைப் போட்டு, எல்லோரையும் கொஞ்ச நேரம் ஆர்வத்துடன் காக்க வைத்தவர், "பயப்படாதீங்க.. அமிதாப் குரோர்பதியில ரெண்டு கோடியை ரெட்டை விரல்களால காட்டுறாருல்ல... அதை அப்படியே அம்மா கட்சி போஸ்டர்ல போடப்போறாங்களாம். அப்படியே 'சூப்பர் ஸ்டார் ஆதரவு பெற்ற சின்னம்'னு எழுதி, முன்னால சின்னதா 'இந்தி'ன்னு எழுதுனா சூப்பரா இருக்கும்" எனச் சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார் ஒற்றன்.



"கோடம்பாக்க நியூஸ் ஒண்ணை எடுத்து விடறது..." என்றோம்.

"கோலிவுட் ரெய்டுக்கு மீடியாதான் காரணம்னு பாதிக்கப்பட்டவங்க புலம்புறாங்க. 'இனிமே சம்பளத்தைப் பத்தி யாராவது பிட்ஸ் எழுதினா, அதை லேசுபாசா விட்டுடக் கூடாது. கடுமையா எதிர்க்கணும். இல்லன்னா முதலுக்கே மோசமாயிடும்'னு கோலிவுட்ல ஒரே பேச்சா இருக்கு" என்று சொல்லிவிட்டு ஒற்றன் கிளம்ப யத்தனிக்க, "முடிஞ்சுதா மேட்டர்" என்றோம்.

"யாரைப் பாத்து என்ன கேள்வி கேக்குறீங்க? 96 பக்கத்துக்கும் ரெடியா மேட்டர் இருக்கு. உங்களால போட முடியுமா?" என்றார். நாம் கப்சிப்.

ஒற்றன்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி.ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு

திருமாவளவனை விளாசும்



"அண்ணன் பிரபாகரன் இராணுவ ரீதியாக எடுத்த ஒவ்வொரு முடிவும் உலகத்தின் கண்களை அகலவிரித்துக் காட்ட வைத்திருக்கிறது. ஒட்டுமொத் தத்திற்குமான தலைவர் பிரபாகரன். தமிழீழத்துக்கு மட்டுமல்ல, தமிழ கத்திற்கும் தலைமை தாங்குகிற தலைவர் பிரபாகரன்தான்."

- விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன், பெல்ஜியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசிய பேச்சு இது! 'விடுதலைப் புலிகளை அதிகாரபூர்வமாக வரவேற்கமாட்டோம்' என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவினைத் திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி கோரிக்கை மனு ஒன்று, ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் அக்டோபர் 24ம் தேதி அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதுதான் பிரபாகரன் பற்றிய இந்தக் கருத்தை முன்வைத் துள்ளார் திருமாவளவன்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக உலக நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள், மாநாடுகளில் திருமாவளவன் போன்றவர்கள் கலந்து கொள் வது அடிக்கடி நடந்து வருகிறது. அப் போது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளிப் பதும் அதன் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசுவதும் வாடிக்கையாகி விட் டன.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தற்போது திருமாவளவன் தெரிவித்த கருத்துகள் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, விடுதலைப் புலிகளின் கொலை வெறித் தாக்குதலில் தங்கள் தலைவனைப் பறிகொடுத்த காங்கிரஸ் கட்சியில் பலரும் கொதித்துப் போயுள் ளனர். இது குறித்து நம்மிடம் வெகுண் டெழுந்து பேசினார் நெல்லை கண்ணன்.

"இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு, உலகம் முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளது என்றால், அது எவ்வளவு பெரிய ஆபத்தான இயக்கம்! அப்படிப்பட்ட தீவிரவாத இயக்கத்திற்கு ஆதரவாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் திருமாவளவன் கலந்துகொள்ள மத்திய அரசு எப்படி அனுமதித்தது என்பதுதான் எனது முதல் கேள்வி. விசா வாங்கி வெளிநாடு செல்பவர் இந்தியாவின்





• பெல்ஜியம் கூட்டத்தில்.... ...திருமா உரை!

இறையாண்மைக்கு எதிராக எந்தவிதமான செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்பது சட்டம். அந்தச் சட்டத்தை இத்தகைய பேச்சின் மூலம் திருமாவளவன் மீறிவிட்டார். ஆகவே மத்திய அரசு திருமாவளவனிடம் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும்'' என்றவர்,

''எனக்குத் தெரிந்து இதன் பின்னணியாக இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, தடை விதிக்கப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்தால்தான் தமிழன் என்று அவர் நினைத்திருக்கலாம். ஆனால், இந்தப் பேச்சுக்களெல்லாம் ஒன்றுக்கும் உதவாத வார்த்தைத் தோரணங்கள். அடுத்த காரணம், தி.மு.க. கூட்டணிக்குள் தன்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்காக கருணாநிதி மீதுள்ள கோபத்தை வெளிப்படுத்த



விடுதலைப்புலி விவகாரம்...



தலைவர்கள்!

காங்கிரஸையும் சேர்த்து அவமானப் படுத்துகிறார் என நினைக்க இடமிருக்கிறது. இந்த அபாயகரமான பேச்சுக்கு விடுதலைச் சிறுத்தைகளை தடைசெய்ய வேண்டுமா என்பது பற்றி மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்'' என்றார்.

காங்கிரஸைச் சேர்ந்த தமிழருவி மணியனும் திருமாவளவனை கண்டித்துப் பேசினார்.

''அமைதி தவழும் தமிழ் மண்ணை, விடுதலைப்புலிகளின் வேட்டைக்களமாக திருமாவளவன் மாற்ற ஆசைப்படுவது ஏன் என்று புரியவில்லை. ஜனநாயக



• ஹெச்.ராஜா

"சட்ட விரோத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பதுதான் ஹீரோயிசமா?"

சிந்தனைகளுக்குச் சிறிதும் இடமளிக்காத பாசிசத் தலைமைக்குத் தமிழகத்தில் பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்பு வழங்கத் துடிப்பது விபரீத விளைவுகளைத்தான் உருவாக்கும். ஈழத்தமிழர் நலனையும் பிரபாகரனின் சகிப்புத்தன்மையற்ற தலைமையையும் இணைத்துப் பார்ப்பது தவறு. நம் ஜனநாயக மண்ணில் பாசிச விதை விதைக்க திருமாவளவன் ஆசை கொண்டால், தமிழக மக்கள் ஒருபோதும் துணை நிற்க மாட்டார்கள்.

விளக்கின் வெளிச்சத்தில் விட்டில் பூச்சிக்கு ஈர்ப்பு எழுவதுபோல பிரபாகரனின் சாகசங்களில் திருமாவளவனுக்கு ஈர்ப்பும் பிரமிப்பும் ஏற்பட்டிருக்கலாம். பிரபாகரனைப் பாராட்டுவதன் மூலம் உலகத் தமிழர்களின் உள்ளங்களில் தனக்கு ஒரு தலைமை இடம் கிடைக்கும் என்ற தவறான அரசியல் கணிப்பு ஒருவேளை அவருக்குள் நேர்ந்திருக்கலாம். இதைத்தவிர வேறெந்த பின்புலமும் அவரின் பேச்சுக்கு இருக்குமென்று நான் நம்பவில்லை.

அதே சமயம், ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் திருமாவளவனின் இயக்கத்தை, பெல்ஜியம் பேச்சைக் காரணம் காட்டித் தடை செய்வது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். இந்த விஷயத்தில் அவசர முடிவெடுப்பது ஆரோக்கியமல்ல. இது தொடர்பாக நான் திருமாவளவனுக்கு அன்பு சார்ந்து ஓர் ஆலோசனையை வழங்குகிறேன்... இன்னமும் தமிழகத்தில் பல கிராமங்களில் இரட்டைக் குவளைகள் இருக்கின்றன. பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் ஜனநாயகத்திற்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த நிலையில் திருமாவளவன் தனது போர் குணத்தையும் செயல் திறனையும் இது போன்ற இன்னமும் ஒடுக்கப்படும் தலித் மக்களின் மேன்மைக்காகச் செலுத்த வேண்டும்" என்றார்.

"ஜனநாயக மண்ணில் பாசிச விதை விதைக்கிறார் திருமாவளவன்!"

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் ஹெச்.ராஜா நம்மிடம் பேசும்போது,

"தமிழகத்துக்கும் பிரபாகரனே தலைவராக வர வேண்டும் என்கிற ரீதியில் திருமாவளவன் பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இவ்வாறு பேசுவது இந்தியாவின் உள்நாட்டு விஷயங்களில் அந்நிய நாட்டு சக்திகளின் தலையீட்டினை வரவேற்பதாகும். ஏனென்றால் பிரபாகரன் இலங்கையின் குடிமகன். திருமாவளவன் ஏன் இப்படிப் பேசுகிறார் என்றால், சில பேருக்குச் சட்ட விரோத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பது தான் ஹீரோயிசம் என்ற நினைப்பு இருக்கிறது. இதுபோன்ற கருத்துகளைத் தெரிவிப்போர் மீது, தமிழக மற்றும் மத்திய அரசுகள் கடுமையான நடவடிக்

• தமிழருவி மணியன்



கைகளை எடுக்க வேண்டும். இந்த இயக்கங்களைத் தடைசெய்யவும் தயக்கம் காட்டக்கூடாது. இது பொடா சட்டம் இல்லாத சூழ்நிலையிலும் சாத்தியம்தான்'' என்றார்.

இந்த சர்ச்சைக்குரிய பேச்சு குறித்து திருமாவளவன் என்ன சொல்கிறார்?

''விடுதலைப்புலிகள் மற்றும் அதன் பிரதிநிதிகளை ஐரோப்பிய ஒன்றியம் அதிகாரபூர்வமாக வரவேற்க முடியாது என்ற அறிவிப்பு, இங்கிலாந்து அரசின் வலியுறுத்தல் காரணமாக எழுந்தது. இந்த செயலைக் கண்டித்து பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில், 'எழுக' தமிழ் அமைப்பின் சார்பில் அறவழிப் போராட்டம் நடைபெற்றது. அதில் பங்கேற்றவர்கள் ஒன்றும் போராளிகள் அல்ல. அந்த நாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள். அதில் கலந்துகொண்ட நான், பேசும் போது பிரபாகரனைப் பற்றிப் பேசினேன். உலக அரங்கில் தமிழர்களுக்கு ஒரு சிறந்த அங்கீகாரத்தை வாங்கித் தந்தவர் பிரபாகரன். எதிர்காலத்தில் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள அனைத்துத் தமிழர்களும் மொழி, இன, பண்பாட்டு அரசியல் ரீதியாக பிரபாகரனைப் பின்பற்ற வேண்டும் என்ற அர்த்தத்தில் கூறினேன். தமிழகம் மட்டுமல்ல, உலகத் தமிழர்களையே வழிநடத்தும் அளவிற்கு பிரபாகரனுக்குத் தலைமைப் பண்புகள் இருக்கின்றன என்பதையே அப்படி வெளிப்படுத்தினேன். இந்தப் பேச்சு எந்த வகையிலும் அதன் தீவிரவாதச் செயல்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலோ அல்லது இந்திய இறையாண்மைக்கு எதிரானதோ அல்ல'' என்கிறார் திருமாவளவன்!

தமிழர் இயக்கம் என்கிற பெயரில், கண்மூடித்தனமான வன்முறையில் ஈடுபடும் விடுதலைப்புலிகளின் தலைவரை திருமாவளவன் வியப்பது, வியப்போடு நமக்கு விசனத்தையும் அளிக்கிறது!

- இரா. முத்துக்குமார்

படங்கள்: **ஸ்ரீஹரி, ராஜன்**





ஆட்டோகிராஃப் வெற்றியின் ஆரவாரம் அடங்குவதற்கு முனபே, அடுத்த படைப்பை முடித்துவிட்டு அப்பாடா என சிநேகமாகச் சிரிக்கிறார் சேரன். தீபாவளி ரேஸிலிருந்து தமது தவமாய் தவமிருந்து படத்தைத் திடீரென விலக்கிக்கொண்டது ஏனாம்? பின்னணி குரல் சேர்ப்பு, பின்னணி இசை சேர்ப்பு, படத்தொகுப்பு, படக்கலவை என்று சென்சார் முடிந்த படத்தை மறுபடி மறுபடி செதுக்கிக்கொண்டே இருந்த சேரனை ஏ.வி.எம். ஸ்டுடியோவில் சந்தித்தோம்.

"படத்தை தீபாவளிப் பரிசாக தமிழக மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குத் தந்துவிட வேண்டும் என்ற உறுதியோடு வேகவேகமாக போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளைச் செய்து

- சேரன் சேலஞ்ச்



"தேசிய விருது



கொண்டிருந்தோம். எனது உதவியாளர்கள் திறமையானவர்கள் என்றாலும் எல்லாப் பணிகளையும் நானே நேரடியாகப் பார்வையிட்டால்தான் எனக்குத் திருப்தி.

ஆட்டோகிராஃப் படத்துக்கான தேசிய விருதை வாங்கக்கூட என்னால் போக முடியவில்லை. அப்பாவை அனுப்பி வைத்தேன் என்றால், எவ்வளவு மன அழுத்தத்தோடு ஓடியிருப்பேன் பாருங்கள். அப்படியும் பல காட்சிகளில் சிறப்புச் சத்தம், பின்னணி இசை போன்றவை இன்னும் சிறப்பாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் கால அவகாசம் குறைவாக இருந்தது. படத்தில் எங்கேயும் ஒரு சிறு பிசிறுகூட இருக்கக்கூடாது என்கிற தீர்மானத்தால், இன்னும் கொஞ்சம் மெருகேற்றும் விதமாக பணிகள் தொடர்கின்றன. முக்கியமாக என் தமிழ் மக்கள் மழை, வெள்ளத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்படாத நாள்தான் எங்களுக்கும் தீபாவளி. இதைத் தவிர வேறு எந்தக் காரணமும் அல்ல. எனக்கு என் படைப்பு மீது நூறு சதவிகிதம் நம்பிக்கை இருக்கிறது.''

இளைஞர்களுக்கு பரிசளிப்பதாகச் சொன்னீர்கள். இது என்ன காதல் கதையா?

''காதலும் உள்ள கதை. ஆனால் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான குடும்பப் பாசம்தான் மையப்புள்ளி. வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும், முன்னேற வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்று பெற்றோர்களைப் பிரிந்து, மாநகரத்திற்கு புலம் பெயர்ந்துபோய், இரவு பகலாக உழைத்து யந்திரத்தனமாய் ஓடிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் பாசத்திற்கான பரிதவிப்புத்தான் கதை.''

நிச்சயம்!”



“நான் நடிக்கிறது வீட்'ல பிடிக்கல!”

- சேரன் நாயகி

மும்பையிலிருந்தும் கேரளாவிலிருந்தும் நடிகைகள் கோடம்பாக்கத்தை நோக்கி படையெடுத்து வருகையில், மாறுதலுக்கு வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணான பத்மப்ரியா சேரனின் 'தவமாய் தவமிருந்து' படத்தின் கதாநாயகியாகி இருக்கிறார்.

''எனக்குக் கடுமையான உழைப்பாளிகளை ரொம்பவே பிடிக்கும். அதிலும் சேரனின் உழைப்பு... கண்கூடாகப் பார்த்ததால் சொல்றேன். சினிமாவே மூச்சுன்னு அவர் வாழ்ந்திட்டிருக்காரு. அவரோட 'ஆட்டோகிராஃப்'பை விட 'பொற்காலம்', 'பாரதி கண்ணம்மா' படங்களை ரொம்பவே ரசிச்சேன். இப்போ அவரோட அட்வைஸ்படி, அவர் கலெக்‌ஷனிலிருந்து சிவாஜி சார் படங்களை பார்க்கிறதுக்கு எடுத்திட்டு வந்திருக்கேன். நிச்சயம் அவரின் பெருமைக்குரிய அறிமுகமா நான் மிளிரப் போறேன்'' என்கிற பத்மப்ரியா, ஓர் எம்.பி.ஏ. பட்டதாரி. GE கம்பெனியில் 'ரிஸ்க் கன்சல்டன்ட்' ஆக மூன்று வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

''கலைகள் மேல ரொம்பவே ஆர்வம். முன்னூறு பரதநாட்டிய நிகழ்ச்சிகள் பண்ணியிருக்கேன். ஆங்கில நாடகங்கள் பண்ணியிருக்கேன். 'ஜெயம்' படத்தோட

இசையமைப்பாளர் ஆர்த்தி பட்நாயக்தான் எனக்கு சினிமா உலகத்தை அறிமுகப் படுத்தினார். அற்புதமான மலையாளப் படங்கள் பண்ணியாச்சு. ஆனாலும் தாய்மொழியில நடிக்கிற சுகம் வேறெதிலும் இல்லை. இன்னைக்கும் நான் படம் பண்றது வீட்டிலிருக்கிறவங்களுக்குப் பிடிக்கலைதான்'' என்று முத்துப் பற்கள் பளீரிடச் சிரிக்கிறார்.

''நம்மூர்ல சினிமாக்கள்ல ஹீரோயின்ங்கற கான்செப்டே கிடையாது. என்னைப் பொறுத்தவரைக்கும் ஷிபான் சாரி போட்டுக்கிட்டோ அல்லது டைட்டான டீ-ஷர்ட் போட்டுக்கிட்டோ கவர்ச்சி காட்றதுல துளிக்கூட விருப்பமில்லை. மாடர்னா பண்ணாலும் 'ஆய்த எழுத்து'ல த்ரிஷா பண்ணினாங்களே அதுமாதிரி அர்த்தமுள்ளதா, கண்ணியமா பண்ணணும். அதே சமயம் கதை, கேரக்டரைவிட யார் டைரக்டர்ங்கிறது ரொம்ப முக்கியம். 'காதல்' படத்துல என்ன கதை இருந்தது. ஸ்கிரிப்ட் இருந்தது? அதுல ஜெயிச்சது டைரக்டர் தானே! அது மாதிரி டைரக்டர்களை அதிகமா நம்பற நடிகை நான். ஒரு வேளை நாளைக்கு சேரன் மசாலா படம் எடுத்தாலும் நான் நிச்சயம் பண்ணுவேன்'' என்று தடதடவென பேசும் பத்மப்ரியா, அடுத்தது விஷ்ணுவர்த்தன் இயக்கத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக 'பட்டியல்' படத்தில் நடிக்கிறார்.



''தமிழ் ரசிகர்களை நினைச்சா ஆச்சர்யமா இருக்கு. என் தமிழ் ஃப்ரெண்ட்ஸெல்லாம் எந்தளவுக்கு அகிரா குரோசோவா படங்களை ரசிக்கிறாங்களோ, அதே அளவுக்குத் தமிழ் மசாலா படங்களையும் ரசிக்கறாங்க. எனக்குத் தெரிஞ்ச சயின்டிஸ்ட் ஒருத்தர், ரஜினி படம் ரிலீஸானா போதும் ஃபர்ஸ்ட் டே, ஃபர்ஸ்ட் ஷோ கட்டாயம் பார்த்துடுவார்! ம்... இவங்க எல்லாம் நாளைக்கு என் படத்தை எப்படி ரசிப்பாங்கன்ற ஆவல்ல தேவுடு காத்திட்டிருக்கேன்பா'' என்றபடி கூந்தலை வருடிக் கொள்கிறார்.

- செந்தில்

அட்டை மற்றும் படங்கள் : சந்தோஷ்ராஜ்

காதலை மட்டுமே படமெடுத்துக் காலம் தள்ளுகிற கோடம்பாக்கத்தில் இருந்துகொண்டு, அப்பா - அம்மா சென்டிமெண்ட் பேசினால் இப்போது எடுபடுமா? உங்கள் ஆட்டோகிராஃப்கூட ஒரு காதல் படம் தானே?

"ஆட்டோகிராஃப் வெற்றிக்குக் காரணம் அதில் இட்டுக்கட்டிய சினிமா காதலை நான் சித்திரிக்கவில்லை. சாதாரண மக்களின் காதலைப் பதிவு செய்திருந்தேன். அதனால்தான் படம் பார்த்தவர்கள் எல்லாம் அதில் தங்களைப் பார்த்தார்கள். அதேபோலத்தான் தவமாய் தவமிருந்தும். இந்தப் படம் நம் பக்கத்து வீட்டுக்காரனின் வாழ்க்கையை படாடோபம் இல்லாமல், பில்ட்அப் செய்யாமல் உள்ளது உள்ளபடிச் சொல்வது. ஒரு சராசரி மனிதனின் வாழ்க்கையில் நடைபெறும் நிஜச் சம்பவங்கள், வாழ்க்கைப் பிரச்னைகள், கனவுகள், அதற்காக அவன் கொடுத்தே தீர வேண்டிய விலை... இப்படி உணர்வுகளின், போராட்டங்களின் கலவை இந்தப் படம். இந்தப் படத்தின் அத்தனை பாத்திரங்களும் நமக்கு மத்தியில் நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்."

சாமான்ய மக்களின் வாழ்க்கையை சினிமாவில் காட்ட வேண்டும் என்ற தாகம் ஏன்?

''நானே ஒரு சாமானியன் என்பதால்தான். சினிமா, நவீன அறிவியல் தந்திருக்கும் கருவிகளில் படம் பிடிக்கப்படலாம். ஆனால் அது உணர்வுகளால் உருப்பெற வேண்டும். ஃபிலிம் சுருளில் எதை வேண்டுமானாலும் படமெடுக்கலாம். ஆனால் வாழ்க்கைப் பதிவுகளே வரலாறாய் வாழ்ந்திருக்கும். இதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் இந்த சாமான்யன்."

உண்மைக் கதைகளைப் பட

மாக்கும் எண்ணம் எதுவுமில்லையா?

''உண்மைக் கதைகளை படமாக்குகிறோம் என்ற பெயரில், வாழ்ந்து மறைந்த ஒரு தலைவரின் கதை அல்லது ரவுடியின் கதையை எடுத்துக் கொள்கிறார்கள். அதை நான் தவறாகச் சொல்லவில்லை. ஆனால் அவர்களின் வாழ்க்கையைவிட நூறு மடங்கு சந்தோஷம், துக்கம், ஆவேசம், தியாகம், இழப்பு என எல்லாமும் மக்களின் வாழ்க்கையில் இருக்கிறது. கையில் பசு நெய் இருக்கிறது. நான் புலிப்பாலைத் தேடிப் போக விரும்பவில்லை.''

இந்தப் படத்தில் உங்களுக்குத் தந்தை



"ராஜ்கிரணை இன்னும் அப்பா என்றுதான் அழைத்துக் கொண்டிருக்கிறேன்!"

யாக நடித்திருக்கும் ராஜ்கிரண் பற்றி இப்போதே பெருமையாய்ப் பேசுகிறார்களே...

''ஆமாம். ராஜ்கிரணின் நடிப்புக்காகச் சிறந்த நடிகருக்கான தேசிய விருது கொடுத்தே ஆக வேண்டும். எனது தந்தை பாத்திரத்தில் வாழ்ந்திருக்கிறார். நான் இன்னும் அவரை அப்பா என்றே அழைத்துக்கொண்டிருக்கிறேன்.

அவரைத் தவிர தமிழ்நாட்டில் வேறு யாராலும் அந்தப் பாத்திரத்தை அத்தனை சிறப்பாகச் செய்திருக்க முடியாது. அதேபோல பத்மபிரியாவை கதை நாயகியாக அறிமுகப்படுத்தியிருக்கிறேன். ஒவ்வொரு காட்சியிலும் ரத்தமும் சதையுமாக ஒட்டிக்கொண்டு விட்ட திறமைசாலி. எழுபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த வேலையைப் பாதியில் விட்டுவிட்டு தாகத்தோடு நடிக்க வந்துவிட்ட துணிச்சல், துடுக்கு, குடும்பப்பாங்கு எல்லாம் நிறைந்த பெண்.''

சிறந்த இயக்குனருக்கான தேசிய விருதை ஆட்டோகிராஃபுக்கு எதிர்பார்த்தீர்களா? இந்தப் படமாவது உங்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யுமா?

''நிச்சயமாக. நூறு விழுக்காடு நம்பிக்கை இருக்கிறது. நான் படைப்பை நம்புகிறவன், வெற்றி நிச்சயம்.''

- ஜெய்

வட்டமேஜை



தில் த்ரிஷா!

அமைந்திருந்தது.
திருவொற்றியூர், பெ.தர்மன்

கல்யாண்ஜியின் 'நீர்' கவிதைகள், நெஞ்சைக் குளிர் வித்து நிகழ்காலத்தின் முரண் பாடுகளைத் தெளிவாக்கின.
சென்னை, ஜோதிகுமார்

விக்ரமின் வெற்றிக்கு அவரது நன்றி கூறும் மனப் பான்மைதான் காரணமாக இருக்க முடியும்.
திருநெல்வேலி, ஜவகர்

விழாவில் தன்னைப் புகழ்ந்து பாடல்கள் பாடப் பட்டதை ஏற்றுக் கொள்ள முடியா மல் தவித்த நல்ல கண்ணு, எப்படி இவ்வளவு கால மாக அரசியல் வாழ்க்கையை வாழ்ந்தார் என்பது ஆச்சர்யமான விஷயம் தான்.
பொள்ளாச்சி, ஜெயப்பிரகாஷ்


'**எ**ங்கள் எம்.எஸ்.' தொடர் ஒரு தெய்வீக அனுபவத்தை எங்களுக்குள் விதைக்கிறது. தொடரட்டும் இனிதே...
ஈரோடு, ரேவதிப்ரியன்

கல்கியின் 'கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள்' கன ஜோரான ஆரம்பம். கோபுலுவின் படங்கள் அட்டகாசம்.
ஆலப்பாக்கம், ஜே.துரைராஜ்

பயங்கரவாதப் பிரச்னைக்கும் காஷ்மீர் பிரச்னைக்கும் முடிவு கட்டும் ஒரு நல்ல வாய்ப்பை முஷாரஃப் இழந்துவிட்டார் என்பதைத் தலையங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.
சென்னை, கே.பி.ராமன்

சூப்பர் ஸ்டார் ரஜினியோடு ஏன் நடிக்க முடியாது என்ற காரணத்தை வெளிப்படையாகக் கூறிய த்ரிஷாவின் இல்லான பதில் நிச்சயம் நியாயமானது.
மதுரை, ஆர்.லட்சுமி

லைசென்ஸ், கிக் ஸ்டார்ட், ஃபர்ஸ்ட் கியர், செகண்ட் கியர், சர்வீஸ் அனைத்தும் ஒழுங்காக அமைந்து விடுமாயின் மனோகரனுக்கு மட்டு மல்ல, வாழ்வில் வெற்றி பெறத் துடிப் பவர்கள் அனைவருக்கும் ராஜபாட்டை தான். 'சக்சஸ் ஸ்டோரி' வழிகாட்டியாக



முஷாரஃபின் முரண்பாடு; மன்மோகன் அரசின் பிடிவாதம்!

இரண்டாயிரம் ஆண்டில் செங்கோட்டை தாக்கப்பட்ட வழக்கில் இப்போதுதான் தீர்ப்பு வந்துள்ளது. பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது அரிஃப் (லஷ்கர் ஈ தொய்பா அமைப்பின் உறுப்பினர்), மரண தண்டனை விதிக்கப் பெற்றுள்ளார். மேல் கோர்ட்டில் மனுச் செய்யப்பட்டு, இந்த வழக்கு மேலும் இழுபறியாகி, இறுதித் தீர்ப்பு எப்போது வரும் என்பது மிகப்பெரிய கேள்விக்குறி!

இந்நிலையில், கீழ்கோர்ட் தீர்ப்பு வெளியாகும் முன் இந்தியத் தலைநகரில் தொடர்குண்டு வெடிப்பு நிகழ்ந்து உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாகி, தீபாவளிப் பண்டிகையின் மகிழ்ச்சியைக் குலைத்து மக்கள் மனத்தில் பீதியை நிரப்பியிருக்கிறது. லஷ்கர் அமைப்புடன் தொடர்புடைய ஒரு வன்முறை அமைப்பு, இந்த நிகழ்வுக்குப் பொறுப்பேற்றுள்ளது.


டிசம்பர் 22, 2000 செங்கோட்டை தாக்குதலுக்கும் அக்டோபர் 29, 2005 தலைநகர் தொடர் குண்டுவெடிப்புகளுக்கும் இடையே ஏராளமான வன்முறை நிகழ்வுகளை பயங்கரவாத அமைப்புகள் நிகழ்த்திவிட்டன! இந்திய அரசு இவற்றைக் கண்டு பதறுவதும், பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துவதும், பாகிஸ்தான் தலைமைக்கு எச்சரிக்கை விடுப்பதும் தொடர்கிறது! இப்போதுகூட



கல்கி



2005 நவம்பர் 13
பார்த்திப ஐப்பசி 27
மலர் : 64
இதழ் : 15




பிரதமர் மன்மோகன்சிங், தம்முடன் தொலைபேசிய முஷாரஃப்பிடம் 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்று பேசியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

மறுபுறம், இந்தியாவில் நிகழும் பயங்கரவாத வெறிச்செயல்களுக்கும் பாக். அரசுக்கும் சம்பந்தமேயில்லை என்று மறுப்பதும் போலி அனுதாபம் தெரிவிப்பதும் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பதாக வெற்று உத்தரவாதம் வழங்குவதும் பாக். அரசுக்கு வாடிக்கையாகிவிட்டது.

"காஷ்மீர்ப் பகுதியில் நிகழ்ந்துள்ள பூகம்பத்தின் விளைவாக இந்தோ-பாக் அமைதி முயற்சிகளில் இயல்பான, விரைவான முன்னேற்றம் காண வாய்ப்புகள் பிரகாசமாகி இருக்கின்றன" என்று பத்திரிகையாளர்களிடம் பேசியுள்ளார் பாக். அதிபர் முஷாரப்! இந்த இக்கட்டான தருணத்தில் அவர் இவ்வாறு கூறுவது நகைப்புக்கிடமாக உள்ளது என்பது ஒருபுறமிருக்க, அதே மூச்சில் அவர் பேசிய பிற விஷயங்களில்தான் எத்தனை முரண்பாடு .

- "பாகிஸ்தான் ராணுவச் செலவுக்கான ஒதுக்கீட்டை நாங்கள் குறைப்பதாக இல்லை!"
- "பூகம்ப நிவாரணப் பணிக் குழுக்களுக்கு ராணுவத்தினரை தலைமை வகிக்கச் சொன்னதில் என்ன தவறு!"
- "நிவாரணப் பணிகளுக்கான ஹெலிகாப்டர்களை இந்திய விமானப் படையினர் இயக்கி வரக்கூடாது என்ற எங்கள் நிபந்தனை மிக நியாயமானதே... பரஸ்பர சந்தேகத்தின் விளைவாகவே அந்த நிபந்தனை விதிக்கப்பட்டது."

ஆகக்கூடி பாகிஸ்தானுக்கு இந்தியா பேரில் உள்ள சந்தேகம் எள்ளளவும் மாறவில்லை; வேற்றுமை உணர்வும் விரோத பாவமும் எள்முனையளவும் குறையவில்லை! ஆனால் அமைதிப் பேச்சுவார்த்தை மட்டும் துரிதப்படும் என்று முஷாரஃப் எவ்வாறு எதிர்பார்க்கிறார்?!



பாகிஸ்தான் ஒத்துழைக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, இந்திய அரசின் நிலைப்பாடும் அமைதியை விரைந்து பெற்றுத்தரும் வகையில் இல்லை.

பாகிஸ்தானுடன் பொருளாதார ஒப்பந்தங்கள், இரு நாடுகளிடையே போக்குவரத்து, மக்கள் தொடர்பு, கலாசாரப் பரிமாற்றம் எனப் பல விஷயங்களை இந்திய அரசு ஊக்குவித்து செயல்படுத்தத் தயாராயிருக்கிறது. ஆனால், பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் விதிக்கும் 'காஷ்மீர் பிரச்னை குறித்த விவாதம்' என்ற நிபந்தனையை இந்தியா ஏற்க மறுக்கிறது; முரண்டு பிடிக்கிறது.

இரண்டுபட்டுக் கிடக்கும் காஷ்மீரில் மக்களின் துன்பமும் துயரமும் தீர்க்கப்படாமலே தொடர்கிறது. அம்மாநில ஆட்சிப் பொறுப்புகூட இரு கட்சிகளால் கூறுபோடப்பட்டுள்ள விசித்திர நிலைமையைக் காண்கிறோம். முதல்வர் பதவி ஏற்கும் தினத்திலேயே குண்டு வெடிக்கிறது! வன்முறையினிடையே, நிச்சயமற்ற அரசியல் பொருளாதாரச் சூழலில் அங்கே மக்கள் வாழ்கிறபோது அவர்களுக்கு யாரிடம்தான் நம்பிக்கை பிறக்கும்? தன்னம்பிக்கை எப்படி உருவாகும்!

முஷாரஃபின் முரண்பட்ட நிலைப்பாடு மாறினாலேயொழிய, மத்திய அரசின் பிடிவாதம் தளர்ந்தாலேயொழிய, காஷ்மீர்ப் பகுதிக்கு கதிமோட்சம் இல்லை.

உணர்வால் ஒன்றியிருக்கும் மக்களை யுத்தக் கோடுகள் கிழிப்பதன் மூலம் பிரித்து வைப்பது கொடூரம். அது இந்த பூகம்பத்தின் விளைவாக மேலும் தீவிரமாக உணரப் பட்டிருக்கிறது. காஷ்மீரைப் பணயம் வைத்துப் போரிட்ட தேசங்கள், காஷ்மீர் மக்களின் விடிவு காலத்துக்கு முயற்சி மேற்கொள்ளாத நிலையில், பயங்கரவாதிகளின் பிடி இறுகுவதும், புரட்சியாளர்களின் சதி ஓங்குவதும் தொடரும். காஷ்மீரைக் கண்ணீரில் கரையவிடாமல் காக்க, முஷாரஃபிடம் நாம் முறையிடுவதைக் காட்டிலும் நாமே முதல் அடி எடுத்து வைப்பதுதான் அறிவுடைமை; ராஜதந்திரம்... மன்மோகன் சிங் அரசு இதைப் புரிந்து கொண்டு இயங்கட்டும். ●



இயக்குனர்

மிக மிக ரகசியமாக இயங்கி வருகிறது ஷங்கர் டீம். 'பேட்டி' என்றாலே கையெடுத்துக் கும்பிடுகிறார் ஷங்கர். 'சிவாஜி' டிஸ்கஷன் நடக்கும் அறையையே சுற்றிச் சுற்றி வந்ததில் பல சுவாரஸ்யமான தகவல்கள் நமக்குக் கிடைத்தன.

ஆஸ்திரேலியா, ஹைதராபாத், தேக்கடி என்று பறந்து பறந்து டிஸ்கஷன் நடத்தியவர்கள், ஒருவழியாக சென்னையில் ஷங்கர் அலுவலகத்தில் செட்டிலாகியுள்ளார்கள்.

ஒரு சாதாரண மனிதன் எப்படிப் பல தடைகளைத் தாண்டி முன்னேறுகிறான் என்பதையே சுவாரஸ்யமாக மூன்று மணி நேரப் படமாகத் தரவிருக்கிறார் ஷங்கர். அவரின் ஒவ்வொரு பட க்ளைமாக்ஸிலும் ஹீரோக்கள் ஒட்டு மொத்த தமிழகத்தை உலுக்குபவர்களாகவும் இந்திய அளவில் கவனத்தை ஈர்ப்பவர்களாகவும் விஸ்வரூபம் எடுப்பார்கள். சிவாஜியின் இறுதிக் காட்சியிலும் இதே பாணி இடம்பெறவிருக்கிறதாம்.

படத்தில் பணியாற்றும் ஒவ்வொரு சீஃப் டெக்னீஷியன்களிடமும் குறைந்தது நூறு நாட்களுக்கு கால்ஷீட் வாங்கியிருக்கிறார் ஷங்கர். படத்தின் பட்ஜெட் 'தேவதாஸ்' அளவுக்கு (50 கோடி) மிரட்டா விட்டாலும் இதுவரைக்கும் தயாரான தென்னிந்தியப் படங்களிலேயே உச்சகட்ட பட்ஜெட்டாக இருக்குமாம். நடிகர் / நடிகைகள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களின் சம்பளமும் இதுவரை யாரும் கேள்விப் படாததாம்.

ஆறு உதவியாளர்கள், இயக்குனர்கள் பாலாஜி சக்திவேல், ஜேடி-ஜெர்ரி, எழுத்தாளர் சுஜாதா ஆகியோரைக் கொண்ட டீம் நடத்திய டிஸ்கஷன் டேப்பில் பதிவு செய்யப்பட்டு, அதற்கு தற்பொழுது ஷங்கரும் சுஜாதாவும் இறுதி வடிவம் கொடுத்து வருகின்றனர். மறுபக்கம் ஏ.ஆர். ரஹ்மான் பாடல் கம்போஸிங்கில் பிஸியாகிவிட்டார்.

'சிவாஜி'யில் அனைவரும் ஆச்சர்யப் படும் விஷயம், முதன் முறையாக ரஜினி படத்துக்கான அனைத்து முடிவுகளையும் ஒரு இயக்குனரே, அதாவது ஷங்கரே முடிவு செய்வதைத்தான். படத்தின் தலைப்பு முதல் ஹீரோயின், கலைஞர்கள் தேர்வு, கதை, ஸ்கிரிப்ட் என அனைத்தையும் முதலில் முடிவு செய்வது ஷங்கர் தானாம்.

அவர் ஒரு விஷயத்தை ஓ.கே. செய்த பிறகே அதைப் பற்றிய தகவல் ரஜினிக்கும் தயாரிப்பாளருக்கும் சென்று சேர்கிற



சிவாஜி

தாம். இதுபோன்றதொரு சுதந்திரம் எந்த ரஜினி பட இயக்குனருக்கும் இதுவரை கிட்டியதில்லை என்று ஆச்சர்யப்படு கின்றனர் திரையுலகினர்.

டிசம்பரில் தொடங்குகிறது 'சிவாஜி'யின் படப்பிடிப்பு. வழக்கம் போலில்லாமல் ஷங்கர் இந்தப் படத்தை விரைவிலேயே முடித்து விடுவார் என்கிறார்கள். பரபரவென காட்சிகள் சுட்டுத்தள்ளப்பட்டு, ஆகஸ்ட், செப்டம் பருக்குள் படப்பிடிப்பு முடிந்து, அடுத்த தீபாவளிக்கு 'சிவாஜி' படப் பெட்டி தயாராகி விடும் என்பது சற்றுமுன் கிடைத்த தகவல்.



ஒளிப்பதிவாளர்

ரஜினி - ஷங்கர் இருவரும் இணைந்து படம் பண்ணுகிறார்கள் என்று செய்திகள் பரவியதுதான் தாமதம், திரையுலக நண்பர்கள், உறவினர்கள் என்று ஆளாளுக்கு, 'நீங்கதான் ரஜினி படத்துக்கு ஒளிப்பதி வாளராமே'ன்னு தொடர்ந்து விசாரிக்க ஆரம்பிச்சுட் டாங்க. என் மனைவியும் என் மகளும்கூட நான் இந்தப் படத்தை கண்டிப்பா பண் ணனும்னு ரொம்ப விருப்பப்பட்டாங்க. எனக்கு இதுக்கு முன்னாடி ரஜினியோட முத்து, படையப்பா, பாபா, சந்திர முகின்னு நாலு படங்கள் வந்தும் பண்ண முடியாமப் போச்சு. ஷங்கருக்கும் பாய்ஸ், அந்நியன் பண்ண முடியலை'' என்கிற கே.வி.ஆனந்த்தான் தற்போது 'சிவாஜி'யின் ஒளிப்பதிவாளர். ஷங்கரின் 'முதல்வன்' படத்துக்கு ஒளிப்பதிவு செய்தவர். முதன் முறையாக ரஜினி மற்றும் ஏவி.எம்.முடன் இணைந்து பணிபுரியத் தயாராகி வருகிறார்.

"ஷங்கரை பொறுத்தவரைக்கும் ஒரு படத்தை ஆரம்பிச்சுட்டாருன்னா குதி ரைக்கு லாடம் கட்டின மாதிரி அதே முனைப்பா இருப்பார். டெக்னீஷியன் களுக்கு வேண்டிய சுதந்திரத்தைக் கொடுப்பார். 'சிவாஜி' முடிவானவுடனே இருவரும் சந்தித்தோம். கதை சொன் னார். என் கருத்துக்களைக் கேட்டார். வழக்கமாக அவர் படங்கள் தொடங் கறதுக்கு முன்னாடி நிறைய டிஸ்கஷன் நடக்கும். இப்போதும் அப்படித்தான்'' என்றவரிடம் 'ரஜினி படங்களில் இதுவரை எந்தவொரு கேமராமேனும் பெரிதளவில் பேசப்படவில்லையே...' என்றோம். நிதானமாக பதில் சொன்னார்.

''அப்படிச் சொல்ல முடியாது. 'தளபதி'யில் சந்தோஷ்சிவன் அசத்தலையா? 'சந்திரமுகி'யில் கூட ஜோதிகாவை எல்லோரும் திகிலாகப் பார்ப்பதற்கு அவர் கண்களுக்கென்று ஸ்பெஷலாக லைட்டிங் வைத்த கேமராமேனும் பெரிய காரணம். மற்றபடி பிற படங்கள் போல்தான் நான் 'சிவாஜி'யையும் பாவிக்கிறேன். எதிர்பார்ப்புள்ள படமென்பதால் பெரிதாக வேட்டியை மடித்துக்கொண்டு களமிறங்க முடியாது. அதே போல் ரஜினிக்கென்று தனியாகவும் ஒளிப்பதிவு செய்ய முடியாது. ஸ்கிரிப்ட் என்ன கட்டளையிடுகிறதோ, அதற்கேற்ற படிதான் என்னாலும் விஷுவல் அளிக்க முடியும்'' என்றவர், தொடர்ந்து, ''விஷால் மாதிரி புதுமுகத்தை வைத்துப் படம் பண்ணும்போது அதிகாலை மூன்று மணிக்கே ஷூட்டிங் ஆரம்பிக்க முடியும். பெரிய நடிகர்கள் என்றால், அவர்கள் வசதிக்கு ஏற்றவாறுதான் செய்ய முடியும்'' என்றார்.

''நானே ரஜினியின் ரசிகன். ஒரு சாதாரண ரசிகனுக்கு உள்ள தனி எதிர்பார்ப்பு எனக்குள்ளுமிருக்கிறது. நான் மும்பை பக்கம் சென்றாலே 'சிவாஜி' என்றொரு பெரிய படம் தமிழில் உருவாகிறதாமே' என்று பாலிவுட்காரார்கள் அனைவருமே 'சிவாஜி' பற்றி விசாரிக்கிறார்கள்!'' என்கிறார் ஆனந்த் உள்ளப் பூரிப்போடு.



தயாரிப்பாளர்

தமிழகமே எதிர்பார்க்கிற ஒரு படத்தைத் தயாரிக்கிறோம் என்கிற பந்தா துளிக்கூட இல்லை ஏவி.எம். சரவணன் மற்றும் குகனிடம். மிக இயல்பாக 'சிவாஜி'யின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி நம்மிடம் பேசினார் சரவணன்.

''ஏவி.எம். தயாரிப்பில் இப்பொழுது முழு வீச்சில் இயங்கி வருவது அஜீத், இயக்குனர் பேரரசு கூட்டணியில் உருவாகும் 'திருப்பதி' தான். அது ஏப்ரல் 14-ல் வெளிவர இருக்கிறது. மற்றபடி 'சிவாஜி' இன்னமும் டிஸ்கஷன் லெவலில்தான் போய்க்கொண்டிருக்கிறது. அநேகமாக டிசம்பரில் படப்பிடிப்பு தொடங்கலாம்.

மீடியாவால் கிளப்பப்படும் சில செய்திகள்தான் எங்களை அச்சுறுத்துகிறது. படம் ஆரம்பிப்பதற்கு முன்பே விநியோகஸ்தர்களிடமிருந்து பணம் வாங்கி அதை வைத்துத்தான் 'சிவாஜி' படப்பிடிப்பை நாங்கள் ஆரம்பிக்க இருப்பதாகக் கூறுவது முற்றிலும் தவறு. சிவாஜியின் பிஸினஸை இன்னும் நாங்கள் ஆரம்பிக்கவேயில்லை என்பதுதான் உண்மை. ஷங்கர், படத்தின் ரிலீஸ் தேதியை முடிவு செய்த பிறகே வியாபாரம் பேசப்படும். டோக்கன் அட்வான்ஸ் கொடுக்க வந்தவர்களிடம் கூட நாங்கள் வாங்க மறுத்து விட்டோம். இன்னொன்று தெரியுமா, படத்திற்காக ஐ.ஓ.பி. வங்கியில் லோனுக்கு விண்ணப்பித்திருந்தோம். அது இப்பொழுது சாங்ஷன் ஆகிவிட்டது. வங்கியில் கிடைக்கும் லோனை வைத்துத்தான் 'சிவாஜி'யை தயாரிக்கவுள்ளோம். பெரிய நடிகர், பெரிய இயக்குனரை வைத்துப் படம் பண்ணுவதால் உருவாகும் எதிர்பார்ப்புகள் மேலும் சுமையைத்தான் கூட்டுகின்றன'' என்றார்.

- ச.ந. கண்ணன்

படங்கள் : **ஸ்ரீஹரி, புதூர் சரவணன்**



பட்டையைக் கிளப்பும் பாவனா!

சத்தமில்லாமல் ஒரு சாதனை படைத்திருக்கிறார் கன்னட மங்கை பாவனா ஷெட்டி. பெங்களூர் மகாஜனா கல்லூரியில் பி.யூ.சி. இரண்டாம் ஆண்டு படிப்பவர். முதல் முறையாக தேசிய அளவில் கோல்ஃப் மகளிர் பிரிவில் கோப்பையை வென்று, பட்டையைக் கிளப்பியிருக்கிறார் இந்தத் தென்னகப் பெண்.

இதுவரை தென்னகத்தைச் சேர்ந்த வீராங்கனை யாரும் ஏன் இந்தச் சாதனையைப் படைக்கவில்லை என்றால், "வடக்கில் பல நகரங்களில் மிகச் சிறந்த கோச்சிங் வசதிகள் இருக்கின்றன. இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் சிறந்த பயிற்சியாளர்கள் அங்கு வரவழைக்கப்படுகிறார்கள். அதுவும் கோல்ஃப் அகடமி சண்டிகரில் இருப்பதும் அவர்களுக்குப் பெரும் வசதி'' என்கிறார் பாவனா.

எத்தனையோ விளையாட்டுகள் இருக்க, ஏன் கோல்ஃப்பை தேர்ந்தெடுக்க வேண்டும்? "தொடக்கத்தில் டென்னிஸ் விளையாட்டில்தான் என் கவனம் பதிந்திருந்தது. ஆனால் அப்பாவோடு கோல்ஃப் மைதானங்களுக்குத் தொடர்ந்து செல்லச் செல்ல இதில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு, ஆர்வம் வளர்ந்தது." என்கிறவரிடம் சோகமும் இருக்கிறது.

''எண்ணெய் நிறுவனங்களின் ஸ்போர்ட் கோட்டாவில் சேர்ந்து தேசிய அளவில் பெயர் பெற்ற பெண்கள் கூட, உலக அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதில்லை. விளையாட்டு தொடர்பாக அவர்களின் உதவியைக் கேட்டாலும் அவர்கள் உற்சாகம் காட்டுவதாகத் தெரியவில்லை. ஏதோ விளையாட்டாக (!) ஆடுகிறோம் என்று நினைக்கிறார்களோ என்னவோ! இப்போது ஜூனியர்களுக்கும் உலகளவில் விளையாடும் வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன. இரண்டு வருடங்களுக்கு முன் இதை எல்லாம் நினைத்துக்கூட பார்க்க முடியாது'' என்று கூறும் பாவனாவின் ஆதர்ச நாயகன் சர்வதேச கோல்ஃப் புலியான டைகர் உட்ஸ்.

பாவனா வழியில் நாங்களும் போவோம் என்று கிளம்பும் பெண்களுக்கு ஒரு தகவல். ஒரு கோல்ஃப் செட் (பந்துகள் மற்றும் க்ளப்கள்) வாங்க நாற்பதாயிரம் ரூபாய் தேவைப்படுமாம். தவிர பயிற்சிக்காக நாற்பதாயிரம் ரூபாய். இன்னும் தேர்ச்சி பெற்ற பிறகு அங்கே இங்கே என்று போய் வர வருடத்திற்கு இரண்டு லட்சம். மைசூரில் மயக்க மருந்துப் பிரிவு மருத்துவராக விளங்கும் பாவனாவின் அப்பா நாகாஷெட்டி, இப்படிச் செலவு செய்யும்போது மயக்கம் போட்டாரா என்பது தெரியவில்லை.

- ஜி.எஸ்.எஸ்.



எங்கள் எம்.எஸ்.

அது 1974-ம் வருடம். அப்போது நான் இருபத்து நான்கு வயது இளைஞன். டெல்லியிலுள்ள 'டெல்லி சங்கீத் நாடக அகாடமி' விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்தேன். அந்த சமயத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்கும் அம்மேடையில் விருது வழங்கப்பட்டது. பலத்த கரகோஷங்களிடையே விருதை வாங்கிய எம்.எஸ்., மேடையிலிருந்து கீழிறங்கி நேராக கணவர் சதாசிவம் அருகே சென்றார். அவரிடம் விருதைக் காண்பித்து புன்னகை முகத்தோடு அப்படியே அவர் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்.



அத்தனை பேர் மத்தியில் நடந்த இச்சம்பவம் என்னைச் சிறிது நேரம் சிலிர்க்க வைத்தது. தாம் எத்தனை உயரத்துக்குச் சென்றாலும், தம்மைத் தூக்கிவிட்டவருக்குச் செய்ய வேண்டிய மரியாதையைத் தவறாது செய்திட வேண்டும் என்கிற பாடத்தை அன்றுதான் கற்றுக்கொண்டேன்.

அப்பா, ஓவியர் மணியம் 'கல்கி'யில் முழு நேரமாகப் பணிபுரிந்தவர். இந்த பந்தத்தில் எம்.எஸ். அவர்களுடனும் அவர்களின் குடும்பத்துடனும் பழக, பேச சந்தர்ப்பங்கள் கிடைத்ததை, இந்த ஜென்மத்தில் எனக்குக் கிடைத்த பேறாக நினைக்கிறேன். முதன்முதலில் எம்.எஸ். அவர்களைப் பற்றி என் மனத்தில் பதிந்தபோது, எனக்கு வயது ஏழு. 1957-ல் மந்தைவெளியிலுள்ள எங்கள் வீட்டு கிரகப்பிரவேச நிகழ்ச்சிக்கு வரமுடியாதவர், அடுத்து சில தினங்கள் கழித்து, ப்ளைமவுத் காரில் வந்து இறங்கினார். அப்போது, எங்கள் தெருவின் சாலையில் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. ரோடு முழுக்க ஜல்லிக் கற்கள். தெரு முனையில் காரை நிறுத்தச் சொல்லி கீழிறங்கி, கற்களினூடே மெல்ல அடியெடுத்து அவர் என் புது வீட்டை நோக்கி நடந்து வந்தபோது... கேட்டுக்கு வெளியே அரை டவுசர் போட்டுக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, இந்தக் காட்சியும் அவரின் எளிமையும் அப்படியே மனத்தில் தங்கிவிட்டன.

'கல்கி தீபாவளி மலர்' தயாராகும் சமயங்களில் அப்பா பல மாதங்கள் முன்பே, கீழ்பாக்கத்திலிருந்த கல்கி கார்டனில் தங்கி விடுவார். கீழே கல்கி அலுவலகம். சதாசிவம் மாமாவும் எம்.எஸ். அவர்களும் மேல் மாடியில் வசித்து வந்தார்கள். அப்போது தவறாது காலை மாலை வேளைகளில் எம்.எஸ். மாடியில் சாதகம் செய்யும் ஓசை கேட்குமாம். அப்பா அடிக்கடி எங்களிடம் இதைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

மணியம் செல்வன்

பின்தொடரும்


ன்னகை!



● ம.செ. குடும்பத்துடன்...

கல்கி அலுவலகத்தில் சரஸ்வதி பூஜை நடக்கும் சமயங்களில் எம்.எஸ். அதில் கலந்துகொண்டு பாடுவார். அந்த சமயங்களில் தீபாவளி மலர் தயாராகிக் கொண்டிருக்கும். அதற்கென வரையப்பட்டிருக்கும் ஓவியங்களைப் பார்த்து மனதார பாராட்டிவிட்டுச் செல்வார். இந்த பாக்கியங்கள் என் தந்தைக்கும் எனக்கும் கிடைத்திருக்கின்றன.


என் திருமணத்திற்கு முன்பே தந்தை இறந்து விட்டார். நானும் என் அம்மாவும் கல்கி கார்டனுக்குச் சென்று கல்யாண பத்திரிகை கொடுக்கச் சென்றோம். உணர்ச்சிபூர்வமாக இருந்த என் அம்மாவிடம், "கவலைப்படாதே. எல்லாம் நல்லபடியா நடக்கும். மணியம் மேலிருந்து மணமக்களை வாழ்த்துவார்" என்றெல்லாம் எம்.எஸ். சமாதானப்படுத்தினார். அவரிடம் விடைபெற்றுக் கிளம்பி காரை நோக்கி நடந்து வருகிறோம். பின்னாலேயே அவரும் வருகிறார். 'வர்றேங்க' என்று சொல்லிவிட்டு நடந்தால், மீண்டும் பின் தொடர்கிறார். எங்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கார் வரை வந்தவர் அப்படியே நின்று புன்னகைக்கிறார். அவர் நிற்க, எப்படி காரில் ஏறி அமர்வது என்று நாங்கள் நெளிகிறோம். 'ம்... உட்காருங்க' என்று அன்பாகக் கட்டளையிட்டதும்தான் காரினுள் அமர்ந்தோம். கார் கிளம்பி நகரும்வரை சிரித்த முகத்தோடு வாசலில் நின்றுகொண்டேயிருக்கிறார். இதைப் பார்த்த அம்மாவுக்கும் எனக்கும் சில நிமிடங்கள் பேச்சே வரவில்லை. எத்தனை பெரிய இசை மேதை, ஊர் உலகமெல்லாம் அறிந்தவர்... அவர் எங்களுக்கு அளித்த விருந்தோம்பல், மரியாதை... நம்மில் எத்தனை பேரிடம் இந்தக் குணம் உண்டு?

நான் படம் வரையும்போது அவருடைய தெய்வீகமான குரலடங்கிய பாடல்களைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டேயிருப்பேன். நான் காசி போயிருந்தபோது விடியற்காலை நான்கு மணிக்கு எம்.எஸ்.ஸின் சுப்ரபாதம் ஒலித்துக்கொண்டிருந்தது. திருப்பதி போனால்... அங்கேயும் இவருடைய சுப்ரபாதம் ஒலிக்கிறது. அப்பொழுதுதான் நினைத்துக் கொண்டேன்... எத்தனை பெரிய சாதனையாளர், எவ்வளவு அற்புதமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்று.

அவர் மறைவிற்குச் சில மாதங்கள் முன்பு கோட்டூர்புரத்திலுள்ள அவரது இல்லத்துக்கு நானும் என் மனைவியும் சென்று பார்த்தோம். அப்பொழுதே அவர் மிகவும் சுகவீனமாக இருந்தார். இருப்பினும் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து எங்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

பாரம்பரியம், கண்ணியம், கட்டுப்பாடு அனைத்தையும் தன் இறுதி மூச்சுவரை பின்பற்றியவர். எப்போதும் சிரித்த முகத்துடன் பழகுவார். என் அப்பாவின் பெயர் வருமாறு என் மகனுக்கு சுப்ர 'மணியம்' என்று பெயர் வைத்தபோது, எங்களையெல்லாம்விட அவர்தான் அதிகமாக பூரித்துப் போனார். எம்.எஸ்.ஸின் பாடல்களும் நினைவுகளும் அவர் மலர்ந்த முகத்தின் கனிந்த புன்னகையும் என் வாழ்வின் இறுதிவரை கூடவே பின் தொடர்ந்து வரும்.

தொகுப்பு : **செந்தில்**
படம் : **ஸ்ரீஹரி**



தண்டனை

என் நண்பன் ராமநாதனின் மகன் கணேஷ், என்னைப் பார்க்க அலுவலகம் வந்திருந்தான்.

"அப்பா, நல்லா இருக்காரா கணேஷ்?"

"அவரைப் பத்தி பேசத்தான் வந்தேன் மாமா. அப்பாவ முதியோர் இல்லத்துல சேர்க்கணும். நான் சொன்னா கேட்க மாட்டேங்கறார்... நீங்க கொஞ்சம் வந்து சொல்லணும்."

"என்னப்பா திடீர்னு..."

"ஆமா மாமா, என் மனைவியோட டார்ச்சர் நாளுக்கு நாள் அப்பாகிட்ட அதிகமாயிட்டே போகுது. அவரு எது பண்ணாலும் அதுல குத்தம் கண்டுபிடிக்குறா. வீட்ல அவருக்கு மரியாதையே இல்லை. என்னால தாங்க முடியலை. அதான் அவரை முதியோர் இல்லத்துல சேர்த்துடலாம்னு முடிவு பண்ணிட்டேன். ஆனா அப்பா கேக்க மாட்டேங்குறார். நான் சாகற வரைக்கும் இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்குறார்."

நான் ராமநாதனிடம் வந்து பேசுவதாய் உறுதியளித்தேன்.

அன்று மாலையே சென்றேன். நான் வீட்டுக்குள் நுழைவதற்கு முந்தைய விநாடி, என்னைக் கவனிக்காது ராமநாதன் தன் பேரன், பேத்தியுடன் வீட்டுக்குள் நுழைந்துகொண்டிருந்தான். பின்னாலேயே நானும். வீட்டுக்குள்ளிருந்து திடீர் சத்தம்...

"இங்க இருக்குற ஸ்கூல்லருந்து குழந்தைங்கள கூட்டிட்டு வர்றதுக்கு எவ்ளோ நேரம்? கொஞ்சமாச்சும் உடம்புல சுறுசுறுப்பு வேணாம்.. எது சொன்னாலும் எருமை மாட்டு மேல மழை பெய்ஞ்சா மாதிரி இருக்க வேண்டியது..." அநேகமாய் அவன் மருமகளாய் இருக்க வேண்டும். எனக்கு மனம் கசிந்தது.

வீட்டுக்குச் சென்று ராமநாதனை தனியே அழைத்துப் பேசினேன்.

"ஏண்டா இப்படி சித்ரவதைபடுறே? பேசாம உன் பையன் சொல்ற மாதிரி முதியோர் இல்லத்துக்குப் போக வேண்டியது தானே?"

"இல்லடா வேண்டாம்..."

"அதுதான் ஏன்னு கேக்கறேன்?"

சற்று நேரம் அமைதியாயிருந்து விட்டு, "என் மனைவி உயிரோடு இருந்த காலம் வரைக்கும் அவள நான் எவ்ளோ கொடுமை பண்ணேன்னு உனக்கு நல்லாத் தெரியும்... போனப்புறம்தான் அவளோட அருமை தெரியுது. அருமை தெரிஞ்சுட்டா நான் அவளுக்குப் பண்ணின கொடுமைங்க சரியாப் போயிடுமா? தண்டனை வேண்டாமா? இதுதாண்டா தண்டனை. என் மருமக என்னை எப்படி வேணா நடத்தட்டும்... நான் இந்த வீட்டைப் விட்டுப் போக மாட்டேன். தப்பு செஞ்சவன் தண்டனை அனுபவிச்சே ஆகணும்... என் மனைவிக்கு செஞ்ச தப்புக்கு, மருமக தண்டனை தர்றா... தாங்கிக்கறேன்" என்ற ராமநாதனின் கண்களில் மெல்லிய நீர்ப்படலம்.

கே.ஆனந்தன்

காங்கிரஸ் கட்சிக்குள் வன்னியப் புயலைக் கிளப்பிய திண்டிவனம் ராமமூர்த்தி, அந்தப் புயல் கரையைக் கடப்பதற்குள் கூட்டணிக்குள் சரவெடி ஒன்றைப் பற்றவைத்துள்ளார். திண்டிவனத்தாரை அவரது வீட்டில் சந்தித்தபோது, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஒவ்வொரு வார்த்தையும் சாணை பிடிக்கப்பட்ட கத்தி போன்று படு ஷார்ப்பாக இருந்தது.

“காங்கிரஸுக்கு 90 சீட்... இல்லைன்னா...”



உங்கள் கட்சியில் வன்னியர்களுக்கு சீட் தரப்படவில்லை என்றால், அதற்கு ஏன் கலைஞர் மீது சீறிப் பாய்கிறீர்கள்...?

“பின்னே... கூட்டணித் தலைவர் யாரு... அவர்தானே... மயிலாடுதுறையை வன்னியருக்காகவே தந்தாராம். ஆனா நாங்க ஒதுக்கலையாம். இது என்ன கூத்தா இருக்கு. அந்த சீட்டை மணிசங்கரைத் தவிர யாருக்காவது தர முடியுமா? ஆக, வன்னியருக்குத் தராம இருக்கறதுக்காகவே அதைத் தந்துட்டு இப்போ இப்படிப் பேசறது அரசியல் குசும்பா... இல்ல அரசியல் ஆணவமான்னு தெரியல... கேட்டா உட்கட்சி விஷயத்துல நான் தலையிட முடியாதுன்னு கருணாநிதி சொல்றாரு. பின்னே ஜே.எம்.ஆரூண் வீட்டு விசேஷத்துல, ‘நான் தான் ஆரூணுக்கு சிபாரிசு பண்ணினேன்’னு எதுக்குச் சொல்லணும்.... அப்போ அடுத்த கட்சி விவகாரத்துல மூக்கை நீட்டிட்டாருன்னு தானே அர்த்தம்.”

அது முடிந்துபோன விவகாரம். அதை ஏன் இப்போது கிளறுகிறீர்கள்?

“இப்போ கிளறாம எப்போ கிளர்றது? தேர்தல் வரப் போகுது. போன தடவை கடைசி நேரத்துலதான் காங்கிரசுக்கு சீட்டை ஒதுக்கினாரு கருணாநிதி... சரின்னு அட்ஜஸ்ட் பண்ணிட்டோம். ஆனா இந்த முறை எந்தத் தப்பும் நடந்துடக் கூடாதுன்னுதான் இப்போ பேச ஆரம்பிச்சிருக்கேன்... இல்லைன்னா வழக்கம் போல கருணாநிதி கடைசிக் கட்டத்துல Take it or Throw it ன்னு ஈஸியா சொல்லிடுவாரு...”

காங்கிரஸுக்குள் கலைஞர் மூக்கை நுழைப்பதாக எப்படிக் கூறுகிறீர்கள்?

“தோ... இந்த கராத்தே விஷயத்துலயே தெளிவாத் தெரியுதே... காங்கிரசுக்குள்ள யாரு வரணும், யாரு வரக் கூடாதுன்னு முடிவு பண்றது காங்கிரஸ் தலைவரா, இல்ல கருணாநிதியான்னு பல பேருக்குக் குழப்பமா இருக்கு. கருணாநிதியோட மனசு வருத்தப்படற மாதிரி எதுவும் காங்கிரஸ் செய்துடக் கூடாது. உதாரணமா காமராஜர் ஆட்சியைப் பத்தி யாரும் பேசக் கூடாது... ஆனா கருணாநிதி மட்டும் காங்கிரஸோட மனசைக் காயப்படுத்தலாம். டெல்லி தலைமையோட நெருக்கம் வச்சுக்கிட்டு இங்கே தமிழ்நாட்டுல காங்கிரஸை ஆட்டிப்படைக்கறாரு கருணாநிதி. இதை

யெல்லாம் என்னால பொறுத்துக்க முடியாது."

இப்படி கூட்டணித் தலைவரை பகிரங்கமாகச் சாடுவது கண்ணாடி வீட்டிற்குள் கல் எறிவது போல் ஆகாதா?

கட்சித் தலைமைகிட்டதான் இருக்கு. நான் வாய்மூடி, மௌனியாக இருக்க முடியாது."

தேர்தல் சமயத்திலெல்லாம் 'ஜெயா காங்கிரஸ்' உருவாகும் என்கிற கருத்து உண்மையாகும் போல தெரிகிறதே?

"ஒரு விஷயம்... எனக்கு அ.தி.மு.க., தி.மு.க. ரெண்டுமே ஒண்ணுதான். இன்னும் சொல்லப்போனா கருணாநிதியை விட ஜெயலலிதா பெட்டர். சோனியாவைப் பத்தி முதல்ல தப்பா பேசின ஜெயலலிதா, பிறகு டெல்லில அத்தனை பேருக்கு முன்னால, 'நான் மனப் பக்குவம் அடைந்துவிட்டேன்'னு பெருந்தன்மையா சொன்னாங்க. ஆனா போஃபர்ஸ் ஊழல் விவகாரம் வந்தப்போ, பொம்மை பீரங்கியைச் செய்து ஊர்வலம் விட்டு காங்கிரஸைக் கேவலப்படுத்தின தி.மு.க.காரங்க, ராஜீவ் மேல எந்தத் தப்பும் இல்லன்னு தீர்ப்பு வந்த பிறகு, இதுவரைக்கும் எந்த வருத்தமும் தெரிவிக்கல. எல்லாம் போகட்டும். நான் என்ன கேட்கறேன்னா, காங்கிரஸ்ல இருக்கற ஒவ்வொரு தொண்டனும் சந்தோஷப்படற மாதிரி, கூட்டணியில காங்கிரஸுக்குத் தொண்ணூறு சீட் கொடுக்கணும். இல்லைன்னா வர்ற விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்."

கூட்டணி ஆட்சி குறித்து தொண்டர்களின் மனநிலை எப்படி உள்ளது?

"அந்த நினைப்பு தொண்டர்கள் மனசுல ரொம்ப உறுதியா இருக்கு. இன்னொரு விஷயம்... கூட்டணி ஜெயிச்சா யார் முதல்வரா வர்றதுங்கறதை கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் இணைந்துதான் முடிவு பண்ணணுமே தவிர, தனிப்பட்ட யாரும் முடிவு பண்ணி அறிவிக்கக்கூடாது.



படம்: **ராஜன்**

–தீப்பிடிக்கும் திண்டிவனம்!

"கூட்டணிக் கட்சிங்க ஒண்ணும் கூட்டணித் தலைவருக்கு அடிமை இல்லையே... எனக்கு யாரும் வாய்ப்பூட்டு போட முடியாது... காங்கிரஸ் தொண்டர்களோட உண்மையான உணர்வுகளைத்தான் நான் வெளிப்படுத்தறேன். அப்படி நான் பேசுறது கூட்டணியை பாதிக்குதுன்னா அதை சரி செய்யற பொறுப்பு

இப்படிப் பேசினால் நீங்கள் மேலிடத்துக்கு விளக்கம் தரவேண்டியிருக்குமே...?

"நான் கேட்கறேன்... இளங்கோவன் கூட்டணி ஆட்சியைப் பற்றி பேசினாரு, உடனே மேலிடம் விளக்கம் கேட்டது. அதோடு சரி. அப்புறம் அவர் மன்னிப்புக் கேட்டார்னு ஏதும் நியூஸ் வந்ததா? அதேபோல விநாயக மூர்த்திகிட்ட விளக்கம் கேட்டாங்க, அவரு தந்தாரா?"

- இரா. முத்துக்குமார்

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

“இலவசங்கள்



* திருவல்லிக்கேணிக்கு ஜே!

அதிகாலை சுப்ரபாதம்... இரவு பெருமாள் நகர்வலத்தின்போது கேட்கும் முரசொலி... மார்கழித் திருப்பாவை. இந்தச் சூழலை விட்டுவர மனமின்றி, கடந்த இருபது வருடங்களாக, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்குப் பக்கத்திலேயே குடியிருந்து வருகிறார் மனோன்மணி.

“மனசுல என்ன கஷ்டம் இருந்தாலும் இந்தக் கோயிலுக்குள்ள நுழைஞ்சிட்டா அப்படியே உருகிடும். அதே மாதிரி இந்த ஏரியா மக்களும் மென்மனசுக்காரங்க. எந்த வம்பு தும்புக்கும் போகமாட்டாங்க” என்று ஏரியா ராகம் பாடியவரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர் அவர் அம்மா புஷ்பம் நடராஜன் மற்றும் மகள் ரேவதாட்சாயிணி இருவரும்.

“எங்களுக்கு சேலம் மாவட்டம். விவசாயக் குடும்பம். ஹாஸ்பிடல் மேனேஜ்மெண்ட் படிச்சு 86-ல் திருமணம் முடித்து என் மகள் ரேவதி பிறந்த கையோடு சென்னைக்கு வந்தேன். உடனே அடையார் கேன்சர் இன்ஸ்டிடியூட்ல வேலை கிடைச்சது” என்றவரின் குரல் திடீரென்று கம்மியது. “பிஞ்சுக் குழந்தைகளெல்லாம் கேன்சர்னு சொல்லிட்டு அங்கே அட்மிட் ஆவாங்க. அதுங்களை அந்தக் கோலத்துல பார்க்கவே மனசு வராது. ஆனா அதுங்க அவ்வளவு சந்தோஷமா இருக்கும். தினமும் ஊசி போட்டாலும் சந்தோஷமா தாங்கிக்கும்ங்க. அதுங்களோட புன்னகையை ஆயுசுக்கும் மறக்க முடியாது” என்று சிலிர்த்தார்.

ரேவதாட்சாயிணி (ப்பா... எவ்ளோ பெரிய பேரு!) ‘நட்டுவாங்கம்’ நடனப் பிரிவில் ஆசிரியர் பயிற்சி எடுத்து வருகிறார். மகாபலிபுரத்தில் ‘சித்திரக் கூடம்’ என்றொரு நடனப் பள்ளியை நிறுவி, குழந்தைகள், வெளிநாட்டினருக்கு பரதம் பயிற்றுவிக்கிறார்.

“அம்மாவுக்கு சின்ன வயசுல பாட்டு, பரதம்னா இஷ்டம். ஆனா அவங்க வீட்ல பாட்டெல்லாம் கூடாதுன்னுட்டாங்க. அதனால என் விருப்பத்துக்கு முழு ஆதரவு தந்து ஊக்கப்படுத்தினாங்க. பரதத்தோடு கிராமிய நடனங்களும் கத்துக்கிட்டு பல மேடைகள்ல ஆடியிருக்கேன். கிராமியக் கலைகளை முன்னிறுத்தி ஜப்பான் மற்றும் தாய்லாந்துல



● சுயநலமாக்காதீங்க!

அவசியமில்லை!''

ஸ்டேஜ் ஷோக்கள் பண்ணியிருக்கேன். வெளிநாட்டுல நம்ம கலைகளைப் பொக்கிஷமா நினைக்கிறாங்க. நாமதான் மெல்ல மெல்ல மறந்துட்டு வர்றோம்'' என்ற ரேவதாட்சாயிணி,

"இன்னைக்கு நான் நடனம் சொல்லித் தர்றதைப் பார்த்து, நிறையப் பேர் என்கிட்ட 'என் பொண்ணுக்கு அலையன்ஸ் தேடிட்டு இருக்கோம். நீ ஒரு மாசம் சொல்லிக்கொடு போதும். கூடுதல் தகுதியா பரதமும் தெரியும்னு மாப்பிள்ளை வீட்ல சொல்லிடுவோம்'னு கூலா சொல்றாங்க. பரதம் மாதிரியான தெய்வீகக் கலையை இப்படியும் சிலர் சுயநலமாக்கறாங்க'' என்றார் படப் படப்போடு.

பேச்சு மீண்டும் திருவல்லிக்கேணி பக்கம் திரும்பியது. "மைலாப்பூரும் திருவல்லிக்கேணியும் இரட்டைச் சகோதரிகள் மாதிரி. ஆன்மிகம், கலை, பண்பாட்டுக்கு ரொம்பவும் மதிப்புத் தர்ற இடம். சென்னை மேற்கத்திய கலாசாரத்துக்கு மாறிட்டு இருக்குன்னு பேசறவங்க, இந்த ரெண்டு இடங்களுக்கும் வந்தா புரியும், நம்ம கலாசாரத்தை எப்படி இந்தப் பகுதி மக்கள் பாதுகாக்கறாங்கன்னு." என்று கன்னத்தில் குழி விழச் சிரித்தார் பாட்டி. அவர் கூடுதலாகச் சொன்ன இன்னொரு தகவல், ஒவ்வொரு சனிக்கிழமையும் திருவல்லிக்கேணி தெப்பக்குளத்தில் வளரும் கலைஞர்களின் கர்நாடகக் கச்சேரி நடக்கிறதாம்.

மனோன்மணியின் குடும்பத்தினர் மூன்று தலைமுறைகளாக கல்கி வாசித்து வருகிறார்கள். "தரமான பத்திரிகை கல்கி. இளைஞர்களை திசைதிருப்பாத, ஆபாசமில்லாத எழுத்துகள். நல்ல பத்திரிகைக்கு என்னைக்கும் இலவசங்களை வாரி வழங்கித்தான் விக்கணுங்கிற அவசியம் ஏற்படாது. கல்கி அதற்குச் சிறந்த உதாரணம்'' என்றார் மனோன்மணி உறுதியோடு.

- பப்பி

படங்கள் : ஸ்ரீஹரி

கிடுகிடுக்க வைத்த ரெய்டு...

கலைஞரிடம் புலம்பிய







வருமான வரித்துறையினர் கிடுக்கிப்பிடி போட்டு நடத்திய ரெய்டில் கதிகலங்கிப்போய் கிடக்கிறது கோடம்பாக்கம். கடந்த பதினைந்து வருடங்களில் இதுபோல ஒரு அதிரடிச் சோதனையை வருமான வரித்துறை மேற்கொண்டதில்லை. வருமான வரித்துறையின் புலனாய்வுப் பிரிவில் பணிபுரிபவர்கள் மட்டுமின்றி, இதர பிரிவுகளிலிருந்தும் அதிகாரிகளைத் திரட்டி, மொத்தம் 300 பேர் ரெய்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு இடத்துக்கும் செல்ல வேண்டிய குழுக்களுக்கு தரப்பட்ட சீல் வைத்த கவரின் உள்ளே இருந்த முகவரிகளில் ஏகப்பட்ட குளறுபடிகள். உதாரணமாக ஜெயம் ரவியின் வீடு கோடம்பாக்கம் வேதம்மாள் அவென்யுவில் உள்ளது. ஆனால் கவருக்குள் இருந்த முகவரியில் கோடம்பாக்கம் / வடபழனி என்று இருந்ததால், அட்ரஸ் தேடித் திண்டாடும்படி ஆகியிருக்கிறது.

விஜய் வீட்டில் ஏராளமான பணம் சிக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் பெரிதாய் ஒன்றும் சிக்கவில்லை. விஜயின் அப்பா எஸ்.ஏ.சந்திரசேகர், ரெய்டு ஆரம்பித்த சிறிது நேரத்தில் வீட்டுக்கு வெளியே கூடிவிட்ட பத்திரிகையாளர்களைப் பார்த்து டென்ஷனாகிப் போயிருக்கிறார். விஜயின் ஆபீஸுக்கு ரெய்டு போன டீமுக்கும் ஏமாற்றமே காத்திருந்திருக்கிறது. காரணம் அவர்கள் போய் இறங்கின அட்ரஸில் விஜயின் ஆபீஸ் இல்லை.

திரை உலகின் டாப் நட்சத்திரங்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள், தயாரிப்பாளர்கள், ஃபைனான்சியர்கள் என்று இருபது பேர் வீடுகளில் ரெய்டு நடத்தியும் பத்துப் பதினைந்து கோடிகளுக்கு மேல் சிக்கவில்லை என்பதுதான் உண்மை.

வேறு ஏதோ ஒரு கம்பெனி இருந்திருக்கிறது. கடைசியில் விஜயின் ஆபீஸ், அவர் வீட்டு மாடியிலேயே இருப்பது தெரிய வந்திருக்கிறது. "நான் வருஷத்துக்கு ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வருமான வரி கட்டுகிறேன். ஏமாற்ற நினைத்திருந்தால் இவ்வளவு வரி கட்டி இருக்கமாட்டேனே!"



தான் அழுகைக்குக் காரணம். அதிகாரிகளே 'போன மார்ச் மாதத்தில்தான் சொத்தை விற்றிருக்கிறீர்கள். எனவே இன்னும் டயம் இருக்கிறது. ஏதாவது கேபிடல் கெயின் பாண்டில் முதலீடு செய்து வரிவிலக்குப் பெற்றுக்கொள்ளுங்கள்' என அறிவுரை கூறினார்களாம்.



என்று சொன்னாராம் விஜய்.

சாலிகிராமத்தில் இருக்கும் விவேக் வீட்டில் எதிர்பார்த்ததுக்கும் மேலாகவே ரொக்கமாகப் பணம் சிக்கியதாகச் சொல்கிறார்கள். ஒரு பாடகர், ரெய்டுக்கு வந்த அதிகாரிகளைப் பார்த்து அழ ஆரம்பித்துவிட்டாராம். சுமார் அறுபது லட்சத்துக்கு விற்ற சொத்தை, முப்பது லட்சத்துக்கு விற்றதாகக் கணக்குக் காட்டியது அம்பலமானது



நட்சத்திரங்கள்!

பெரிய அளவில் பணம் சிக்கியது ஏ.ஆர்.ரஹ்மான் வீட்டில்தானாம். ரெய்டு பார்ட்டி ரஹ்மான் வீட்டுக் கதவைத் தட்டியபோது அவர் சென்னையில் இல்லை. அதிகாரிகள் காத்திருக்க நேரிட்டது. மும்பையில் இருந்த ரஹ்மானுக்கு தகவல் போய், அவர் ஃப்ளைட் பிடித்து சென்னை வந்து இறங்கியபோது, ஒரு ஸ்பெஷல் டீம் அவருக்காக ஏர்போர்ட்டில் காத்திருந்தது. நேரே அவர் வீட்டுக்குப் போனதும் விசாரணை நடந்திருக்கிறது. ஆறு கோடி ரூபாய் வரை வருமானத்தைக் குறைத்துக் காட்டியதை ரஹ்மான் ஒப்புக்கொண்டு, அதற்காக தொண்ணூறு லட்சம்வரை வரிகட்டச் சம்மதித்தாராம். இதுதான் இந்த ரெய்டில் கிடைத்த அதிகபட்ச கணக்கில் வராத பணம் என்கிறார்கள் வருமான வரித் துறையினர்.

“நீங்க எப்ப வேணும்னாலும் வருவீங்கன்னு நான் எதிர்பார்த்தேன். கொடுக்கல், வாங்கல் எல்லாமே செக்தான். எல்லாமே க்ளீனா இருக்கும். எதை வேணும்னாலும் செக் பண்ணிக்கலாம். உங்க வேலை அரை மணியில முடிஞ்சிடும்'' என்று சொல்லிவிட்டு ரொம்ப கூலாக இருந்தாராம் தயாரிப்பாளரான ஆஸ்கர் ஃபிலிம்ஸ் ரவிச்சந்திரன். இங்கேயும் ரெய்டு புஸ்வாணம்தான்.

“எங்கள் டீலிங்ஸ் எல்லாமே செக் அல்லது கிரெடிட் கார்டுதான். கரெக்டா டாக்ஸ் கட்டிடுவோம்.'' என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டாராம் த்ரிஷாவின் அம்மா. ஒண்ணும் தேறாமல் திரும்பும்படி ஆகிவிட்டதால், த்ரிஷா வீட்டுக்குப் போனவர்கள் ரொம்பவே நொந்து போனார்களாம்.

ஒரு ஃபைனான்சியர் ஆபீசுக்கு ரெய்டு போன டீம், விசாரணையில் அந்த ஃபைனான்சியரின் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது எனத் தெரிந்ததும் அங்கேயும் போய் ரெய்டு பண்ண விரும்பியிருக்கிறார்கள். ஆனால் சரியான அட்ரஸ் இல்லை. ஒரு வழியாக அட்ரஸ் கண்டுபிடித்தபின், அங்கே போய் சோதனை நடத்த வாரண்ட் இல்லை. உடனே தங்கள் தலைமையகத்துக்கு போன் போட்டு வாரண்ட் ரெடி செய்து வரவழைத்த பின்பே அங்கு ரெய்டு நடத்தியிருக்கிறார்கள்.

அமைச்சர் நயினார் நாகேந்திரன் செல்போனின் ரிங்டோன் 'காலையில் தினமும் கண் விழித்தால் நான் கைதொழும் தேவதை அம்மா'தான். தமது சக அமைச்சர்களுக்கும் இந்த ரிங்டோனை அனுப்பி வைக்கிறாராம்.


அ.தி.மு.க

நார்த் போக் ரோடில் ஸ்நேகாவின் ஃப்ளாட்டுக்குப் போனபோது அவர் இல்லை. ஹைதராபாத்தில் இருந்தவருக்குத் தகவல் போனது. அவர் ஃபிளைட் பிடித்து வருவதற்கு இரவு ஏழு மணியாகிவிட்டது. அதுவரை பெரிதாய்த் தேடும் படலம் நடக்கவில்லை. அவர் தலையைக் கண்ட பின் ஆரம்பித்த தேடுதலின் இறுதியில், எடுத்தவைகளை அவர் வீட்டிலேயே ஒரு பீரோவில்போட்டு சீல் வைத்துவிட்டுப் புறப்பட்டிருக்கின்றனர்.

ஹாரிஸ் ஜெயராஜ் வீடு கே.கே. நகரில் உள்ளது. அங்கேயும் சில டாகுமென்ட்ஸ், கொஞ்சம் பணம், இன்னபிறவற்றை ஒரு பீரோவில் வைத்து சீல் வைத்திருக்கின்றனர். காரணம் ஹாரிஸ் ஜெயராஜ் ஊரில் இல்லை. 'வேட்டையாடு விளையாடு' படத்துக்காக அமெரிக்கா போயிருக்கிறார். வந்தபின் விசாரணை நடத்தப் போகிறார்கள்.

இன்னொரு சுவையான குழப்பம் இளையராஜா வீட்டில் நடந்திருக்கிறது. இளையராஜாவும் மகன் யுவன்சங்கர் ராஜாவும் ஒரே வீட்டில் வசிக்கிறார்கள் என்கிற விஷயமே வருமான வரித்துறையினருக்குத் தெரிந்திருக்கவில்லை. யுவனுக்காக சோதனை நடந்து கொண்டிருந்த சமயம், ரிக்கார்டிங்கை முடித்துவிட்டு இளையராஜா வீடு திரும்ப, அதிகாரிகளுக்கு இனிய ஷாக். பிறகு அவரையும் விசாரித்திருக்கிறார்கள்.

ஆனால் வருமானவரித் துறையினரது குறி டி.ராஜேந்தர்தான். சிம்பு அல்ல. டி.ஆரின் மகன் என்ற முறையில்தான் சிம்புவை விசாரித்திருக்கிறார்களேயொழிய, சினிமா ஹீரோ என்பதற்காக அல்ல. அதிகாரிகளுக்கு டி.ஆர்.பாணி அடுக்கு மொழி வசனம் கிடைத்தது போனஸ்.

“சில நட்சத்திரங்கள், ரெய்டுக்கு வந்தவுடன், கலைஞருக்கு போன் பண்ணிப் புலம்பி இருக்கிறார்கள். அவர் மத்திய அமைச்சர் பழனிமாணிக்கத்திடம் விசாரித்திருக்கிறார். அவரோ ரெய்டு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. தன்னால் ஒன்றும் செய்யவும் முடியாது என்று சொல்லிவிட்டார்'' என்று ரகசியமாக காலரைத் தூக்கிவிட்டுக் கொள்கிறார்கள் வருமான வரித்துறையினர்.

- நமது நிருபர்

படங்கள் : ஸ்ரீஹரி, பப்பி

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

Old No. 102, New No. 138, USMAN ROAD,

T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

P.R. ஜுவெல்லரி தனது **20**-வது ஆண்டு விழாவை 22.10.2005 அன்று ஆனந்தமாகக் கொண்டாடுகிறது. வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றி. வாழ்க்கையில் அனைவரும் ஆனந்த மாக இருப்பதற்கு அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் முழுமுதற் கடவுள் ஆனந்த நர்த்தன வினாயகரை **40** கலைஞர்களை வைத்து **42** மாதங்களில் **890** KG எடையில் செய்து முடித்துள்ளோம்.

உலகிலேயே மிகப் பெரியது உயரம் **192** செ.மீ., அகலம் **115** செ.மீ., நீளம் **95** செ.மீ., சிற்ப சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டது. கண்காட்சிக்காக எங்கள் கடையில் 22.10.2005 முதல் வைக்கப்படும். அனைவரும் ஆனந்த நர்த்தன வினாயகரைத் தரிசித்து ஆனந்தமாக இருக்க வேண்டுகிறோம்.

ஆனந்தமாக நடனமாடும் ஆனந்த நர்த்தன வினாயகரை தினந்தோறும் வழிபட்டு தினசரி வேலைகளைத் தொடங்கினால் நாள் முழுவதும் ஆனந்தமாக இருக்கலாம்.

ஒவ்வொருத்தர் வீட்டிலும் இருக்க வேண்டிய படம்
ரூபாய் 20/- தபாலில் பெற ரூபாய் 30/- M.O. அனுப்பவும்.
விற்பனைக்காக ரூபாய் 10/- முதல் 10,000/-ம் வரை
108 மாடலில் வினாயகர் வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம்
தங்கத்தில் 2 கிராம் முதல் 8 கிராம் வரை
ரூ. 2300/- முதல் ரூ. 5000/- வரை உடனடியாகக் கிடைக்கும்.

முகவரி தெளிவாக எழுதவும்.

எமது சிறப்புப் பேட்டியை விஜய் டீ.வி.யில் வியாழன்தோறும் காலை 9.30 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

போட்டுத் தாக்கு!

ஜிபா -

ஏ.ஆர்.ரஹ்மானிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள் :



1 'அந்நியன்' ஹேர்ஸ்டைல் மாடலா இருந்ததுக்கு ஷங்கர்ஜிகிட்ட எவ்ளோ வாங்குனீங்க?

2 உங்க அம்மாவை எப்பவும் 'ஹம்மா'ன்னுதானே கூப்பிடுவீங்க?

3 உங்களுக்குப் பிடிச்ச நம்பர் 786, பிடிக்காத நம்பர் 6ங்கறாங்களே உண்மையா?

4 'ஜூ'வுக்குப் போனா 'வரி' குதிரையை மட்டும் பார்க்கமாட்டேன்னு புதுசா அடம்பிடிக்குறீங்களாமே?

5 'சிவாஜி'க்கு ட்யூன் போட்டப்போ 'பாபாஜி' ஞாபகத்துல வந்து ஏதாச்சும் சொன்னாரா?

6 பார்க்கறவங்ககிட்ட எல்லாம் 'ப.சிதம்பரம் உங்க நண்பரா'ன்னு நீங்க விசாரிக்கறதா பேசிக்குறாங்களே...?

7 எங்க ஊரு 'மௌன சாமியார்' ஒருத்தருக்கு நீங்கதான் ரோல் மாடலாமே...?

8 அமெரிக்காலேர்ந்து ஒரு புது ஆடியோ சி.டி. வந்திருக்கு... வேணுமா?

9 என்ன ஷாம்பு போட்டு குளிக்கறீங்க... ரெக்கமண்ட் ப்ளீஸ்...?

10 நீங்க 'வந்தே மாதரம்' மியூசிக் போட்டது விகுவோட அரட்டை அரங்கத்துக்குத்தானே?



வி.ஐ.பி. வீட்டுத் திருடர்கள்!

சமீபத்தில் சென்னையில் காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் வீட்டில், திருடன் பூட்டை உடைத்து உள்ளே புகுந்த செய்தி பரபரப்பூட்டியது. 'ஆளுங்கட்சி, வேவு பார்ப்பதற்காக ரகசிய மைக்கை என் வீட்டில் பொருத்தவே இப்படிச் செய்திருப்பார்கள்' என்று காரசாரமாக அறிக்கை விட்டார் எஸ்.ஆர்.பி.

போலீஸ் வந்து, வீட்டுக்குள் பதிந்திருந்த கைரேகைகளை எடுத்துக் கொண்டு போய், பழைய கிரிமினல்களின் கைரேகைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கமாய், குற்றம் நடந்த வீட்டில் இருந்தவர்களின் கைரேகைகளையும் எடுத்துச் செலவது போலீசின் வழக்கம். அதற்கு எஸ்.ஆர்.பி. ஒத்துழைக்க மறுத்து விட்டார். மொத்தத்தில் இந்தத் திருட்டுக்கு அரசியல் பின்னணி உண்டா? இல்லை இதற்கு அரசியல் சாயம் பூசப்படுகிறதா என்று தனி விசாரணையே நடத்தலாம்.



அவ்வப்போது இப்படி வி.ஐ.பிகளின் வீடுகளில் நடைபெறும் திருட்டுகள், மீடியாவின் பரபரப்பு பசிக்குத் தீனி போடும். கொஞ்ச நாட்களுக்குப் பின் மக்கள் மட்டுமல்ல, போலீஸே கூட அதை மறந்துவிடுவார்கள்.



சில வருடங்களுக்கு முன்



• எஸ்.ஆர்.பி




• அலெக்சாண்டர்

ரஜினிகாந்த் வீட்டில் ஒரு திருடன் புகுந்து விட்டான். நகை, பணம் எல்லாம் பறிபோனது. சுமார் ஒரு வருடம் கழித்து, அதிகாலை நேரத்தில் தேனாம்பேட்டை பகுதியில் சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை போலீசார் எதேச்சையாய் மடக்கி விசாரித்தனர். அவர்களில் ஒருவன் ரஜினி வீட்டில் திருடியதை ஒப்புக்கொண்டான். அவன் கொடுத்த வாக்குமூலத்தில், 'எனக்கு அது ரஜினி வீடு என்பது தெரியாது. திருட உள்ளே புகுந்த பின், வீட்டுக்குள்ளே இருந்த ரஜினி படங்கள், ஷீல்டுகளை வைத்து ரஜினி வீடு என்று தெரிந்துகொண்டேன். மறுநாள் பேப்பரில் 'ரஜினி வீட்டில் திருட்டு' என்று போட்டிருந்தது' என்று குறிப்பிட்டான்.

எம்.ஜி.ஆர். முதல் முறை முதலமைச்சரானபோது, ஒரு திருடன் கோட்டையில் அவரது அறைக்குள் புகுந்து ஃபைல்களைப் புரட்டி எடுத்துப் போட்டுவிட்டுப் போனான் என்பதில் எம்.ஜி.ஆருக்கே அதிர்ச்சி. கோட்டையின் பாதுகாப்பை பலப்படுத்திவிட்டு, ரகசியமாக கைரேகை நிபுணர்களை வரவழைத்தார் எம்.ஜி.ஆர். அங்கே கிடைத்த கைரேகை, எந்த கிரிமினலின் ரேகையோடும் ஒத்துப் போகவில்லையாம்.

அவ்வளவு ஏன்? தற்போதைய முதல்வர் ஜெயலலிதாவின் பையனூர் பங்களாவுக்குள்ளேயே யாரோ ஒருவன் புகுந்து நிறைய சுருட்டிக்கொண்டு போய் விட்டான். முதல்வர் வீட்டிலேயே திருட்டா? போலீசுக்கு அவமானம் தாங்கவில்லை. எவ்வளவோ முயற்சித்தும் திருடன் அகப்படவில்லை.



ஆனால், மேற்கூறிய இரண்டு கேஸ்களிலும் மேலிடத்தைத் திருப்தி செய்ய சம்பந்தமில்லாத இரண்டு பேரை கைது செய்து, கேஸை க்ளோஸ் பண்ணிவிட்டதாகவும் காக்கி வட்டாரத்தில் ஒரு தகவல்.

சில வருடங்களுக்கு முன் குஷ்பு வீட்டில் திருடன் புகுந்து விட்டான். ஆனால் அவரோ போலீசில் எழுத்து மூலம் புகார் தராமல், ''அன்அபிஷியலாக வந்து பாருங்கள். திருடனைக் கண்டுபிடியுங்கள்'' என்று சொல்லி விட்டாராம். போலீஸ், கேஸை கிடப்பில் போட்டு விட்டது.

இப்போதைய தமிழக டி.ஜி.பி அலெக்சாண்டர் வீட்டிலேயே ஒரே திருடன் மூன்று முறை திருட வந்த கதையை நீங்கள் அறிவீர்களா? முதல் இரண்டு தடவையும் திருட முயன்றிருக்கிறான். முடியவில்லை. மூன்றாம் தடவையில் நகை, பணம் என்று கணிசமாகத் திருடிவிட்டான்.


அப்போது அலெக்சாண்டர் கூடுதல் டி.ஜி.பி என்பதால், போலீஸ் இந்த கேஸை பிரஸ்டீஜாக எடுத்துக்கொண்டு விசாரித்தது. திருடனையும் பிடித்து விட்டது.

அப்புறம்தான் ஆன்ட்டி க்ளைமேக்ஸ்.

திருடனைப் பார்க்க விரும்பினார் அலெக்சாண்டர். அழைத்து வந்தார்கள். வறுமைதான் தன்னைத் திருடத் தூண்டியது என்று அவன் சொன்னவுடன், மனிதாபிமானத்துடன் அட்வைஸ் பண்ணி அவனுக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அவனுடைய பிள்ளைகளின் படிப்புக்கும் உதவினார். அவன் சொன்னான், 'ஐயா! இது போலீஸ் ஆபீசர் வீடு என்று சத்தியமாய் எனக்குத் தெரியாது! தெரிந்திருந்தால், இந்தப் பக்கமே வந்திருக்க மாட்டேன்.'

- கௌதம்ராம்


வாசகர்களின் எண்ணிக்கை
அதிகரித்த
ஒரே தமிழ் நாளிதழ்
தினமணி
செய்தியில் முழுமை; சொல்வதில் புதுமை!
அதிக வாசகர்கள்
படித்த
இணைப்புகள்
இளைஞர்மணி,
வெள்ளிமணி
Source: NRS 2005



விஜயகாந்த் பேசுகிறேன்! 3

படிப்பு விஷயத்துல எங்கப்பாவுக்கு ஒரு மனக்குறை இருந்தது. எங்க சொந்த பந்தத்துல யாரும் அதிகம் படிக்கலைங்கற ஆதங்கம்தான் அது. அவர் மனக்குறையைப் போக்குற மாதிரி எங்க குடும்பத்துல பட்டதாரிகள் உருவாகணும்னு ஆசைப்பட்டார். படிப்புக்கு எவ்வளவு செலவானாலும் கவலையில்லேன்னு ரொம்பப் பாடுபட்டு எங்களைப் படிக்க வைத்தார்.

எங்க குடும்பத்துல நல்லா படிச்ச டாக்டர் ஆனவர் விஜயலட்சுமி அக்காதான். குலப்பெருமையை உசத்திய அக்கா மேல அப்பாவுக்கு அன்பு ஜாஸ்தி. துரைராஜ்ங்கற டாக்டர் மாப்பிள்ளையா பார்த்து அக்காவுக்குக் கட்டி வெச்சார்.

தங்கை திருமலாதேவியும் படிப்புல, குடும்பத்தை கவனிச்சுக்கிறதுல கெட்டிக்காரி. பி.ஏ.,பி.எல். படிச்சுருக்கு. அதுக்குத் தகுந்த மாதிரியே ஒரு வக்கீல் மாப்பிள்ளை (முத்துராமன்)யை மணம் முடித்து வைத்தார் அப்பா.

சிலர் தங்களோட பெயரோடு அவங்களோட பரம்பரை பெயரை சேர்த்திருப்பாங்க. ஆனா எங்க குடும்பத்தை பார்த்தீங்கன்னா, எல்லாருடைய பெயர்லயும் 'ராஜ்' இருக்கும். அண்ணன் நாகராஜ், தம்பிகள் பால்ராஜ், ராமராஜ், பிருத்விராஜ்னு வரும்.

எனக்கு மூணு பேரு இருக்கு. விஜயராஜ், விஜயகாந்த் பேரை உங்களுக்கு ஏற்கெனவே தெரியும். ஆனா எனக்கு பெற்றோர் வைத்த பெயர் என்ன தெரியுமா? எனது தாத்தாவின் (அப்பாவின் அப்பா) பெயரான 'நாராயணசாமி' என்பதுதான் எனக்கு பெற்றோர் வைச்சது.

தாத்தா பெயர்ங்கறதாலயும், அப்பாவோட அப்பா பெயர்ங்கறதாலயும் அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிடுறது மரியாதையா இருக்காதுங்கறதால என்னை 'விஜயராஜ்'னே கூப்பிட்டு வந்தாங்க. அதேபோல தங்கை திருமலாதேவியின் பெயரும் என் அம்மாவோட அம்மா பெயர்தான்.

அன்பு,

சரி, நம்ம மேட்டருக்கு வருவோம். அப்பாவின் அதட்டல், மிரட்டலுக்கு முன்னால் என்னோட எஸ்கேப் ஐடியா அம்போவாகிவிட்டது. எங்க குடும்பத்துல எல்லாரும் அப்பாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்துக்குவோம். காரணம் மரியாதை, பயம் ரெண்டும்தான். அதே நேரத்துல ரொம்பப் பாசமானவரும் கூட. 'அன்பும் பண்பும் நிறைஞ்சிருந்தா நிச்சயம் நல்ல வாழ்வு கிடைக்கும் நம்பு'ன்னு அவர் அடிக்கடி எங்ககிட்ட சொல்லுவாரு.

அந்தக் காலத்துல ப்ரீகேஜி, எல்.கே.ஜி., யூ.கே.ஜி போன்ற குழந்தைகளுக்கான வகுப்புகள் கான்வென்ட்களில் அறிமுகமாகல. அப்படி இருந்திருந்தா சின்ன வயசுலேயே என்னையும் அங்கே கொண்டு போய் விட்டிருப்பாங்க. காரணம், அந்த வயசுலேயே அவ்வளவு சேட்டை.

புது டவுசர், புது சட்டை போட்டாங்க. கழுத்தில் புது ரோஜா பூமாலை அணிவிச்சாங்க. மதுரையின் அன்னைய கால்டாக்சியான ரிக்ஷாவுல என்னை உட்கார வெச்சு, ஒரு மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் மாதிரி மேளதாளத்தோடு நடத்தாங்க.

அப்பாவும் குடும்பப் பெரியவங்களும் ரிக்ஷா முன்னால் நடக்க,



பண்பு, நம்பு!

சின்னம்மா, அக்கான்னு எங்க வீட்டுப் பெண்கள் தேங்காய், பூ, பழம், தட்டோட பின்னாடி வந்தாங்க.

எங்க வீடு மேலமாசி வீதியில். அங்கிருந்து திண்டுக்கல் ரோடு வழியா மதுரை டவுன் ஹால் ரோட்டில் இருக்கும் ரோஸ்ரி சர்ச் கான்வெண்ட்டுக்கு ஊர்வலமா என்னை அழைச்சுட்டுப் போனாங்க. தெருவில் போவோர் வருவோர் எல்லாம் என்னைப் பார்த்து 'யார் அது...?'ன்னு கேட்க,

'ரைஸ் மில்காரர் அழகர்சாமி மகன் ஸ்கூலுக்கு போறானாம்...'னு கேலியா பேசிக்கிட்டாங்க.

மாதா கோயில் முன் ரிக்ஷா நின்றதும் கான்வெண்ட்டுக்குள் என்னை அழைத்துப் போய் விட்டுட்டுப் போனாங்க. அன்னைக்கி என் படிப்பும் சேட்டையும் ஆரம்பமாச்சு!

மூதறிஞர் ராஜாஜி, படிக்கிற காலத்தில் நதிக்குப் போய் மணல்பாங்கான பகுதிகளில் கோலி ஆடுவாராம், நதியோரமிருந்த புளிய மரத்தில் புளியம் பழம் பறித்துச் சாப்பிடுவாராம்...

இன்னைக்கு பிரபலமாயிருக்கும் பாடகர் யேசுதாஸ், சிறுவயதில் பள்ளிக்குப் போகும் வழியில் இருக்கும் டீக்கடையில் வானொலி பாட்டு கேட்டால் அப்படியே நின்னுடுவாராம். இதனாலேயே பல நாள் ஸ்கூலுக்கு லேட்டா போய் அடி வாங்கியிருக்கிறாராம். ஆனாலும் பாட்டு கேட்கறதை அவர் விடலையாம்.

இப்படி பாட்டு கேட்கும், திருப்பிப் பாடும் ஆர்வத்தினாலேயே யேசுதாஸ் பரீட்சையில்



• அன்புப் பெற்றோர்...

சுமாராத்தான் மார்க் வாங்குவாராம். ஆனாலும் அவருடைய பாடும் ஆற்றலுக்கு ஸ்கூலில் நல்ல பெயர் இருந்த தாம்.

வங்காளத்தின் மிகப்பெரிய எழுத்தாளர் சரத் சந்திரர் (தேவதாஸ் பட கதாசிரியர்), தன்னோட பள்ளி வாழ்வில் ரொம்ப சேட்டை செய்தவராம். அவரது வகுப்பு ஆசிரியர், வகுப்பிலேயே ஹுக்கா புகைச்சிருக்கார். ஒரு நாள் அவரில்லாதபோது ஹுக்காவிலிருந்த புகையிலையை எடுத்துட்டு, அதில் செங்கல் தூளைப் போட்டு வைத்துவிட்டார் சரத் சந்திரர். வகுப்புக்கு வந்த பண்டிதர், ஹுக்காவுக்குள் நெருப்புத் துண்டு போட்டு குழாயில் வாய் வைத்து உறிஞ்சியிருக்கார். பல தடவை இழுத்தும் புகை வரலை. அப்புறம்தான் விஷயம் தெரிந்தது. 'இந்த போக்கிரித்தனம் செஞ்சது யாரு?'ன்னு கோபமாகக் கத்தினார். ஒரு மாணவன் சரத்சந்திரரை காட்டி விட்டான். அவ்வளவுதான்! பண்டிதர் கோபமாய் பிரம்பெடுத்துக் கொண்டுவர, சரத் எழுந்து ஓட்டமெடுத்தாராம்!

பட்டம் விடுவது, பம்பரம் விடுவது, கோலி குண்டு விளையாடுவது இதிலெல்லாம் சரத் சந்திரர் பெரிய கில்லாடியா இருந்தாராம். நிறைய பேரோட பள்ளி வாழ்க்கை இப்படி சேட்டை நிறைஞ்சதா இருந்திருக்கு. இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்ல காரணமில்லாம இல்ல.

என்னோட ஸ்கூல் வாழ்க்கை





• இளவயதுக் குறும்புகள்..!

யிலேயும் இப்படி நிறைய குறும்புத் தனங்கள் இருக்கு. அம்புட்டும் உங்க கிட்டே சொல்லத்தான் போறேன்.

ரோஸரி சர்ச் கான்வென்ட்ல சேர்த்த கொஞ்ச நாள்ல என் கவனம் விளையாட்டுக்குப் போனது. ஸ்கூலுக்கு வரும் வழியிலேயே, ஒரு முட்டு சந்துக்குப் போய் விளையாடுறது என் வாத்தியார் கண்ணில் பட்டுடுச்சு. அவர் கூப்பிட்டு முதல் எச்சரிக்கை விட்டார். அப்பவும் நான் கேட்கலை. அப்புறமென்ன, விஷயம் அப்பா காதுக்குப் போனது. அப்பா கோபமாய் வந்தார். தீப்பிடிச்ச மாதிரி இருந்த அவரைப் பார்க்கறதுக்கு பயமாய் இருந்துச்சு. என்ன நடந்திருக்கும்னு உங்களால யூகிக்க முடியுதா? யோசிச்சு வைங்க.

(பேசலாம்)

படங்கள்: **சஜோ**

விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி!

"என் குடும்பத்தில் ஒருவர்..."

1980-ம் ஆண்டு நான் விஜயகாந்தை சந்தித்தேன். 'சட்டம் ஒரு இருட்டறை' என்ற எனது படத்துக்கு ஹீரோவைத் தேடிக் கொண்டிருந்தபோது. ஒரு நண்பர் அவரை அழைத்துக்கொண்டு வந்தார்.

'இவர்தான் விஜயகாந்த்' என்று அறிமுகப்படுத்தினார். அந்தப் பெயரைக் கேட்டதும் எனக்கு அவரிடம் ஓர் ஈடுபாடு ஏற்பட்டது!

என்னுடைய ஊர் ராமநாதபுரம். நான் படித்தது மதுரையில். விஜயகாந்தின் சொந்த ஊர் மதுரை என்று கேள்விப் பட்டபோது அந்த ஈடுபாடு அதிகமானது. இது ஒவ்வொரு மனிதனிடமும் இயற்கையாக ஏற்படுகிற உணர்வு.

'சட்டம் ஒரு இருட்டறை' படத்தில் முதல் நாள் அவர் என்னிடம் எப்படிப்பட்ட மரியாதையோடு நடந்து கொண்டாரோ, அதே மரியாதையோடுதான் இப்போதும் நடந்து கொள்கிறார்.

எத்தனையோ டைரக்டர்கள் அவரது படத்தை இயக்கி இருந்தாலும், 'என்னுடைய டைரக்டர்' என்று என்னைத்தான் சொல்கிறார் விஜயகாந்த். அதே மாதிரி எத்தனையோ நடிகர்களை இயக்கி இருந்தாலும் 'என்னுடைய ஹீரோ' என்று நான் விஜயகாந்தைத்தான் சொல்கிறேன். இதற்கெல்லாம் மூல காரணம், அவர் பெயரும் என்னுடைய மகன் பெயரும் ஒன்றாக இருப்பது தான்.

நான் அவரிடம் ஒரு டைரக்டர் என்ற முறையில் பழகியதில்லை. நினைத்திருந்தால் அந்த உறவு, அந்தப் படம் முடிந்த உடனே விட்டுப் போயிருக்கும்! அவரை என் குடும்பத்தில் ஒருவராகவே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

- எஸ்.ஏ.சந்திரசேகரன்

பச்சியப்பன் கவிதைகள்

இடப்பெயர்ச்சி

- மரந்தோறும்
உலுக்கிய கையை
எது தடுக்கிறது,
நகரத் தெருவில்
உதிர்ந்து கிடக்கும்
நாவல் பழத்தை
குனிந்து பொறுக்க...

- வேனில் வந்திறங்கும்
வெள்ளாட்டின் அடிவயிற்றில்
உதிராமல் இருக்கிறது
கொத்துக் கொத்தாய்
நாயுருவி

- நீச்சல் பழக்கிய
கிணறு விற்று
படிக்க வைத்தார் அப்பா
பாத்ரூமில் குளிக்கும்
பாழாய்ப்போன வாழ்வுக்காக


- இந்தக் கட்டடக் காட்டில்
நிறையவே இருக்கிறது
மா, கொய்யா மரங்கள்
ஒரு கிளையிலும்
காணக் கிடைக்கவில்லை
ஆசையாய்க் கொத்தும்
கிளியை

- எவர் மரணம்
என்றாலும்
இடுகாடு வரை
போன பழக்கம்,
இத்தனை நெரிசலிலும்
ஜன்னல் வழியே
எட்டிப் பார்க்க
கிடந்து தவிக்கிறது

- குலை தள்ளாமல்
குருவி வந்து கூடு கட்டாமல்
அனாதை போல நிற்கிறது
மாளிகை முன்
அந்த ஈச்சமரம்

- ஒவ்வொரு முறை
ஊருக்குப் போகும்போதும்
யாரேனும் ஒருவர்
இறந்திருக்கிறார் அல்லது
ஏதேனும் ஒரு வீடு
காலியாய் இருக்கிறது

ஓவியம்: அனந்தபத்மநாபன்




தண்ணி தெளிச்சு

"நம்ம வீட்டு டாமி, எதிர்வீட்டு கிழவியைக் கடிச்சுதே, அவுங்க எதுவும் சொல்லலையா சரசு?"

"ஏன் சொல்லலை? இப்பத்தான் அந்தக் கிழவியோட மருமக வந்து நன்றி சொல்லிட்டுப் போறா!"

- சீர்காழி வி.ரேவதி





"உங்க வீட்டு வேலைக்காரன் எந்த வேலை சொன்னாலும் கொஞ்சம்கூட சலிச்சுக்காம, சுறுசுறுப்பா செய்யறார். ஆள் ஸ்மார்ட்டா வேற இருக்கார். சம்பளம் எவ்வளவு குடுக்கறே...?"

"சம்பளம் இல்லை... வரதட்சணைதான் குடுத்தேன்..."

- கே.ஆனந்தன்


"நான் எது செஞ்சாலும் என் மனைவி குறுக்கே நிக்கறா!"

"கார் ஓட்டிப் பாரேன்!"

- அம்பை தேவா



சிரிங்க!



''என்னய்யா இது, புதுசா உங்க மனைவி டி.வி. ஸ்க்ரீன் மேல தண்ணி தெளிக்கிறாங்க!''

''பின்னே... அடுத்து 'கோலங்கள்' சீரியல் போடப் போறாங்களே!''


- கோ.இராஜமோகன், ம.உத்தமசோழகன்



''உங்க 'மோசம்' படத் தயாரிப்பாளர்கிட்ட மட்டும் நீங்க சம்பள பாக்கியே கேட்கறதில்லையாமே... ஏன்?''

''அவர் என்னோட மாஜி கணவர். ஜீவனாம்சத்துல கழிச்சுக்குறேன்!''

- அம்பை தேவா



''முதலிரவும் அதுவுமா, எதுக்கு அனாவசியமா டைவர்ஸ் பத்திப் பேசறீங்க?''

''நீதானே நடந்ததை எல்லாம் மறந்துட்டு நடக்கப் போறதைப் பத்தி பேசுவோம்னு சொன்ன!''

- என். உஷாதேவி

சதாம் உசேன் தனது முள் தாடியை மதிக்கிற அளவுக்குக்கூட அமெரிக்காவையும் பாக்தாத் நீதிமன்றத்தையும் மதித்ததாகத் தெரியவில்லை. 'நான் இன்னமும் ஈராக்கின் அதிபர்தான். இந்த நீதிமன்றத்தை நான் அங்கீகரிக்கவில்லை' என்று உறுமியிருக்கிறார். கடைசி வரைக்கும் தனது பெயரைக்கூட அறிவிக்கவில்லை.

சதாம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பல. இப்போதைக்கு ஈராக் எடுத்துக்கொண்டுள்ளது துஜெயில் எனும் ஷியா முஸ்லிம் இன மக்கள் வாழும் நகரத்தை, சதாம், ஈராக் வரைபடத்திலிருந்து ரப்பர் வைத்து அழித்ததாகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மட்டுமே. அழித்ததற்குக் காரணம் 1982-ல் சதாமை கொல்ல துஜெயில் கலகக்காரர்கள் முயற்சி செய்தனர். ருக்கிறார்களே அவர்கள்தான்!

இவை தவிர சதாம் மீது வேறு சில குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஹலப்ஜா எனும் குர்தீஷ் நகரத்தில் 1988-ல் விஷவாயுவை பரவவிட்டு ஷியா முஸ்லிம்களைக் கொன்றிருக்கிறார். 1990-ல் குவைத்தை ஆக்ரமித்திருக்கிறார். 1980 - 88-ல் ஈரானோடு சண்டைபோட்டிருக்கிறார். உண்மையில் துஜெயிலைவிட இவை பெரிய குற்றங்கள்தான் என்றாலும் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து காலை ஆட்டியபடி இவற்றையெல்லாம் நிரூபிப்பது சிரமமானது என்பதால் இப்போதைக்கு துஜெயில் மட்டும்தான். யுகோஸ்லாவியாவின் போர் குற்றங்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்கு 7 ஆண்டுகள் தேவைப்பட்டன. அத்தனை காலம் சதாமை விட்டு வைத்தால், அவரது தாடி தரை வரைக்கும் வளர்ந்துவிடும் அல்லவா?

எல்லாம் சரிதான். ஆனால் சதாமை

தரை வரை தாடி!

அதனால் கோபமடைந்த சதாம், தனது படைகளை உடனடியாக அனுப்பி துஜெயில் வாசிகளை சித்ரவதைகளுக்கு உட்படுத்தினார். பல அப்பாவிகளைச் சிறையில் தள்ளினார். 143 ஆட்களை அபுகாரிப்புக்கு அழைத்துச் சென்று கொன்றிருக்கிறார். இவற்றையெல்லாம் கண்டுபிடித்திருப்பது யார்? எதையோ தேடிக்கொண்டு ஈராக்கிற்கு போய் எதையெதையோ செய்து கொண்டி



ஏன் பாக்தாத்திற்கு அழைத்து வந்தார்கள், சர்வதேச நீதிமன்றத்தில் விசாரித்திருக்கலாமே என்று கேட்டால், அது சாத்தியமில்லை என்கிறார்கள். காரணம், சர்வதேச நீதிமன்றம் தொடங்கப்பட்டது 2002-ல்தான் என்பதால், 2002-க்குப் பிறகு நிகழ்த்தப்பட்டிருக்கும் குற்றங்களை மட்டுமே அது எடுத்துக்கொள்ளுமாம். சரி, அப்படியானால் அமெரிக்கா நிகழ்த்தியுள்ள ஈராக் ஆக்கிரமிப்பு மற்றும் அபுகாரிப் அக்கிரமங்களை சர்வதேச நீதிமன்றம்

உலகம் இவ்வளவுதான்!

விசாரிக்குமா? இவை, 2002-க்கு பிறகு நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் தானே? அப்படி ஒரு வேளை அவர்களால் இயலாத பட்சத்தில் வாஷிங்டனில் வெள்ளை மாளிகைக்குப் பின்னால் (அல்லது முன்னால்) கூடாரம் அமைத்து சிறப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்தலாமே...

குறுந்தாடி மட்டும் வளர்ந்து விட்டால் பிறகு புஷ் சதாமைவிட நன்றாகவே இருப்பார்.



சதாம் விவகாரத்தால் சீனாவின் சமீபத்திய சாதனை பின்னுக்குப் போய்விட்டது. ஃபீ ஜூன்லாங் மற்றும் நீஹைஹெஷெங் இருவரும் ஷென்ஜோ 6 எனும் விண் வெளி வாகனத்தில் ஏறி விண் வெளியை தொட்டுவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள். வழியில் எதுவும் கிடைக்காது என்பதால் புறப்படும்பொழுதே கையோடு 50 வகை உணவு வகைகளைப் பொட்டலம் கட்டி எடுத்துப் போயிருக்கின்றனர்.

தினமும் மூன்று வேளை மூக்குப் பிடிக்கச் சாப்பாடு. சாப்பிட்டவுடன் சாப்பிடுவதற்கு ஸ்ட்ராபெரி, ஆப்பிள் மற்றும் வாழைப்பழம். வண்டி அடிக்கடி ஆடும், திடீரென்று தலைகீழாகத் திரும்பும், அவ்வப்போது குலுங்கும் என்பதால் வாழை இலை, பால் பாயசம் இரண்டையும் கொண்டு போக வில்லை.

ஒருவர் மாற்றி ஒருவர் உறங்கியிருக்கிறார்கள். தூக்கத்தில் கையை அசைத்து ஏதாவது ஒரு ஒயரைப் பிடித்து இழுத்துவிட வாய்ப் பிருக்கிறது என்பதால், கடைசிவரை கைகளை ஸ்லீப்பிங் பேக் உள்ளேயே வைத்திருந் தார்களாம். இருவர் மட்டுமே சென்றதால், ஜன்னல் இருக்கை யாருக்கு என்பதில் எந்தச் சண்டையும் ஏற்படவில் லையாம்.

- மருதன்

கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள்-3

திருவழுந்தூர் சிவக்கொழுந்து

சிவக்கொழுந்தினிடம் எனக்கு அபிமானம் அதிகமாவதற்கு இன்னொரு காரணமும் சேர்ந்தது. என் தமக்கை ஒருத்தி கும்பகோணத்தில் புதுச் செட்டித் தெருவில் இருந்தாள். நான் கும்பகோணம் போனால் அங்கேதான் தங்குவது வழக்கம். அவள் மகள் வனஜாட்சியை இந்த மானக்கேடான தொழிலுக்குவிடக் கூடாது. நல்ல இடமாய் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட வேண்டும் என்று நானும் சுந்தர காமாட்சியுமாக யோசித்து முடிவுகட்டி வைத்திருந்தோம்.

நான் கும்பகோணத்தில் இருக்கும் காலங்களில் சிவக்கொழுந்து தம்பி அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அப்போதெல்லாம் நான், 'ஆகா! நம்முடைய வனஜாவுக்கும் சிவக்கொழுந்துக்கும் மட்டும் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டால் எவ்வளவு மேலாய் இருக்கும்?' என்று எண்ணுவேன். என்னுடைய ஆசை நிறைவேறலாம் என்பதற்கு அறிகுறிகளும் தோன்றி வந்தன. அவர்கள் இரண்டு பேருக்கும் ஒருவர் மேல் ஒருவர் பிரியம் ஏற்பட்டு வந்ததாகத் தோன்றியது.

வனஜா, பார்க்கிறதற்கு ரம்பை, ஊர்வசி என்று சொல்கிறார்களே, அந்த மாதிரியெல்லாம் பிரமாதமாக இருக்கமாட்டாள். ஆனால், அப்படி அவலட்சணமும் இல்லை. முகத்திலே நல்ல களை, குடித்தனப் பெண் பாங்காய் இருப்பாள். ஆனால் புத்திசாலித்தனத்தில் அவளுக்கு ஈடான பெண்ணை நான் பார்த்ததே கிடையாது. ஏதோ என் மருமகளாச்சே என்று நான் சொல்கிறதாக நீங்கள் நினைக்கக்கூடாது. எனக்கே சொந்தத்திலே குழந்தை குட்டிகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் பற்றி நான் அப்படிச் சொல்கிறேனா? கிடையாது.

வனஜாவை சங்கீதக் கச்சேரிக்கோ, நாட்டியத்துக்கோ தயார் செய்யும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. இந்தத் தொழில் எல்லாம் எங்கள் தலைமுறையோடு போகட்டும், குழந்தைகள் எல்லாரும் குடியும் குடித்தனமுமாக இருக்கட்டும் என்று ஆசைப்பட்டோம். ஆகையால், வனஜாவைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினோம். ஏழெட்டு கிளாஸ் வரையில் படித்த பிறகு பள்ளிக்கூடத்தையும் நிறுத்தி ஆயிற்று. அப்புறம் வனஜா வீட்டில் சும்மாதான் இருந்தாள்.

என்ன இருந்தாலும் பரம்பரையாக வந்த கலை போகுமா? வனஜாவுக்கு சங்கீதம், நாட்டியம், அபிநயம் எல்லாம் இலேசாக வந்தது. ஆனால் அவ்வளவும் குறும்புத்தனமாக மாறிற்று. வனஜா எங்கே என்னத்தைப் பார்த்தாலும் அதே மாதிரி தானும் செய்து விடுவாள். யார் எப்படிப் பாடினாலும், அதே மாதிரி பாடிக் காட்டுவாள். நாடகம் பார்த்தால், யார் யார் எப்படி நடித்தார்களோ அப்படியே நடித்துக் காட்டுவாள். மனுஷ்யாளுடைய சாதாரண நடை உடை பாவனைகள் அவளுக்கு அப்படியே வந்துவிடும். யார் எப்படிப் பார்க்கிறார்கள், எப்படிப்

அமரர் கல்கி



பேசுகிறார்கள், எப்படி நடக்கிறார்கள் - அம்மாதிரியெல்லாம் செய்து காட்டி பரிகாசம் பண்ணுவாள். வனஜா இருக்கும் இடமெல்லாம் ஒரே சிரிப்பும் விளையாட்டுமாகத்தான் இருக்கும். யாருக்கும் பயப்படமாட்டாள். அலட்சியமாகத் தூக்கி எறிந்துதான் பேசுவாள். 'இப்படியெல்லாம் இருக்கக்கூடாது. பதவிசா' இருக்க வேண்டும்' என்று அவளுக்கு நான் அடிக்கடி புத்தி சொல்வதுண்டு.

ஆனால், வனஜாவின் விஷமம், வாய்த்துடுக்கு, சிரிப்பு, விளையாட்டு எல்லாம் ஒரே ஒரு ஆசாமியின் முன்னால் மட்டும் மாயமாய் மறைந்து போயின. சிவக்கொழுந்து தம்பி வந்துவிட்டால் இல்லாத நாணம், வெட்கம் எல்லாம் வந்துவிடும். தம்பி முன்னால் அவள் அதிர்ந்து பேச மாட்டாள். ஏதாவது கேட்டால் தான் பதில் சொல்வாள். வழக்கம் போல் கலீரென்று சிரிக்கமாட்டாள். தம்பி ஏதாவது வேடிக்கையாகப் பேசினால் இலேசாகச் சிரிப்பாள். சிவக்கொழுந்தின் நாயனம் கேட்பதில் அவளுக்கு ரொம்ப ஆசை. கும்பகோணத்தில் உத்ஸவம், ஊர்வலம் எதற்காவது தம்பி வாத்தியம் வாசித்தால் அதை அவள் கேட்காமல் இருக்க மாட்டாள். அடுத்தாற்போல் சிவக்கொழுந்து வீட்டிற்கு வரும்போது, அந்த ராகம் நன்றாய் இருந்தது. இந்தக் கீர்த்தனம் அபூர்வமாயிருந்தது என்றெல்லாம் சொல்வாள்.



நான் எப்போது வீட்டுக்கு வந்தாலும், பின்னால் தம்பி வருகிறதாயென்று ஆவலுடன் பார்ப்பாள். வராவிட்டால், ஜாடையாக, 'அவர்

சௌக்கியந்தானே? உடம்புக்கு ஒன்று மில்லையே?' என்று கேட்பான்.

சிவக்கொழுந்தின் மனமும் இப்படித்தான் இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். தம்பி இந்த வீட்டுக்கு வரும்போதெல்லாம், வனஜா வாசலில் நின்று வரவேற்கா விட்டால், அவனுடைய கண் சுற்றுமுற்றும் பார்க்கும். வீட்டை விட்டுப் புறப்படும் போதும் அப்படித் தான். வனஜா



விடம் விடைபெற்றுக் கொள்ளாமல் போகமாட்டான். 'போகலாமா, மாமா!' என்று கேட்டுக்கொண்டு நிற்பானே தவிர, கிளம்பமாட்டான்.

இந்தப் பிள்ளைகளுடைய மனசு எனக்குக் கண்ணாடி மாதிரி தெரிந்து போயிற்று. சிவக்கொழுந்துக்கும் வனஜா வுக்குந்தான் பகவான் பிணைத்துப் போட்டிருக்கிறார் என்று நான் தீர்மானம் பண்ணிக் கொண்டேன். இதைப் பற்றி எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. என் சகோதரிக்கும் இது ரொம்பத் திருப்தியாகத்தானிருந்தது.

எங்களுடைய எண்ணம் இவ்வளவு

கலபமாகப் பலிக்கப் போகிறதை எண்ணி நாங்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில், எங்களுடைய சந்தோஷத்தில் மண்ணைப் போடுவதற்கு ஒரு பாவி வந்து சேர்ந்தாள். அவளை உங்களுக்கும் தெரிந்துதான் இருக்கும். திருச்செந்தூர் மனோரஞ்சிதம் என்று பெயர். இப்போது அவள் பெயர் மங்கிப் போயிருக்கிறது



ஆனால், அடேயப்பா! அந்தக் காலத்தில் அவளுக்கிருந்த மவுசைச் சொல்ல முடியாது. அவளுடைய நாடக கம்பெனி கும்பகோணத்துக்கு வந்து சேர்ந்தது. வந்து பத்து நாளைக்குள் கும்பகோணமே பைத்தியமாய்ப் போய்விட்டது.

கதைக்குக் காலில்லை என்பார்களே, அந்த மாதிரி, கலை உலகத்தில் ஒருவருக்குப் புகழ் ஏன் வருகிறது, ஏன் போகிறது என்பதற்குக் காரணமே சில சமயம் இருப்பதில்லை. அந்த மனோரஞ்சிதம் என்கிற பெண் பிள்ளை ரொம்ப சாதாரணம் என்பது என் அபிப்ராயம். இராத்திரியிலே, முகத்திலே பவுடரை வாரி அப்பிக்கொண்டு, பளபளவென்று சம்கி புடைவையைக் கட்டிக்கொண்டு, எலக்ட்ரிக் லைட்டுக்கு முன்னால் வந்து நின்றால் ஏதோ பிரமாதமாய்த்தானிருக்கும். வேஷத்தைக் கலைத்துவிட்டுப் பகலிலே பார்த்தால் என் முகத்திலே இருக்கிற லட்சணம்கூட இருக்காது.

அவள் பாட்டோ ரொம்ப மட்டம். ஹிந்துஸ்தானி மெட்டுகளிலே தளுக்காய் நாடகத்துக்கு வேண்டிய பாட்டுக்கள் பாடுவாள், அவ்வளவுதான். சாரீரம் சுமாராயிருக்கும். ஆனால் கால் மணி நேரம் காம்போதியைப் பிடித்து ஆலாபனம் பண்ணச் சொல்லுங்கள்; வெறும் பூஜ்யம். தாளம் தவறாமல் ஒரு தியாகராஜ

கீர்த்தனத்தைப் பாடச் சொல்லுங்கள்; முடியாது! 'தாளத்தை வீட்டிலே வெச்சுட்டு வந்திருக்கேன். எடுத்துக்கிட்டு வரலை' என்று சொல்லக்கூடிய பேர்வழி.



'அதைவிட அவமானம் வேறென்ன இருக்கிறது?'

இந்த சாதாரண நாடகக்காரியின் மேலே தான் கும்பகோணம் அப்படி பைத்தியம் பிடித்து அலைந்தது. ஒரு நாளைக்கு டிக்கட் கிடைக்கவில்லை என்று, ஜனங்கள் கொட்டகை மேல் கல்லை விட்டெறிந்தார்கள். எவ்வளவு கூட்டம் வந்திருக்கும் பார்த்துக் கொள்ளுங்கள். இன்னும் அந்தப் பெண் பிள்ளை பகலிலே எங்கேயாவது வெளியிலே கிளம்பினால் போதும். ஆயிரம் ஜனங்கள் பின்னோடு போய்க் கொண்டேயிருப்பார்கள். அவள் கோயிலுக்கு ஸ்வாமி தரிசனம் செய்ய வந்தால் அன்றைக்கு உற்சவம் மாதிரி தான். அவ்வளவு ஜனங்கள் கூடிவிடுவார்கள். ஆனால் எல்லாரும் அந்த நாடகக்காரியைத்தான் பார்த்துக் கொண்டிருப்பார்களே தவிர, ஸ்வாமியைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

இப்படி ஊரெல்லாம் பைத்தியமாய் போனதில் நான் ஆச்சர்யப்படவில்லை. பாலாமணி காலத்திலிருந்து இந்த மாதிரி எத்தனையோ நான் பார்த்திருக்கிறேன். ஆனால் திருவழுந்தூர்த் தம்பியும் அந்த மாதிரி பிரமை பிடித்துப் போனதுதான் எனக்கு ரொம்ப ஆச்சர்யமாய் இருந்தது. அதனால் எனக்கு உண்டான மன வேதனைக்கு அளவே கிடையாது. தம்பியினுடைய வித்வத் என்ன? யோக்யதை என்ன? செல்வாக்கு என்ன? இவன் போய் அந்த நாடகக்காரி காலிலே விழுகிறதாயிருந்தால் அதைவிட அவமானம் வேறென்ன இருக்கிறது சாமி?

அந்த நாடக கம்பெனி கும்பகோணத்துக்கு வந்ததிலிருந்து, சிவக்கொழுந்து ஒருநாள் நாடகமாவது பார்க்காமலிருந்தது கிடையாது. வெளியூர்களுக்கு எங்கேயாவது கச்சேரிக்குப் போனாலும் நாடகம் நடக்கும் ராத்திரிக்கு எப்படியாவது வந்து சேர்ந்து விடுவான்.

மனோரஞ்சிதம் மேடைக்கு வந்துவிட்டால் நம்ம பையனைப் பார்க்கவே முடியாது. தேன் குடித்த குரங்கு என்பார்களே, அந்த மாதிரிதான்.

வேடிக்கையை வேணுமானால் கேளுங்கள். சிவக்கொழுந்துக்குப் பிடித்திருந்த நாடகப் பைத்தியம் வனஜாட்சியையும் பிடித்துக்கொண்டது. அவளும் தவறாமல் நாடகத்துக்குப் போய் வந்தாள். ஆனால் அவள் நாடகம் மட்டும் பார்க்கப் போனதாக எனக்குத் தோன்றவில்லை. இரண்டு மூன்று நாள் நானும் கவனித்தேன். சிவக்கொழுந்து மேடையையே பார்த்துக்கொண்டிருக்க, வனஜாட்சி சிவக்கொழுந்தையே பார்த்துக் கொண்டிருப்பாள். கொட்டகையில் அவன் ஒரு மூலையில் இவள் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாலும், எப்படியோ



அவளுடைய கண் அவன் இருக்குமிடந் தேடிக் கண்டுபிடித்து விடும்.

இதெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்க வில்லை. வனஜாட்சியின் மனவேதனை எனக்கு நன்றாய்த் தெரிந்தது. அவள் இந்த அசட்டுப் பிள்ளையை நினைத்து நினைத்து உருகிப் போய்க் கொண்டிருந் தாள் என்பதையும் கண் டேன். நாடக கம்பெனி வந்ததிலிருந்து, சிவக் கொழுந்து எங்கள் வீட் டுக்கு வருவது கிடை யாது. வனஜாட்சி சில சமயம், "ஏன் மாமா! இந்த நாடக கம்பெனி எப்போது ஊரை விட்டுப் போகப் போகிறது?" என்று கேட்பாள். கேட்கும்போதே அவள் கண்ணில் ஜலம் தளும்பி நிற்கும். நான் அவளுடைய குறிப்பை அறிந்து கொள் வேன். என்னுடைய மனமும் கஷ்டப் பட்டதென்றாலும், வெளிப்படையாக, "சீ! பைத்தியமே! உனக்கு என்ன அதைப் பற்றிக் கவலை? ஊரில் யார் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? ஏதாவது வேலை இருந்தால் பார் போய்!" என்பேன். இன்னும் சில சமயம் அவள், "மாமா! நானும் டிராமாவில் சேரப் போகிறேன்" என்பாள். நாடகத்தில், மனோரஞ்சிதம் பாடியபடியெல்லாம் பாடி, அவள் நடித்தபடியெல்லாம் நடித்துக் காட்டுவாள். "ஐயோ! இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பலமாகப் பிடித்துவிட்டதே" என்று எண்ணி வருத்தப்படுவேன்.

நம் ஊர்க்காரர்கள் சாதாரணமாய் ஒன்று என்றால், நூறு என்பார்கள். ஒன்றும் இல்லாதபோதே பொய்யும் புளுகும் கற்பனை செய்வார்கள். கொஞ்சம் நிஜமும் இருந்தால் கேட்க வேணுமா? சிவக்கொழுந்தின் பைத்தியக் காரத்தனத்தைப் பற்றித்தான் ஊரெல் லாம் பேச்சு. இந்த மாதிரி மேதாவியான பிள்ளைக்கு இப்படி அசட்டுப் பட்டம் வந்ததேயென்று எனக்கு எவ்வளவோ வருத்தமாய் இருந்தது.

கடைசியாக நாடகம் முடிந்தது. அதாவது கும்பகோணத்தில் மனோ ரஞ்சிதம் கம்பெனி யாரின் நாடகம் முடிந் தது. அவர்கள் அடுத்த படியாக சென்னைப் பட்டிணத்திற்குக் கிளம் பினார்கள். அவர்கள் ஊருக்குக் கிளம்புகிற அன்று சிவக்கொழுந்து அந்த நாடகக்காரியின் ஜாகைக்குப் போய் அங்கேயே இருந்த தாகவும் ரொம்பவும் அசட்டுப் பிசட்டு என்று நடந்து கொண்டதாகவும் தெரிய வந்தது. ரயில்வே ஸ்டேஷனுக்கும் அவர்களை வழி அனுப்புவதற்குப் போயிருந்தானாம். ரயில் கிளம்பிக் கொஞ்ச தூரம் போன பிற்பாடுகூட, சிவக்கொழுந்து, "நான் பட்டணத்துக்கு வரேன். அவசியம் வந்து உங்களைப் பார்க்கிறேன்" என்று இரைந்து கத்திய தாகவும், அதைக் கேட்டு பிளாட் பாரத்தில் இருந்தவர்கள் சிரித்ததாகவும் கேள்விப்பட்டேன்.

(தொடரும்)




'மேதாவியான பிள்ளைக்கு அசட்டுப் பட்டமா... அடக்கடவுளே!'



தத்துவமேதை சாக்ரடீஸிடம் ஒருவர், 'ஐயா! நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். உங்கள் ஆலோசனை என்ன?' என்று கேட்டாராம்.





அதற்கு சாக்ரடீஸ் அளித்த பதில் என்ன தெரியுமா? "ஓ! தாராளமாய். உனக்கு நல்ல மனைவி வாய்த்தால், உன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். அப்படி வாய்க்காமல் போனாலும் கவலைப்படாதே! நீ ஒரு தத்துவஞானி ஆகி விடுவாய்!"

திருமணம் குறித்து, நகைச்சுவையான அதே சமயம் சிந்திக்கத் தூண்டுகிற சாக்ரடீஸின் கருத்தைச் சொல்கிறபோது, எனக்கு இன்னொரு விஷயமும் நினைவுக்கு வருகிறது.

ராபர்ட் பிரௌனிங் ஒரு பிரபலமான கவிஞர். அவரது மனைவி எலிசபெத் பிரௌனிங்கும் சிறந்த பல கவிதைகளை எழுதியவர்தான். ஆனாலும், திருமணமானவுடன், ராபர்ட் பிரௌனிங் எலிசபெத்திடம் சொன்ன வார்த்தைகள் என்ன தெரியுமா?

"நான் உன்னைத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். இந்த ஒரு காரணமே, உன்னை நான் அடிப்பதற்குப் போதுமானது" என்பதுதான். அதனால், திருமணத்துக்குப்பின், ராபர்ட் பிரௌனிங் தன் மனைவியை அடித்துத் துன்புறுத்தியதாக நினைத்து விடாதீர்கள். இரண்டு பேருக்கும் இடையிலான அன்பு மிக ஆழமாகவே இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்தினார்கள்.

சுனந்தாஜி




பொதுவாக திருமணத்துக்கு முன்பு அற்புதமாக, அபாரமாகத் தோன்றுகிற விஷயங்கள் எல்லாம், திருமணத்துக்குப் பிறகு, சின்னச் சின்ன பிரச்னைகளுக்கு வித்திடுகின்றன. அவற்றைப்

புரிந்து கொண்டு, அனுசரித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதுதான் இந்திய கலாசாரத்தின் பெரிய பலம்.

மேற்கத்திய நாடுகளில், பிள்ளைகள், பெற்றோர்களுடன் அனுசரித்துப் போவது என்பது சாத்தியமே இல்லை என்று நினைக்கிறார்கள். வயதாகிவிட்டால், தனியாய்ச் சமாளிக்க வேண்டும். இல்லை என்றால் முதியோர் இல்லம் ஒன்றைப் பார்த்துக்கொண்டு போய்விட வேண்டியதுதான்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அற்ப விஷயங்கள்கூட, பூதாகரமாய் வெடித்து, விவாகரத்தில் போய் முடிகிற கதைகள் அங்கே வெகு சகஜம்.

அவர்களை நான் குறை சொல்ல விரும்பவில்லை. அவர்கள் கலாசாரம் அப்படிப்பட்டது. ஆனால் நம் நாட்டில் அப்படி இல்லை. கண



அதோ அந்த பறவைபோல வாழ வேண்டும்!

வன், மனைவி, இரண்டு குழந்தைகள் கொண்ட தனது குடும்பத்தைக் காப்பாற்றவே அவனுக்குக் கஷ்டமாக இருக்கும். ஆனால், அவனுடைய பெற்றோர்களையும் தன்னுடன் வைத்துப் பராமரிப்பான்.



வாழ்க்கை என்றால் கஷ்டங்கள் இருக்கவே செய்யும். அதற்காக அப்பா, அம்மாவை அனுப்பி விடலாமா என்று புரிந்துகொள்ளும் மனப் பக்குவம் அவனுக்கு உண்டு.

துரதிருஷ்டவசமாக, மேற்கத்திய கலாசாரம் இங்கேகூட பரவி வருகிறது.

அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் நாம் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, தவறான விஷயங்களை அவர்களிடமிருந்து கடைப்பிடிக்க ஆரம்பித்திருக்கிறோம்.

பெற்றோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புபவர்கள், எதிர்காலத்தில் தாங்களும் ஏதாவது ஒரு முதியோர் இல்லத்தில் கடைசி காலத்தைக் கழிக்க வேண்டி வரலாம் என்பதை மறந்துவிடக் கூடாது.

இதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், சராசரி இந்தியனுக்குப் பொறுமை அதிகம்தான். அவன் தனக்கு வரும் கஷ்டங்களை அமைதியாய் ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவத்தைப் பெற்றிருக்கிறான் என்பதைப் பெருமையுடன் நாம் குறிப்பிடலாம்.

'**நீ**ங்கள் இளம் வயதிலேயே, தீவிர ஆன்மிக ஈடுபாடு கொண்டிருக்கிறீர்கள். வேதாந்தம், பகவத் கீதை ஆகியவற்றை ஆழ்ந்து படித்து, சொற்பொழிவு நிகழ்த்துகிறீர்களே..., அதற்கு என்ன காரணம்? வாழ்க்கையில் ஆழ்ந்த சோகம் ஏதாவது ஏற்பட்டதா?'

எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் எந்தக் காரியத்தையும் சரியான நேரம் - காலம் பார்த்தே செய்வார். அவரது வீட்டில் இருக்கும் பஞ்சாங்கத்தின் பெயர் 'வாசன் பஞ்சாங்கம்'. அட!



'இப்படி ஒரு கேள்வியை சிலர் என்னிடம் கேட்பது உண்டு. அவர்களுக்குப் பதில் தருகையில் நான் நகைச்சுவையாக, "இதுபோன்ற கேள்விகளைக் கேட்கும் உங்களைப் போன்றவர்களை சந்திப்பது தான் எனக்குச் சோகமானது" என்று சொல்லுவேன்.

காரணம், இன்றைக்குச் சமூகத்திலே ஆன்மிகம் என்பது ஏதோ, வயதானவர்களுக்கு உரித்தான சமாசாரம் என்பது போன்ற மனப்பான்மை நிலவுகிறது. அதனால்தான் இளம் வயதில் ஒருவருக்கு ஆன்மிக ஈடுபாடு வந்துவிட்டால், அவரை ஒரு மாதிரியாகப் பார்த்து விமர்சனம் செய்வதைப் பார்க்கிறோம்.

உண்மையில் பார்க்கப்போனால், ஆன்மீகத்துக்கும் வயதுக்கும் சம்பந்தமே கிடையாது. யாருக்கும் எந்த வயதிலும் ஆன்மீக ஈடுபாடு ஏற்படலாம். ஆனால் ஒருவரது ஆன்மிக ஈடுபாடு எப்படிப் பட்டது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஓர் ஆசிரமத்திலே தங்கிக்கொண்டு, இந்த உலக வாழ்க்கையின் சௌகரியங்கள், பணம், அதிகாரம் போன்றவைகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால், அது எப்படி உண்மையான ஆன்மிகமாகும்?

பக்திப்பழம் போல உடையணிந்து இதர அலங்காரங்கள் செய்து கொண்டு இறை சிந்தனை இல்லாமலிருந்தால், புறத் தோற்றத்தால் என்ன பலன் ஏற்படும்?

ஒருவருடைய எண்ணங்கள் எப்படிப் பட்டவை? அவர் மதித்து முக்கியத்துவம் கொடுப்பது எதற்கு? இவைதான் முக்கியம்.

விக்டர் ஹியூகோ விவரிக்கும் காட்சி மிக அற்புதமானது. ஒரு ஆற்றில், வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆற்றிலே அடித்து வரப்படும் ஒரு மனிதன், ஒரு மரத்தை நெருங்கும் சமயத்திலே வெகு பிரயத்தனப்பட்டு, ஆற்றின் கரையில் இருந்த ஒரு மரத்தினுடைய தாழ்வான கிளை ஒன்றைப் பற்றிக்கொண்டுவிட்டான். அடுத்த சில நிமிடங்களில், அவன் மரத்தின் கிளையை இன்னும் கெட்டியாகப் பிடித்துக்

கொண்டு, 'அப்பாடா! இனி பிழைத்து விடலாம்' என்று நம்பிக்கையுடன் பெருமூச்சு விட்டான்.



அதே மரக் கிளையில், சற்றுத் தள்ளி, ஒரு பறவை உட்கார்ந்துகொண்டு இருக்கிறது. மரத்தைப் பிடித்துக்கொண்டு இருக்கும் மனிதன், மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பறவை. இருவருக்கும் இடையில் இருக்கும் பெரிய வித்தியாசம் என்ன என்று உங்களுக்குத் தெரிகிறதா?

> **'அறிவு என்கிற இறக்கைகளை அசைத்து, பறவைபோல வாழலாம்!'**

மனிதனின் வாழ்க்கை, அந்த மரக் கிளையைச் சார்ந்து இருக்கிறது. கிளை முறிந்து ஆற்றில் விழுந்துவிட்டாலோ அல்லது அந்த மரத்தையே ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டாலோ, மனிதனின் கதி அதோ கதிதான்.

ஆனால் பறவையின் கதை அப்படியில்லை. மரக்கிளைக்கோ அல்லது மரத்துக்கோ எந்த ஆபத்து என்றாலும் அதற்குக் கவலை இல்லை. அது பாட்டுக்குப் பறந்து போய் விடும்.

வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட மனிதனைப் போன்ற நிலைமைக்கு யாருமே ஆளாக வேண்டிய அவசியம் இல்லை. பறவை போல வாழ முடியும். காரணம், மனிதர்களுக்கு 'அறிவு' என்ற இறக்கைகள் இருக்கின்றன. எனவே, தேவைப்பட்டபோது, அந்த அறிவு என்கிற இறக்கைகளை அசைத்து, பறவைபோல சுதந்திரமாய் வாழலாம்.

மனிதர்கள் தங்களுக்கு இறக்கைகள் இருப்பதை உணர்வதே இல்லை. எனவேதான் வாழ்க்கை வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றார்கள்.

ஒரு பெரிய பணக்காரர், வெளிநாட்டு சொகுசு கார் வைத்திருக்கிறார். இன்னொரு பணக்காரர். அவரிடமும் அதேபோன்ற சொகுசு கார் உள்ளது. இரண்டு பேருக்கும், திடீரென்று அவர்களது கார்களைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

ஒருவர் சற்றும் பதற்றப்படவில்லை. தன்னுடைய டிரைவரையும் தன் கூடவே அழைத்துக்கொண்டு, பஸ்ஸில் ஏறி தன் வீட்டுக்குப் போகிறார்.

இன்னொருவரோ, அப்படிச் செய்ய முன்வரவில்லை.

அதற்கு என்ன காரணமாக இருக்கும்?

(வெற்றி தொடரும்)

மழை

உக்ரமமான மழை. வீட்டுக்குள் குளிர்ந்த காற்று வீசியது. வானம் கறுத்துக்கொண்டிருந்தது. இப்படி ஒரு மழையைச் சந்தித்து நீண்ட நாட்களாகிறது. கோமதி சன்னல் கதவுகளைச் சாத்தினாள். அசந்து தூங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பிவிட்டிருந்தாள். இல்லாவிடில் நீரை பெயர்த்தெடுத்து கொட்டுகின்ற மழையை, ரசிக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்.

"ஏங்க டீ தரவா?"

"ம்" என்றேன்.

ஏலக்காய் மணத்துடன் முகத்துக்கு நேரே டீ வந்தது. ரசித்துக் குடித்தேன். மழையை அனுபவித்தபடி சூடாக டீ. வாழ்க்கையின் ரசனையான நிமிடங்களில் இதுவும் ஒன்று.

"வீட்டுல இருக்குற மூணு குடையும் ரிப்பேரா கெடக்கு. போய் சரி பண்ணிட்டு வர்றீங்களா"

கோமதி, காதருகில் கிசுகிசுத்தாள்.


டீ கொடுத்ததன் காரணம் புரிந்தது.

அதேநேரம், இந்த மழையில் சிறிது நனைந்தால் தேவலாம் போலிருந்தது.

கிழிந்து போயிருந்த ஒரு குடையை விரித்துக்கொண்டேன். வீட்டை விட்டு புறப்பட்டேன். ஜிலீர் என நீரும் காற்றும் ஒரு சேரத் தாக்கியது. குடை அதன் பலனை முழுவதுமாகத் தராது போலத் தோன்றியது. ஆனாலும், மேலே விழுந்த மழை நீரை ரசித்துக்கொண்டே நடந்தேன்.

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. ஆள் நடமாட்டம் சுத்தமாக இல்லை. 'மழை மேலும் வலுப்பெறும். வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி இருக்கிறது' என்கிற அறிவிப்பு இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று தோன்றியது.

இந்தச் சமயத்தில் குடை ரிப்பேர் செய்பவன்



திருவாரூர் பாபு

எங்கே இருக்கப் போகிறான். நிச்சயமாக இருக்க மாட்டான். ஆனாலும் கடைத் தெரு செல்ல வேண்டும் என்கிற எண்ணம் என்னைத் தூண்ட, நீரில் மூழ்கும் கால்களை மெல்ல எடுத்து வைத்தேன்.

எனது எதிர்பார்ப்புக்கு எதிராக குடை ரிப்பேர்க்காரன் அமர்ந்திருந்தான். பேருந்து நிறுத்தத்திற்கு ஓரத்தில், டீ கடைக்கு வெளியே இரண்டு குடைகளை மேலே விரித்து வைத்திருந்தான். அதன் வழியே அவன் தலை மீது மழை கொட்டிக் கொண்டிருந்தது.

நான் பேப்பர் கடையில் தொங்கிய ஸ்டால் போஸ்டர்களை படித்து முடித்து விட்டு, குடைக்காரனுக்கு அருகே சென்றேன். முதலில் எனது கால்களைப் பார்த்தான். செருப்பு சரியாக இருந்தது. அடுத்ததாக கையைப் பார்த்தான்.

பேகிலிருந்து மூன்று குடைகளையும் எடுத்து நீட்டினேன்.

சட்டென ஒரு உற்சாகம் அவன் முகத்தில் நீச்சலடித்தது. கால்களை கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தவன், கால்களை நீட்டிப் போட்டான். கைகளை முகத்தில் தேய்த்துக் கொண்டான்.

ஒவ்வொரு குடைகளாகப் பரிசோதனை செய்தான்.



''சரி பண்ணிடலாம். பஸ் ஸ்டாப்புக்குள்ள உட்காருங்க'' என்றான்.

''மொதல்ல எவ்வளவு ஆகும். அதச் சொல்லு'' என்றேன்.

''மூணு கொடையிலேயும் கம்பி விட்டிருக்கு. ரிவிட் அடிக்கணும். துணி கிழிஞ்சிருக்கு. தைக்கணும்'' என்றவன் மனசுக்குள் கணக்குப் போட்டான். என்னைப் பார்த்தான். பிறகு, ''அறுபது ரூபா ஆகும்'' என்றான். மெதுவான குரல். தயக்கமான குரல்.

எனக்கு திடுக் என்றது. அறுபது ரூபா! ஒரு குடையின் விலை எவ்வளவு? மனசு கணக்குப் போட்டது.

''ஒரு குடை விலை சொல்றே'' என்றேன்.

''மூணு குடை ரிப்பேர் செய்யறேன்ல'' என்றான்.

''நான் போயி வீட்டுல கேட்டுட்டு வந்துடறேன்'' என்றேன்.

சட்டென அவன் முகம் செத்துப் போனது. இதுவரை அவன் முகத்தில் இருந்த உற்சாகம் மறைந்தது. மழை மேலும் வேகமெடுக்க... மேலே சொருகியிருந்த குடையை அட்ஜஸ்ட் செய்தான். ஆனாலும் தண்ணீர் அவன் மேல் கொட்டியது.

''எதுக்கு அலையறீங்க. எவ்வளவு தர்றீங்க?'' என்றான்.

எனக்கு திடுமென ஒரு தொகையை சொல்லத் தோன்றவில்லை.

''அம்பது ரூபா வாங்கிக்கோ'' என்றேன்.

மறுபடி அவன் முகத்தில் உற்சாகம்.

''சரி கொடுங்க'' என்றபடி குடைகளை வாங்கி மடியில் வைத்துக் கொண்டு தீவிரமாகப் பரிசோதித்தான். தலையை எக்கி ''ஒரு டீ போடு'' என்றான். நான் ஓரமாக

ஒதுங்கிக்கொண்டேன்.

டீ மாஸ்டர் கொடுத்த டீயில் மழை நீர் சொட்டியது. அதனை பொருட்படுத்தாமல் வாய்க்குள் கிளாஸை முழுவதுமாகத் திணித்து டீயை ரசித்துக் குடித்தான். குடையை சரி செய்யத் தொடங்கினான்.

ஒரு ஓரமாக வைத்திருந்த இரும்புத் துண்டை எடுத்து முன்னால் போட்டான். ஒரு தகரப் பெட்டியில் துருப்பிடித்த கம்பிகள், இன்னும் பிற வஸ்துகள் இருந்தன. அவற்றை எடுத்து வைத்துக்கொண்டான். கம்பிகளை இரும்புத் துண்டில் வைத்து சுத்தியலால் நச் நச்சென்று அடித்தான். அவன் கைகள் பரபரவென இயங்குவதை ஆர்வமாக வேடிக்கை பார்த்தேன். ஊசியில் நூல் கோர்த்து, அதன் மேலே பிசின் தடவி அறுந்து போயிருந்த இடங்களைத் தைத்தான். பிறகு சேறும் சகதியுமாக இருந்த ஒரு பாட்டிலில் கைவிட்டான். எண்ணெய்.

குடைக் கம்பிகளின் இடுக்கில் வைத்தான்.

ஒவ்வொரு குடையாக நிமிர்த்திப் பிடித்து பட்டனை அழுத்த.. குடை எந்தத் தகராறும் செய்யாமல் சரக்கென விரிந்தது. மேலே அரை வட்டத்தில் கறுப்பு முக்காடு தெரிந்தது.

"ரெடி" என்றான்.

நான் சட்டைப் பையிலிருந்து பணமெடுத்தேன்.

"நாலு நாளா ஒரு வேலை இல்லை. பத்து வருஷத்துல இது மாதிரி ஒரு நாளும் இருந்தது இல்ல" என்றான். கொடுத்த பணத்தை கண்களில் ஒற்றிக்கொண்டான். இப்போது ஒரு பரபரப்பு அவனிடம் தெரிந்தது.

நான் ஒரு குடையை விரித்தேன். மழையில் நனையாமல் வீடு நோக்கி நடந்தேன்.

"என்னங்க இவ்வளவு சீக்கிரமா வந்திட்டீங்க?" கோமதி வியப்பாகக் கேட்டாள்.

குடைகளை அவளிடம் நீட்டினேன்.

"ரிப்பேர் பண்ணிட்டீங்களா... இந்த வருஷம் மழைக்காலம் போயிடுங்க" என்றபடி குடைகளை விரித்துப் பார்த்தாள்.

"நல்லா ரிப்பேர் பண்ணி இருக்கான். எவ்வளவு கொடுத்தீங்க?"

"அம்பது ரூபா" இப்படி கூறிய அடுத்த விநாடி, சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றிற்று. குறைத்துச் சொல்லி இருக்கலாம். ஆனாலும் டூ லேட்!

"அறிவிருக்கா உங்களுக்கு?" நாக்கை சாட்டையைப் போல சுழற்றினாள்.

அந்த வார்த்தையைவிட, அது உச்சரிக்கப்பட்ட விதம் எனக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"ஏம்மா... என்ன ஆச்சு?" டென்ஷனையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு கேட்டேன்.

"ஏங்க, குடை ரிப்பேர் செய்ய அம்பது ரூபா கொடுத்திருக்கீங்களே... கொடுக்கறதுக்கு முந்தி யோசிச்சீங்களா... இங்கதானே வீடு இருக்கு.. என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமில்ல.. செல்போன்ல கூப்பிட்டிருக்கலாமில்ல... கண்ணு மண்ணு தெரியாம ஒவ்வொரு செலவையும் செய்யறீங்க..?"

ஆவேசமாகக் கத்தினாள்.

"அதிகங்கிறியா?" நிதானமிழக்காமல் கேட்டேன்.

"இல்லியா? ஒரு புது குடை வாங்கறகாசுங்க. அதோட ஒரு குடைக்கு ரெண்டு ரூபா தரலாம். மிஞ்சி மிஞ்சிப் போனா மூணு குடைக்கும் பத்து ரூவா கொடுக்கலாம். அதுக்கு மேலே கொடுக்கறது வேஸ்ட்டுங்க. நானா இருந்தா பத்து ரூவாக்கு மேலே ஒரு சல்லிக்காசு கொடுத்திருக்க மாட்டேன். உங்கள அனுப்பி

திருநாவுக்கரசர் அ.தி.மு.க.வில் இருந்தபோது நடத்தப்பட்ட 'பொன்மனம்' பத்திரிகை, தற்போது அவர் பா.ஜ.க.விற்கு வந்த பிறகும் தொடர்கிறது. தற்போது அதில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிய கடுமையான விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.



னேன் பாருங்க"

பேசிக்கொண்டே அடுப்படி நோக்கி நடந்தாள்.

பாத்திரங்கள் படபடவென சரிந்தன.

சரக்கென்று கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. இதற்கு மேல் இங்கே நின்றால், பதிலுக்குப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் வரும். வார்த்தைகள் திசை மாறும். பிறகு கை நீளும். அப்புறம் மழையை ரசிக்க முடியாது. ஒரு மழை நாளின் விடுமுறை தினம் அபஸ்வரமாய்ப் போகும்.

சட்டென செருப்பை மாட்டிக் கொண்டு, ஒரு குடையை எடுத்துக் கொண்டு நடந்தேன்.

கடைத்தெரு நோக்கி நடக்கும்போது குடை ரிப்பேர் செய்பவன் ஏமாற்றி விட்டானோ என்று தோன்றியது. பத்து ரூபாய் பெறுமானமுள்ள வேலைக்கு அம்பது ரூபாய் வாங்கி விட்டானோ என்கிற எண்ணம் எழுந்தது.

பல நேரங்கள் இப்படித்தான். அவளுக்கு உபகாரமாக ஏதாவது செய்கிறேன் என்று தவறிழைத்து விடுகிறேன். பலமுறை என் கண்ணெதிரேயே கோமதி அதை நிரூபித்திருக்கிறாள்.

நான் பத்து ரூபாய் கொடுத்து வாங்கி வந்த ஒரு பொருளை வாசலில் ஐந்து ரூபாய்க்கு வாங்குவாள். 'பேரம் பேசணுங்க. கேட்டத கொடுக்கக்கூடாது. ஒவ்வொண்ணுக்கும் ஒரு வெலை இருக்கு. இருக்குங்கிறதுக்காக அள்ளிக் கொடுத்திடக் கூடாது' என்பாள்.

இப்போதும் அப்படித்தானோ? அவனிடம் பேசி இருக்கலாமோ? அம்பது ரூபாய் என்பது பெரிதில்லை. ஆனால் ஏமாற்றம் என்பது பெரிது. மனதை அரித்துக்கொண்டே இருக்கும்.

மழைக்கு ஒரு சிகரெட் பிடித்தால் தேவலாம் போலத் தோன்றியது. கடையருகே ஒதுங்கினேன்.

சிகரெட் வாங்கிப் பற்ற வைத்தேன்.

குடைக்காரன் சைக்கிளை கடையோரமாக ஒதுக்கினான். என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

"நல்ல தீப்பெட்டி ஒண்ணு கொடு. அதோட ரெண்டு வறுக்கி, முறுக்கு ஒரு ரூவாய்க்கு கட்டு. கடல உருண்டை நாலு கொடு'' என்றபடி குடைக்காரன் பணத்தை நீட்டினான். கடைக்காரர் கட்டிக் கொடுத்ததை வாங்கி நனையாமல் பனியனுக்குள் போட்டுக்கொண்டான்.

நான் அவனைப் பார்த்தேன்.

சிரித்தான். அவன் கைகளில் அரிசி நிரம்பிய பாலிதீன் பேக் இருந்தது. இன்னொரு பைக்குள் காய்கறிகள். அதோடு, குழந்தை வாயில் வைத்துச் சப்பும் ரப்பர் துண்டு. மழை குளிருக்கு இதமாக உடம்பில் பாலிதீன் பேக்கை கிழித்துச் சுற்றி இருந்தான். அதையும் மீறி அவன் உடம்பு நடுங்கியது.

"எட்டு ரூவா கணக்கு இருக்கு. அதையும் எடுத்துக்கோ. சாம்பிராணி இருக்கா? இருந்தா எட்டணாவுக்குக் கொடு. நாலு நாளா பெரியவ தும்மிகிட்டே இருக்கா" என்றான். கடைக்காரர் கொடுத்ததை வாங்கிக்கொண்டான்.

பைகளை எடுத்து சைக்கிளில் வசதியாக வைத்துக்கொண்டான். பீடியை இழுத்தபடி சைக்கிளை நகர்த்தினான்.

மழை அதன் வேகத்தை குறைத்துக் கொண்டிருந்தது.

நான் குடையை மேலே தூக்கி பட்டனை அழுத்தினேன்.

சடார் என வழுக்கிக்கொண்டு விரிந்தது.

மனசு சந்தோஷமாக இருந்தது. குடை சுகமாக விரிந்ததால் ஏற்பட்ட சந்தோஷம் அல்ல அது என்பது புரிந்தது. ●

புதிய தமிழகம்



மற்ற தலித் இயக்கங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் கிருஷ்ணசாமி. இதன் மூலம் தனது பலத்தைக் கூட்டி ஏதாவது ஒரு கூட்டணியில் ஐக்கியமாகி, அதன் மூலம் கணிசமான தொகுதிகளைப் பெற்றுவிட வேண்டுமென்கிற முடிவிலிருக்கிறாராம்.

படம் : யோகா



மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்

உறவுக் கோட்டில் ஒரு புள்ளி!

அனிதா - பரத் இருவரது முதல் குழந்தை. வசந்தின் முதல் பிறந்த நாள். இரண்டு குடும்பங்களும் கலந்துகொள்ள சிறப்பாக நடந்தது. விருந்து முடிந்து அனைவரும் சென்றவுடன் பரிசுப் பொருட்களை இருவரும் பார்த்துக்கொண்டு வருகையில், அனிதாவின் குடும்பத்தினர் கொடுத்த பரிசுகளை விட பரத் குடும்பத்தினர் அளித்தவை விலை குறைவாக இருக்க, அதில் ஆரம்பித்த பேச்சு, சண்டையில் முடிந்தது. இருவரும் தூக்கக் கலக்கத்தில் அழும் குழந்தையைக் கவனிக்காமல், 'பிஸி'யாக இருக்க, அது அநாதையாகத் தானே தூங்கிப்போனது!

தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு அவர்களிடையே பேச்சுவார்த்தை இல்லை. அனிதாவும் பரத்தும் ஓரளவு ஒத்துப் போகக் கூடியவர்கள்தான். இந்தச் சம்பவத்தால் அவர்களுக்குள் வந்த சண்டை இரு குடும்பங்களைப் பற்றியதுதான்.

நமது கலாசாரத்தில், குறிப்பாக, திருமணம் என்பது இரு நபர்களுக்கிடையே மட்டும் ஏற்படும் பந்தமில்லை; இரு குடும்பங்களிடையே ஏற்படும் உறவு! வளர்ந்த ஒரு மரம் வேரோடு பிடுங்கப்பட்டு புது மண்ணில் நடப்படுவதைப் போன்றது, மணம் செய்துகொள்ளும் பெண்ணின் நிலை. அவள் வளர்ந்த சூழ்நிலையிலிருந்து மாறுபட்டிருக்கும் ஒரு சூழ்நிலைக்கு வந்தவுடனேயே, அவள் தன் கால்களைப் பதித்துக்கொண்டு நிற்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு, ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறது. இன்றைய பெண்ணிற்குக் கூடுதலான ஒரு சவால்... கணவன் / மாமியார் வீட்டிலிருந்தபடி வேலைக்குப் போவது; வீட்டு வேலைகளையும் செய்துகொண்டு குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு, வீட்டுப் பெரியவர்களையும் திருப்திப்படுத்தி... அம்மம்மா... அவளென்ன 'சூப்பர் வுமனா?'

மணம் செய்துகொள்ளும் ஆணின் நிலை? இதுவரை அம்மாவிடம் செல்லம் கொஞ்சி தனக்கு வேண்டுமென்பதை சாதித்துப் பழகி, பொறுப்பில்லாமல் காலம் கழித்தவருக்கு, மனைவியின் வரவு கொஞ்ச

சொந்தங்கள் வாழ்க!

3

காலத்துக்கு குஷியாகத்தான் இருக்கும். பின்பு இரு பெண்களது எதிர்பார்ப்புகளும் அவரைத் திணற வைக்க, பொறுப்புகள் கூட.... அப்பப்பா... அவரென்ன 'அஷ்டாவ தானி'யா?

ஆனாலும் நமது சமுதாயத்தில், என்ன தான் படித்த பெண்ணாக இருந்தாலும், புகுந்த வீட்டில் அவர்களின் பழக்கங்கள், நம்பிக்கைகள் இவற்றோடு ஒன்றி வாழப் பழகும் பெண்தான் 'மாமியார் மெச்சிய மருமகளா'கிறாள். பெரும்பாலான கணவர் களும் தன் மனைவி அப்படிப் பெயரெடுப் பதைத்தான் விரும்புகிறார்கள்; பெண் ணைப் பெற்றவர்களும் அதைத்தான் பெருமையாகக் கருதுகிறார்கள்!



இந்த மாதிரி எதிர்பார்ப்புகள் நமக்கு ஆண்களிடம் உண்டா என்றால், இல்லை என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது (விதி விலக்குகள் எல்லாவற்றிலும் உண்டு). மணவாழ்வின் ஆரம்ப காலம் என்பது, கணவன்-மனைவி இருவருக்குமே சவாலா கும் பொழுது, சமாளிக்கும் திறமை உள்ள வர்கள் உறவுகளைச் சுமுகமாக வைத்துக் கொள்ளப் பழகுகிறார்கள்.

இப்படிச் சமாளிப்பதற்கு, அடிப் படையில் சில விவரங்களை கணவனும் மனைவியும் புரிந்துகொள்வது அவசியம் என்று நம்புகிறேன்.

ஒரே கலாசாரமாக இருந்தாலும் குடும் பங்களை மூன்று விதமாக வகைப்படுத்தலாம். குடும்ப அங்கத்தினர்கள் உறவை வெளிப்படுத்தும் விதத்திலும், அவர்களிடையே எடுத்துக்கொள்ளும் இடைவெளியைப் பொறுத்தும் இவை மாறுபடும். உறவுகள் என்பதை ஒரு நீண்ட (horizontal) கோடாக வரைந்தால், அதன் வலது கோடியில் உள்ள குடும்பங்கள் மிகுந்த பாசத்தால் பின்னிப் பிணைந்த குடும்பங்கள் (enmeshed families); இடது கோடியில் பாசம் என்பதே இல்லாமல் தனித்தனியாக நவக்கிரகங்களாக வாழும் குடும்பங்கள் (disengaged families). இந்த அளவு 'எக்ஸ்ட்ரீமில்' (extreme) உள்ள குடும்பங்கள் நிறைய தென்படாவிட் டாலும், ஓரளவு இந்த இரண்டு ரகத்தைச் சார்ந்த குடும்பங்களை நாம் சந்திக்கிறோம்.


பாசத்தால் பின்னிப் பிணைந்த குடும் பங்களில், பெற்றோருக்கும் குழந்தைகளுக் கும் பிரிக்க முடியாத அளவிற்குப் பாசம் இருக்கும். அபரிமிதமான பாசத்தினால் சதா அவர்கள் தங்கள் குடும்பத்தைப் பற்றிய நினைவுடனேயே வாழ்வார்கள். குடும்பத்தைவிட்டு விலகி வாழக்கூடாது என்பதற்காக, வாழ்க்கையில் தங்கள் முன் னேற்றத்திற்காக வரும் சந்தர்ப்பங்களை யெல்லாம் தவற விடுவார்கள். உதாரண மாக, பெற்றோரை விட்டு வெகுதூரம்

சென்று படிக்கக்கூடிய (வேலை பார்க்கக்கூடிய) புத்தி, திறமை, சந்தர்ப்பம் எல்லாம் அமைந்தும் 'நான் குடும்பத்தோடு இருக்கணும்' என்கிற எண்ணத்தில் அந்த சந்தர்ப்பங்களைத் தவற விடுவார்கள்.

இப்படிப்பட்ட குடும்பச் சூழலில் வளர்ந்தவர்களுக்கு அமையும் கணவனோ மனைவியோ, எப்போதும் 'உனக்கு உன் குடும்பம்தான் முக்கியம்' என்று புகார் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு 'இது ஒரு இலட்சியக் குடும்பம்' என்று தோன்றும்; ஆனால் இதில் மணம் முடித்தவர் 'என் கணவனுக்கு / மனைவிக்கு நான் தேவைதானா?' என்று புழுங்குவர்! பின்னிப்பிணைந்த குடும்பங்களில் தனி நபரது வளர்ச்சி பின்னே தள்ளப்பட்டு, குடும்பம் சேர்ந்து இருப்பது முன் வைக்கப்படும். அதாவது 'நான்' என்பதற்கு முன் 'நாம்' இருக்கும்.

மறுகோடியில் உள்ள, நவக்கிரகங்களாக வாழும் குடும்பங்களின் அங்கத்தினர்கள் தனித் தீவுகளாக வாழ்வார்கள். பாசம், உணர்வுபூர்வமான ஒரு பிணைப்பு, சுமுகமான ஒரு தொடர்பு இவையெல்லாம் இங்கு அபூர்வமான பொருட்கள்! இப்படிப்பட்ட சூழலில் வளரும் நபர்களுக்குப் பாசம் காட்டத் தெரியாது; சிலர் பாசத்திற்காக ஏங்குவார்கள். 'நாம்' என்பதே குறைந்துபோய், 'நான்' என்பது தான் முதலில் வரும். பிணைப்பு மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், பிணைப்புகளற்ற ஒரு குடும்பத்தில் மணம் செய்துகொள்கிறபோது, இரண்டு விதமான பாதிப்புகள் வரலாம். ஒன்று, 'பாசமாவது, ஒண்ணாவது! எல்லாம் வேஷம்' என்று விலகியிருக்கும் தன்மை. அல்லது, 'எனக்குக் கிடைக்காத ஒன்று இங்கு கிடைக்கிறதே!' என்று ஒட்டிக்கொள்ளும் தன்மை.

வைகோவின் சுவாரஸ்யமான மேடைப் பேச்சுக்கள் கட்சித் தொண்டர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, சுடச்சுட புத்தக வடிவம் பெற்று வருகின்றன. அவை கட்சிப் பிரமுகர்கள் வீட்டுத் திருமண நிகழ்ச்சிகளின்போது வெளியிடப்படுகின்றன.



இவை இரண்டுக்கும் இடையே விளங்கும் குடும்பங்கள் ஓரளவு சமநிலையில் இருப்பவை (balanced families). பாசத்தைப் பொருத்தவரை 'ஃபெவிகால்' ஈஷல் கிடையாது; ஆனால் மிதமான, இதமான பாசம் உண்டு. தனிநபர் சுதந்திரம் மிகையாக இல்லாமல், அளவோடு இருக்கும். இப்படிப்பட்ட குடும்பங்கள், தனிநபர் வளர்ச்சியை முன் வைத்துச் செயல்படும். வாழ்க்கையில் ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்தால், குடும்பத்துக்காக அதைத் தவறவிடாமல் ஏற்றுக்கொள்ளச் சொல்லி மற்றவர் வலியுறுத்துவர். விலகிப் போவதால் பாசம் குறையாது என்றும், சோதனைக் காலத்தில் கைகொடுப்பது அவசியம் என்றும் நம்புபவர்கள் இவர்கள். சுருங்கச் சொன்னால், இந்தச் சமநிலையில் உள்ள குடும்பங்களில் 'நான்' என்பதும் 'நாம்' என்பதும் சூழ்நிலையின் தேவையைப் பொறுத்து அமையும்.

எல்லாக் குடும்பங்களும் இந்த மூன்று ரகங்களில் அடங்கிவிடும் என்று நான் சொல்லவில்லை. உறவு எனும் கோட்டில் ஏதாவது ஒரு புள்ளியில் குடும்பங்கள் வரலாம். அனிதாவின் குடும்பம் எங்கே என்று பரத்தும், பரத்தின் குடும்பம் எங்கே என்று அனிதாவும் தெளிவாகக் கணித்திருப்பார்கள். ஆனால் அந்தக் கணிப்பை இருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமே! அங்குதான் பிரச்னை.

குடும்பங்களைப் பற்றி நான் முதலில் சொல்ல வந்ததன் காரணம் - ஒரு சமுதாயத்தின் அச்சாணி குடும்பம்; அது ஆரோக்கியமாக அமைந்துவிட்டால் சமுதாயமே மேம்படும். எப்படி...?

(சொல்கிறேன்)

மாடல் படம்: ஸ்ரீஹரி



அருள்வாக்கு

சாதாரணமாக எல்லா ஜனங்களுக்குமே தெய்வ சிந்தனை இருக்கத்தான் வேண்டும். மநுஷ்ய ஜீவன் அந்தப் பெயருக்கு லாயக்காக இருக்க வேண்டுமானால் தனக்கு ஜீவ சக்தியைக் கொடுத்த ஸ்வாமியைச் சிந்தித்து, அவன் அருள் வழிகாட்டுகிறபடிதான் ஜீவனம் நடத்த வேண்டும். இந்த (தெய்வ) சிந்தனை நாமே பண்ணுவதாக இருந்தால், நம்முடைய சித்தம் ஓடுகிற தாறுமாறான ஓட்டத்தில் உருப்படியாக ஒன்றும் தேறாது. அது மாத்திரமில்லாமல் நமக்கு ஸ்வாமியைப் பற்றி சொந்த அநுபவமாக என்ன தெரியும்? நமக்குத் தெரியாதவரைப் பற்றி நாம் என்னத்தைச் சிந்திக்க முடியும்? இங்கே, அப்படித் தெரிந்து கொண்ட பெரியவர்கள் பாடிய ஸ்தோத்திரங்கள் - தமிழ் முதலான ப்ரதேச பாஷைகளில் இருக்கிற துதிகளுந்தான் - நமக்கு கைகொடுத்துத் தூக்கிவிட ஓடி வருகின்றன. பல காலமாக அவற்றை, ஸ்வாமியை சொந்தத்தில், நேரில் தெரிந்துகொண்ட எத்தனையோ பேர் சொல்லிச் சொல்லி அவற்றுக்கு தெய்வீக சக்தி கூடிக்கொண்டே வந்திருக்கும். அவற்றைச் சொல்வதே, அதாவது, 'ஸ்தோத்ர பாராயணம்', 'துதி ஓதுதல்' என்பதே நம்முடைய சித்தத்தை ஸ்வாமியிடம் சேர்த்து வைக்கும்.

நம் தேசம் செய்த பாக்கியம், இம்மாதிரி ஸ்துதிகள் ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்துக் கணக்கு வழக்கு இல்லாமலிருக்கின்றன. நம் தேசத்திலும் இந்தத் தமிழ்நாட்டில் பிறந்தவர்களின் பாக்கியம், இங்கே தோன்றிய நம் முன்னோர்கள் நம்முடைய தமிழ் பாஷையில் துதிகளை அப்படியே கொட்டிவைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஜனங்கள் அவரவரும், தாங்களே படித்துப் பாராயணம் பண்ணலாம். குருமுகமாகக் கற்றுக்கொண்டுதான் பண்ணணும் என்று கண்டிப்பு இல்லை. அநுபவம் கண்ட குரு எடுத்து வைத்துப் பண்ணினால் அது ரொம்ப விசேஷந்தான்; ஸந்தேஹமேயில்லை. ஆனால் அப்படிக் கட்டாயமாக விதி இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: திருமணம் ஆகாத ஆண் / பெண்களுக்குத் திருமணம் கைகூடும். நீண்ட நாள் குழந்தைப் பேறு இல்லாத வர்களுக்கு குழந்தைப் பேறு ஏற்படும். கணவர் / மனைவி உறவு நன்றாக இருக்கும். மாணவ, மாணவிகள் படிப்பில் முன்னேற்றம் இருக்கும். உத்தியோகஸ் தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வியா பாரிகளுக்குத் தொழில் முன்னேற்றம் கிட்டும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்து வந்தால் மனதில் நிம்மதி ஏற்படும்.

ரிஷபம்: ஆடை அலங்காரப் பொருட் கள் வாங்குவார்கள். வழக்கு வெற்றி அளிக்கும். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். தடை விலகி திருமணம் நடக் கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். மனதில் தன்னம்பிக்கை பிறக்கும். சிலருக்கு புதிய வேலைவாய்ப்பு கள் வீட்டுக் கதவைத் தட்டும். குழந்தைப் பேறு ஏற்படும். வியாழன்தோறும் குரு ப்ரீதி செய்து வரவும். ராகு / கேது வழி படுதல் நல்லது.

மிதுனம்: சிலருக்கு அயல்நாடு செல் வது பற்றி நல்ல தகவல் வரும். தனம், குடும்பம் மேன்மை பெறும். நீண்ட நாள் முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிடைக்கும். வியாபாரி களுக்குத் தொழில் சுறு சுறுப்பாகும். திருமணம் நடக் கும். ராகு / கேது வழிபடுதல் நற்பலனை அளிக்கும்.

கடகம்: சாதனை படைக்கும் வாரம். உத்தியோகத்தில் பதவி உயர்வு, இட மாற்றம் வரும். வேலை தேடுபவர்களுக்கு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக் கும். திருமணம் நடக்கும். வியாபாரி களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் ஆரம்பிக்கலாம். மாணவ, மாணவிகள் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள். தட்சிணாமூர்த்தி சுவாமியை வியாழன்தோறும் ஈஸ்வரன் கோயில் சென்று வழிபட்டு வரவும்.

சிம்மம்: நன்மையும் தீமையும் கலந்த வாரம். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. அவசரப்பட்டு வேலை மாற வேண்டாம். வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. உடல் நிலையில் கவனம் தேவை. கணவன், மனைவி விட்டு கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். புதிய முதலீடு செய் பவர்கள் அவசரப்பட வேண்டாம். மாற்றுப் பெயரில் செய்யவும். உத்தி யோகஸ்தர்கள் ஒத்துப்போவது நல்லது. பணப் பற்றாக்குறை இருக்கும். சிக்கனம் தேவை. ஆஞ்ச நேயரை வழிபட்டு வந் தால் நற்பலன் கிடைக்கும்.




கன்னி: மேன்மையான வாரம். திருமணக் காரியம் கைகூடும். மாணவ/ மாணவிகள் படிப்பில் முன்னேற்றம் அடைவார்கள். புத்திர பாக்கியம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல பதவி கிடைக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். வீடு வாங்க நல்ல நேரம். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிடைக்கும். குழந்தைகளால் சந்தோஷம்

கிட்டும். பேச்சில் கவனம் தேவை. ராகு / கேது வழிபட்டு வருதல் நலம் தரும்.

துலாம்: நற்பலன் அளிக்கும் வாரம். வழக்கு வெற்றி பெறும். திருமண காரியம் கைகூடும். இதுநாள் வரை இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். வீடு வாங்க நல்ல காலம். வியாபாரத்தில் நற்பலன் கிடைக்கும். அயல்நாட்டு நிறுவனத்தில் பணி கிடைக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நலம் தரும். குரு வழிபாடு செய்து வரவும்.

விருச்சிகம்: அற்புதமான வாரம். வீடு / வாகனம் வாங்கலாம். ஆடை அலங்காரப் பொருட்கள் சேரும். தடை விலகி



திருமணம் நடக்கும். புத்திர பாக்கியம் கிட்டும். உத்தியோகஸ்தர்கள் மேன்மை அடைவார்கள். மேல்நாட்டு வேலை கிடைக்கும். கணவன், மனைவி உறவு

நற்பலனை அளிக்கும். புதிய தொழில் துவங்கலாம். ஆரோக்கியம் பாதிக்காது. குழந்தைகள் வழியில் சந்தோஷம் உண்டாகும். வியாபாரிகளுக்கு நல்லது நடக்கும். சத்ரு தொல்லை விலகும். குரு / ராகு / கேது வழிபடுதல் நலம் தரும்.

தனுசு: சுபகாரியம் நடக்கும் வாரம். வழக்கு வெற்றி பெறும். பணப்பற்றாக்குறை இருக்காது. புதிய தொழில் துவங்க நல்ல நேரம். வீடு / வாகனம் வாங்கலாம். திருமணம் தடை விலகி நடக்கும். புதிய வேலை கிடைக்கும். புத்திரப் பேறு கிட்டும். வியாபாரிகளுக்குப் பொற்காலம். ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நற்பலனை அளிக்கும். ராகு / கேது / வழிபடவும்.

மகரம்: தெய்வபலம் இருக்கிறது. புண்ணிய ஸ்தலங்கள்



படம் : ஸ்ரீஹரி

தஞ்சை பரத்வாஜ்

பரத்வாஜ் பதில்கள்

● **எனது மகன், அமெரிக்கா சென்று அங்கேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு தங்கிவிட்டான். எங்களைப் பார்க்க வருவது இல்லை. பேசுவது கூட குறைந்து போய் விட்டது. எங்களைப் பார்க்க வருவானா?**

- வி.சி. ராஜகோபாலன், ஹைதராபாத்

தங்கள் மகனுக்குத் தற்போது சூரியதசை நடை பெற்று வருகிறது. அதனால் பிறந்த குடும்பத்துக்கு கஷ்டத்தை அளித்து வருகிறது. சந்திரதசை ஆரம்பமாகும் காலத்தில், உங்கள் மகன் ஊருக்குத் திரும்பும் பாக்கியம் வரும்.



● **என் பையனுக்குத் திருமணம் எப்பொழுது நடக்கும்? மருமகள் வேலை பார்ப்பவளாக அமைவாளா?**

- வி.வி.ரமணி, சென்னை

உங்கள் பையனுக்கு 2006 ஆரம்பத்தில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு மேற்கு / தெற்கு திசையில் உடன் பிறப்பு இருவர் உள்ள இடத்தில், வேலை பார்க்கும் பெண் அமைவாள். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகமாகச் சேர்க்கவும்.

● **என் மகளுக்குச் சரியான வரன் அமையவில்லை. எப்போது வரன் அமையும்?**

- ஏ.எஸ்.ஏ. ஸ்ருதி, கோவை

உங்கள் பெண்ணுக்கு 25 வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு வடக்குத் திசையில், உடன் பிறந்த இருவர் உள்ள இடத்தில் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகரைப் பார்க்கவும்.

● **நான் பி.இ. முடித்து, சென்னையில் ஒரு நிறுவனத்தில் அப்ரண்டிஸாக பணிபுரிகிறேன். அதே நிறுவனத்தில் எனக்கு நிரந்தர வேலை கிடைக்குமா? வெளிநாடு செல்லும் வாய்ப்புள்ளதா?**

- ரா.சுவாமிநாதன், சென்னை

உங்களுக்கு இந்தியாவில் நிரந்தர பணி அமையாது. வெளிநாட்டில் வேலை செய்யும் யோகம் உள்ள ஜாதகம். கடல் கடந்து போக முயற்சி செய்யவும். 26 வயதுக்குள் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். எதிர் காலம் நன்றாக இருக்கும்.



செல்வீர்கள். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ரெடி. வியாபாரிகள் புதிய தொழில் துவங்கலாம். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். மாணவ, மாணவியர் படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள். அந்நிய தேச மனுஷரால் நற்பலன் ஏற்படும். குரு வழிபாடு செய்து வருதல் நலம். ஆஞ்சநேய வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.





கும்பம்: வெளிநாட்டு வேலை கிடைக்கும். ஆரோக்கியம் பாதிக்காது. புதிய தொழில் துவங்கலாம். வீடு / வாகனம் / ஆடம்பரப் பொருட்கள் சேரும். மாணவ, மாணவியர் படிப்பில் கவனம் தேவை. திருமணம் ஆகாத ஆண், பெண்களுக்கு திருமணம் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு பாராட்டு காத்திருக்கிறது. செலவுகள் கட்டுக்குள் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ராகு / கேது ப்ரீதி செய்யவும். நற்பலன் கிடைக்கும்.

மீனம்: கவனமுடன் செயல்பட வேண்டிய வாரம். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். குழந்தைகளால் சுபச் செலவுகள் ஏற்படும். மாணவ, மாணவியர் படிப்பில் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது உஷார். நண்பர், உறவினர் மூலம் நற்பலன் ஏற்படும். வீடு வாங்கலாம். கணவன், மனைவி அனுசரணை தேவை. பொருளாதார பற்றாக் குறை இருக்கும். ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாற்றி தரிசித்துவர, சகல பீடைகளும் விலகி சுபிட்சம் ஏற்படும்.



○



புக் சாட்

"வஸந்த், விஷயம் தெரியுமா?" என்றபடியே வந்தாள் ஸ்ரேயா.

"என்ன, உனக்கு யாராச்சும் லவ் லெட்டர் கொடுத்தானா, பாவம்" என்றான் வஸந்த்.

"நீ உருப்படப் போறதில்ல. கேளு... தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஆகஸ்ட் மாசம் ஒரு மாநாடு நடத்தியிருக்கு. வல்லிக்கண்ணன், வீ.அரசு, டி.செல்வராஜ்னு முக்கிய எழுத்தாளர்களெல்லாம் வந்து தமிழ் இலக்கியத்தைப் பத்தியும் இப்போதைய ட்ரெண்ட்ஸ் பத்தியும் ரொம்ப முக்கியமான கட்டுரைகளை வாசிச்சிருக்காங்க... அந்த எல்லா கட்டுரைகளும் ஒரு புக்கா வெளிவந்திருக்கு. பேரு மனிதம். கட்டாயம் நீ படிக்கணும். மீடியா பாலிடிக்ஸ், புதுக்கவிதை, புதுமைப்பித்தன், காஸ்ட் சிஸ்டம் இப்படி நிறைய டாபிக்ஸ் இருக்கு. நாலு நாள் உட்கார்ந்து டிஸ்கஸ் செய்யற அளவுக்கு நிறைய விஷயங்கள் இருக்கு."

"பை தி வே... நான் கூட ஒரு முக்கியமான புக் படிச்சேன். ஸ்டாலின் குணசேகரன் தொகுத்திருக்காரு. புக் டைட்டில் தேச விடுதலையும் தியாகச் சுடர்களும். இதுவும் ஒரு கலெக்‌ஷன் தான். படிக்கும்போது ரொம்ப ஆச்சரியமா இருக்கு. சுதந்தரத்துக்காக பாடுபட்ட முக்கியத் தலைவர்களோட வாழ்க்கைக் குறிப்புகள், சம்பவங்கள், சாதனைகள் எல்லாம் சிறுகதைகள் மாதிரி சொல்லியிருக்காங்க."

"ஆச்சரியமாயிருக்கு. எப்பப் பார்த்தாலும் கொட்டக் கொட்ட கண்முழிச்சி கவிதைகள் படிச்சிட்டிருப்பே. இப்போ கவிதையை மறந்துட்டியா?"

"யாரைப் பார்த்து என்ன கேட்கறே? இன்னைக்குக் காலைல கூட 'ஈ' தேய்ச்ச கையோட ஒரு ஹைக்கூ தொகுப்பு படிச்சேன், சிரிப்பின் முகவரி. எல்லாமே குழந்தைகளைப் பத்தின கவிதைகள். எழுதினது ந.க. துறைவன். பரவால்ல ரகம்."


"அட பரவாயில்லையே!"

"என்ன பரவாயில்லையே?"

"நீகூட டெய்லி பல் எல்லாம் தேய்க்கிறியா? எனக்குத் தெரியாம போச்சே."







மனிதம்

தொகுப்பாசிரியர் : பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், புதிய எண்.26 (பழைய எண்.18), வெங்கடாசல நாயக்கன் 3வது சந்து, சென்னை - 600 005.

தேச விடுதலையும் தியாகச் சுடர்களும்

த.ஸ்டாலின் குணசேகரன், குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை - 600 017.

சிரிப்பின் முகவரி

ந.க.துறைவன், இருவாட்சி, 41, கல்யாணசுந்தரம் தெரு, சென்னை - 600 011.



எங்கே என் கண்ணன்?

'போருக்குள் ஓடிய
தேருக்கும் நானே சாரதி...
பாருக்குள் எனைத்தேடிடும்
யாருக்கும் நானே சாரதி!'

- ஸ்ரீ கிருஷ்ணன்

அந்தக் கையெழுத்து ஒற்றுமை சீனுவைக் கொஞ்சம் ஸ்தம்பிக்க வைத்தது. அதை அப்படியே அவர் முகத்தில் எதிரொலித்தார்.

"என்னன்னா... ஏட்டையும் நோட்டையும் மாறிமாறிப் பாக்கறேன்..". ராஜம் கவனித்துவிட்டுக் கேட்டாள்.

"ஆமாம் ராஜம்... இது பலநூறு வருஷத்து ஏடு. இதுவோ இப்ப இந்த கணேஷ்ங்கற அம்பியோட ஃபைல். இரண்டுலேயும் கையெழுத்து ஒண்ணு மாதிரி இருக்கே. எப்படி ஆச்சரியப்படாம இருக்க முடியும்?"

"தற்செயலா எவ்வளவோ லோகத்துல நடக்கறது. அந்த மாதிரி இருக்கலாம் இல்லையா?"

"இப்போதைக்கு அப்படித்தான் எடுத்துக்க முடியும்..."

"சரி, அந்த ஏடும் நோட்புக்கும் என்ன தான் சொல்றது?"

"யாரோ ஒரு ஹரிபக்தர் அஷ்டபதி மாதிரி கண்ணன் மேலே ஸ்லோகங்கள் சொல்லியிருக்கார். தான் ஜென்மா எடுத்ததே கண்ணன் பேரைச் சொல்ல மட்டும்தாங்கறார். அதுக்கு இடைஞ்சலா சாப்பாடு, தூக்கமெல்லாம் வந்து தொலைக்கறதே... பசியும் உறக்கமும் இல்லாத, அது இரண்டையும் ஜெயிச்ச ஒரு உடம்பை கண்ணா நீ எனக்குத் தர மாட்டியான்னு கண்ணன்கிட்டேயே கேட்கறார்.

நீ எட்டாவதா பொறந்தே... அந்த எட்டுக்கு ஒரு பிரணம் இருக்கு. உனக்கு முந்திப் பொறந்த ஏழை, காலம் பலி வாங்கிடுத்து. எட்டாவதா பிறந்த நீதான் லோக ரட்சகன் ஆனே... ஆறறிவுள்ள மனுஷன் ஏழான சப்தத்தாலே உன்னை எட்டணும்னு சொல்லாமச் சொல்லத்தான் நீ எட்டாவதா பிறந்தியோன்னு சொல்லிண்டு போறார்..."

"பிரமாதம்... என்ன ஒரு கற்பனை..." ராஜம் சிலிர்ப்புடன் ஸ்லாகித்தாள்.

அப்போது "கற்பனைதான்... மனுஷனுக்கு முழுச் சுதந்திரம் அதுல தானே இருக்கு. அதான் அந்தக் காலத்துல இப்படி மனசுல பட்டதையெல்லாம் எழுதி வெச்சுருக்கா போல இருக்கு..." என்கிற பதிலோடு அவர்கள் எதிரில் வந்து நின்றான் கணேஷ். கூடவே அனுராதா என்கிற அந்த லேடி ஜர்னலிஸ்ட்!

"என்ன அம்பி, நாம கிளம்பலாமா?" என்றார் சீனு.

"தாராளமா... வாசல்ல கார் ரெடியா இருக்கு. நீங்க கிளம்புங்கோ..." என்றவன், அனுராதா பக்கம் திரும்பி "மிஸ் அனுராதா... இதுதான் இப்போதைக்கு எனக்குன்னு உள்ள அறை... நாங்களும் இப்ப

இந்திரா சௌந்தர்ராஜன்

கயாவுக்குப் புறப்பட்டுக்கிட்டிருக்கோம். தற்காலிகமா நீங்க இங்க தங்கறதுன்னா தங்கிக்கலாம்'' என்றான். அவளும் அறையை ஒரு பார்வை பார்த்தாள். ''நல்லா இருக்கு... நான் இங்கேயே தங்கிக்கறேன்...''என்றாள்.

ராஜமும் சீனுவும் அவள் யார் என்கிற மாதிரி கணேஷைப் பார்க்க,

''சார்... இவங்க பேர் அனுராதா! சென்னைல இருந்து வந்திருக்கற ஜர்னலிஸ்ட். தீபாவளி மலர்ல இந்த காசி பற்றி ஒரு கட்டுரை எழுதணுமாம். அதுக்காக வந்திருக்காங்க. வழியில பார்த்தேன். ஹோட்டல்ல தங்கத் தயங்கினாங்க. அதான் இங்க கூட்டிக்கிட்டு வந்தேன். நாம கிளம்பின பிறகு இந்த அறை சும்மாத்தானே இருக்கும். இவங்களுக்குப் பயன்படட்டுமே''



என்று கணேஷ் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தான்.

"தனியாவா வந்துருக்கா?" ராஜம் அகண்டு விட்ட கண்களுடன் கேட்டாள்.

"அம்மாடி... அந்தத் துணியெல்லாம் மடித்துணி. அது மேல பட்டுடாதே" என்றாள் ராஜம். மூவரும் புறப்பட்டனர்.

சென்னை.... உம்மென்றிருந்தாள் சாரு! வழக்கம் போலவே பரபரப்பாக ப்ரீஃப்கேசுடன் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் சம்பத்.

"சாரு... நான் ஆபீஸ் புறப்படறேன்" என்றவனை அவள் பார்த்த பார்வையில், அவன் மேல் பெட்ரோல் சிந்தியிருந்தால் அப்படியே தீப்பிடித்திருக்கும். அவனுக்கும் அவள் பார்வைக்கான பொருள் புரிந்தது.

"இதோ பார் சாரு... நீ கூப்பிடும் போதெல்லாம் நான் டாக்டர்கிட்ட வர மாட்டேங்கறன்னு உனக்குக் கோபம். எனக்கு நன்னா தெரியறது. நீ குழந்தைக்காக ஆனாலும் அவசரப்படறே. என் அப்பாவும் அம்மாவும் அனேகமா கங்கைக் கரைல அந்த நாடி ஜோசியன் சொன்ன பரிகாரங்களை செய்து முடிச்சிருப்பா. நாம சந்தோஷமா நார்மலா இருந்தா போதும். நிச்சயம் நமக்குக் குழந்தை பொறக்கும். ஆகையால இந்த டாக்டர், அப்புறம் இந்த குறுக்கு வழியெல்லாம் வேண்டாம். நான் கிளம்பறேன்..." என்று ஒரு குறுமழை கொட்டியது போல கொட்டியவன், விறு விறுவென்று நடந்து காரில் ஏறிக் கொண்டு போயேவிட்டான். பக்கத்தில் மேஜைக்குள்தான் கிடந்தது அவர்களது மெடிக்கல் ரிப்போர்ட்.

குறிப்பாக அவளுக்கான ரிப்போர்ட்டும் அதைக் கையில் ஆட்டிக் கொண்டு டாக்டர் அவளுக்கு செய்த அட்வைசும் அவள் மனக் கண்ணில் ஓர் ஓட்டம் ஓட ஆரம்பித்தது.

"சாரி சாரு... எந்த மெதட்லயும் உங்களுக்குக் குழந்தை பிறக்க வாய்ப்பு இல்ல. ஏன்னா உங்க கணவர்கிட்ட குறையிருந்தாகூட செமன் பாங்கில் இருந்து எடுத்துக்கலாம். ஆனா உங்ககிட்டதான் பிராப்ளமே... உங்க கர்ப்பப்பை போதிய வளர்ச்சியடையல. லட்சத்துல ஒரு கேஸ் இப்படி இருக்கிறது சகஜம். இந்த மாதிரி கேஸ் விஷயத்துல கொஞ்ச நாள் நம்பிக்கையா பேசுவோம். அதுக்குப் பிறகு தம்பதிகளோட மைண்ட் எப்படி இருக்குன்னு பார்த்துட்டு உண்மையைச் சொல்லிடுவோம். உங்களுக்கு இருக்கற ஒரே வாய்ப்பு, அனாதைக் குழந்தையை தத்தெடுத்துக்கறதுதான்... பிறந்து ஒரு வாரம், பத்து நாள் ஆன குழந்தைகளுக்கு ரிசர்வேஷன் இருக்கு. நீங்க இப்பவே போய் பதிவு பண்ணிட்டுக் காத்திருந்தா, அதிகபட்சம் மூணு வருஷத்துக்குள்ள உங்களுக்கு ஒரு பேபி

புள்ளி விவரப் புலி!



கிடைக்க வாய்ப்பு உண்டு. சட்டப்படி உங்களுக்குப் பிறக்கற குழந்தைக்கு உள்ள அவ்வளவு ரைட்ஸும் அந்தக் குழந்தைக்கும் உண்டு. தத்தெடுத்தாலும் அதை மறந்துட்டு உங்க குழந்தையா பாவிக்கத் தொடங்கிட்டா, காலப்போக்குல எல்லாம் நார்மலாயிடும்.

இன்ஃபாக்ட் பெத்த குழந்தைமேல காட்டற பாசம் பரிவைவிட ஒரு அனாதைக்குக் காட்டற பாசமும் பரிவும் பல மடங்கு மேலானதும் கூட...''

- டாக்டர் சொல்லிவிட்டு போய்விட்டார். ஆனால், அதை எப்படி சம்பத்திடம் சொல்வது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

அவளுக்குள் கன்னாபின்னாவென்று பயம் வேறு. இந்த உண்மை தெரிந்து சம்பத்துக்கு இரண்டாம் தாரமாக யாரை யாவது சீனு கல்யாணம் செய்து வைத்து விடுவாரோ என்றும் ஒரு கற்பனை... எதை வைத்துக்கொண்டு பரிகாரங்கள் செய்தால் குழந்தை பிறக்கும் என்று நாடி ஜோசியன் சொன்னான்..? - கேள்வியும் பயமுமாக குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே இருந்தாள். அப்போதுதான் தொலை பேசியும் கூப்பிட்டது. கனத்த மனதோடு போய் காதைக் கொடுத்தாள்.

"யாரு– சாருவா?"- மறுபக்கம் ராஜம்.

"ஆங்....அ...அம்மாவா?"

"ஆமாம் அம்மாதான் பேசறேன். எல்லாப் பரிகாரத்தையும் பண்ணியாச்சு. அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன். கயாவுல கங்கைல குளிச்சுட்டு கரை ஏறினோம். சொல்லி வெச்ச மாதிரி எதிரே இருபத்தியோரு சன்யாசிகள்... அவ்வளவு பேருக்கும் வெத்தல பாக்குல தட்சணை வெச்சுக் கொடுத்துட்டு அவரும் நானும் அவா பாதங்கள்ல விழுந்து சேவிச்சோம். இருபத்தியோரு பேர்... தலைக்கு நாலு நமஸ்காரம்! கணக்குப் போட்டுக்கோ... எனக்கு இப்பக்கூட மூச்சு வாங்கறது... மொத்தமா எண்பத்தி நாலு நமஸ்காரம். அதைப் பார்த்துட்டு ஒருத்தர் சொன்னார் - கங்கைல மூழ்கினப்பவே உங்க மனசு எல்லா பாவமும் போயிடிச்சுன்னு நினைச்சிருக்கும். ஒரு இறுக்கம் தளர்ந்து நீங்க சுவாசிக்கற விதத்துலயும் நீங்க உணர முடியாத ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். அமைதி கிடைச்சிருக்கும்.

நீங்க எதுக்காக இந்தக் கங்கைக் கரைக்கு வந்தீங்களோ அது ஈடேறியே தீரும்னார். இவரும் அதைக் கேட்டு அப்படியே ஆனந்தக் கண்ணீர் விட்டார். இதை எல்லாம் உடனே பகிர்ந்துக்கத்தான் போன் பண்ணேன்.

நீ வேணா பாரு... எண்ணி பத்தே மாசம் நீ அம்மாவாகப் போறே. ஆமா... எங்க சம்பா... ஆபீஸ் போய்ட்டானா?" ராஜம் வர்ஷித்து தள்ளி விட்டாள்.

"ஆமா... அம்மா..."

அதே சமயம் ஆபீஸ் கனெக்ஷனுள்ள போனிடம் அலறல். அப்படியே இந்த ரிசீவரை விடாமல் அதையும் எடுத்துக் காதில் வைத்தாள்.

"சாரு... நான்தான்! சாரி டியர்... நான் பாட்டுக்கு விறுவிறுன்னு கிளம்பி வந்துட்டேன். திடீர்னு என் மனசு லேசாயி காத்துல மிதக்கற மாதிரி ஒரு ஃபீலிங். அப்படியே ஜாலியா எங்கேயாவது போய்ட்டு வரலாமான்னுல்லாம் தோண்றது. இங்கேயும் இன்னிக்குப் பெருசா வேலை இல்லை. லீவு போட்டுட்டு வரேன். வெளிய போவோமா?"

- ராஜம் சொன்னதற்கான சாட்சி போல பேசினான் சம்பத். கொஞ்சம் இன்ப அதிர்வாகக் கூட இருந்தது.

"கிளம்பி வாங்கோ... எனக்கும் உங்க கிட்ட நிறைய பேசணும்" என்றவள், ராஜத்திடம் திரும்பியவளாக "அம்மா ரொம்ப சந்தோஷம்மா... இனி என்கிட்டே எதுவும் இல்லை... உங்க கைலதாம்மா எல்லாம் இருக்கு...'' என்றபோது அப்படியே உடைந்து விட்டாள்.

(தொடரும்)

தி.மு.க.



சமீபகாலமாக தி.மு.க மேடைகளில் துரைமுருகன் கையில் கோலோடு காட்சி தர ஆரம்பித்துள்ளார். இதற்கு முன் தி.மு.கவில் நாஞ்சில் மனோகரன்தான் கையில் கோல் வைத்திருப்பார். பின்னர் 'மந்திரக்கோல் மைனர்' என்று அவர் விமர்சிக்கப்பட்டது தனிக்கதை.



அண்மையில் பெய்த பேய்மழை, சென்னையை அடியோடு புரட்டிப் போட்டுவிட்டது. சென்னையின் ஒவ்வொரு அங்குலமும் வெள்ளக்காடாக மாறியிருக்கிறது. மழை ஓய்ந்து பல நாட்களாகியும் இன்னும் நிறைய இடங்களில் மழைநீர் வடிந்த பாடில்லை.

இந்த அளவிற்கு நிலைமை மோசமாக என்ன காரணம், இனி என்னென்ன செய்தால் இதுபோன்ற நிலைமை வராமல் தடுக்க முடியும் என்பது குறித்து பொதுப் பணித்துறையின் முன்னாள் தலைமைப் பொறியாளர் சி.எஸ்.குப்புராஜிடம் பேசினோம். மிகுந்த ஆர்வத்துடன் பேசியவர், இதுபோன்று எதிர்பார்த்த - எதிர்பாராத மழைக்காலங்களில் எப்படி சென்னையைப் பாதுகாப்பாக வைத்திருக்கலாம்; எப்படிச் சிக்கலின்றி நம்பணியைத் தொடரலாம் என்பது குறித்து டிப்ஸ் மழை பொழிந்தார்.

"இந்த அளவுக்கு அதிகமா மழை பெய்யும்னு யாருமே எதிர்பார்க்கலைங்கறது வாஸ்தவம்தான். ஆனா அதையே காரணமா சொல்லித் தப்பிக்க முடியாது. ஏன்னா இது காலந்தவறி வந்த மழையில்ல. காலாகாலத்துல வந்த மழைதான். ஆனா முறையான முன்னேற்பாடுகளை முன்கூட்டியே கணிச்சு செயல்பட்டிருந்தா, இவ்வளவு தூரம் சென்னையே தத்தளிக்கற அளவுக்கு நிலைமை வந்திருக்காது.

இவையனைத்துக்கும் காரணமா நாலைந்து முக்கியமான விஷயங்களைச் சொல்லலாம். சிட்டிக்குள்ள இருக்குற பக்கிங்காம், ஓட்டேரி நள்ளா போன்ற கால்வாய்கள் ரொம்ப நாளாத் தூர்வாரப்படாம அப்படியே கிடக்கு. இதனால இந்தக் கால்வாய்களுக்குப் போய்ச் சேர வேண்டிய மழைநீர் வெளிலயே தேங்கிடுது. அடுத்து இந்த ஏரிகள்ல இருந்து வெளியேறும் உபரிநீர்க் கால்வாய்கள்ல, பொதுமக்கள் சட்டவிரோதமா வீடுகளைக் கட்டி ஆக்கிரமிப்பு செய்திருக்காங்க. அதேபோல, பக்கிங்காம் கால்வாய் சிந்தாதிரிப்பேட்டையில இருந்து தரமணி வரைக்கும் பத்து கி.மீட்டருக்கு, பறக்கும் ரயில் பாலத்துக்கான பணிகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கு. இதனால அங்கயும் தண்ணி தேங்கியிருக்கு.

சென்னைல கூவமாறு, அடையாறு, குசஸ்தலையாறு, ஆரணியாறுன்னு நான்கு ஆறுகள் இருக்கு. இதுக்கு சென்னைப் படுகைன்னு பேரு. இதுல நான்கு நீர்த்தேக்கங்களும், 1519 ஏரிகளும் இருக்கு. இவையெல்லாம் முறையா தூர்வாரப்படாம, சுத்தப்படுத்தப்படாம வீணாப் போயிட்டு இருக்கு. எல்லா ஏரிப்படுகைகளும் அரசியல் செல்வாக்கு கொண்டவர்களால சட்டவிரோதமா ஆக்கிரமிக்கப்பட்டிருக்கு. இதனால நியாயமா ஏரிகள்ல போய்ச் சேர வேண்டிய மழைநீர் வேற வழியில்லாம குடியிருப்புப் பகுதிகளுக்கு வந்து தேங்கிடுது.

அடுத்து மழைநீர் சேகரிப்புக் கால்வாய்கள் மற்றும் குழாய்கள்... கோடிக்கணக்கான ரூபாய் செலவழிச்சு உருவான இந்தத்



மழையைப் பழிக்காதீர்கள்!



திட்டம் முறையான பராமரிப்பு இல்லாததால, குழாய்கள்ல குப்பைக் கூளங்கள் அடைஞ்சு, இந்த மழை நேரத்துல நமக்கு பலனளிக்காமப் போயிடுச்சு.." என்றவரிடம்,

"இனி என்னென்ன செய்தால் சென்னை மக்களுக்கு நிம்மதி கிட்டும்'' என்றதற்கு, "என்னிடம் இதற்கென சில திட்டங்கள் உள்ளன'' என்று ஆரம்பித்தவர், ஒவ்வொன்றாகப் பட்டியல் போட்டார் :

''குசஸ்தலை ஆற்றுக்குக் குறுக்கே திருக்கண்டலத்திலும் அடையாறின் குறுக்கே திருநீர்மலையிலும் புதிய நீர்த்தேக்கங்களும் தடுப்பணைகளும் கண்டிப்பாக உருவாக்கப்படணும்.. புழலேரியின் உபரிநீர்க் கால்வாய்ல ஐந்து தடுப்பணைகள் கட்ட வேண்டியிருக்கு. அதேபோல கூவம் ஆறுல இருக்கும் கேசவரம் அணைக்கட்டோட உபரிநீரைப் பயன்படுத்த ஜமீன் கொரட்டூர்ல ஒரு நீர்த்தேக்கம் அவசியம் கட்டியாகணும். பன்னிக்கரணை ஏக்கியம் மடுவுல ஒரு நீர்த்தேக்கம் தேவைப்படுது.

அதேபோல மாதவரம் ரெட்டை ஏரி - கொரட்டூர் ஏரி - அம்பத்தூர் ஏரி இவைகளோட கொள்ளளவைக் கண்டிப்பா காப்பாத்தியே ஆகணும். இல்லைன்னா பெரிய அளவுல சிரமப்பட வேண்டியிருக்கும். ஆரணியாற்றுக்குக் குறுக்கே உள்ள லட்சுமிபுரம் அணைக்கட்டு ரொம்ப மோசமான நிலைமையில இருக்கு. அதைக் கண்டிப்பா புனரமைச்சே ஆகணும். அடுத்து உள்ளூர் அணைக்கட்டின் கீழ் இருக்குற பதினாலு ஏரிகளோட கொள்ளளவை உயர்த்தறது ரொம்ப நல்ல பலனைத் தரும். இவையெல்லாத்தையும் செய்தா நிச்சயமா மழைநீர் ஒழுங்கா ஏரிகள்ல போய்த் தஞ்சம் புகுந்துடும். அப்புறம் எதுக்கு குடியிருப்புப் பகுதிகளுக்கு வரப்போகுது! இதைச் செய்யறதுக்கு மொத்தமா 180 கோடி ரூபாய் தேவைப்படுது. தெலுங்கு - கங்கைத் திட்டத்துக்கு 800 கோடியை ஆந்திரா கவர்மெண்ட்கிட்ட கொடுத்துட்டு வருஷா வருஷம் தண்ணீருக்காக கையேந்தறதை விட, இந்த மாதிரித் திட்டங்களைச் செய்தா நம்ம சென்னை மக்களுக்கு ஒரு நல்ல விடிவு கிடைக்கும். தண்ணியும் மிச்சமாகும்'' என்றார் உறுதியாக.

இவர் குறிப்பிடாத ஒரு பிரச்னையும் சென்னையின் வடிகால் வசதிகளை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது.

அனைத்து நீர்வடிகால்களையும் மக்கள் குப்பை மேடுகளாக்கிவிட்டனர் என்பதால், பெருமழை பெய்கிற காலத்தில் அந்தக் குப்பை மேடுகளை அடைத்துக்கொண்டு நிற்கும் பிளாஸ்டிக் உறைகள் நீர் உறிஞ்சப்படுவதையும் வடிவதையும் தடுத்து வெள்ளப் பெருக்கு விரைந்து நிகழ வழி வகுக்கிறது.

இதே பிரச்னை காரணமாக மும்பையில் பிளாஸ்டிக் உறைகள் தடைசெய்யப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது!

- கலை





• சி.எஸ்.குப்புராஜ்



திருச்சி 'வீடு' தொண்டு நிறுவனம். எஸ்.டி.டி அழைப்பு ஒன்று வருகிறது. ''நாங்கள் அமேதி தொகுதி எம்.பி. ஆபீசிலிருந்து பேசுகிறோம். எங்களுடைய எம்.பி. ராகுல் காந்தி, உங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ள திருச்சி வரவிருக்கிறார். உங்களுக்குச் சம்மதமா?''

தொலைபேசி வழியே குரல் தெளிவாக உரைக்க, கேட்டுக்கொண்டிருந்த 'வீடு' நிறுவன இயக்குநர் ராதாவுக்கு ஒரு நிமிடம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு நிமிடம்தான்... ஆனந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டவர், ''ம்'' என்றிருக்கிறார் மகிழ்ச்சியோடு. அவரிடம் ஒரே ஒரு கோரிக்கை மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது.

''ராகுல்ஜியின் வருகையை ரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் ஆடம்பரமான வரவேற்போ, பத்திரிகை விளம்பரங்களோ எதுவும் செய்யக் கூடாது. ஏனெனில் அவர் ஓர் அரசியல்வாதியாக அங்கு வருகைதர விரும்பவில்லை. உங்களுடைய தொண்டு நிறுவனச் செயல்பாடுகளை அறிந்து கொண்டு, அவைகளைத் தன்னுடைய தொகுதியில் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிற ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே வந்துவிட்டுப் போக எண்ணியுள்ளார்''



• 'ராஜீவை பார்க்குற மாதிரியே இருக்கு!'

சம்மதம் தரப்பட, கடந்த வாரத்தில் திருச்சி வந்தே விட்டார் ராகுல்.

அவரின் வருகை உள்ளூர் போலீசுக்கே அன்று காலைதான் தெரிந்துள்ளது. இது தன்னுடைய பர்சனல் விசிட் என்பதால், பெரிய அளவில் பாதுகாப்பு எதுவும் செய்திட வேண்டாம் எனக் கூறியிருக்கிறார் ராகுல் காந்தி. மேலும் கட்சிப் பிரமுகர்கள் எவரையும் இந்தப் பயணத்தில் அவர் சந்திக்க விரும்பவுமில்லை திட்டமிடவுமில்லை.



காலை பதினொரு மணிக்கு, ஸ்ரீரங்கம் ராயர் தோப்பு, 'வீடு' அமைப்பின் நிர்வாக அலுவலகத்துக்கு வந்திருக்கிறார். 'வீடு' அமைப்பின் பணியாளர்களிடம் தோழமையுடன் பேசியிருக்கிறார். 'வீடு' அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, விரிவாக்கம், பெண்கள் நல மேம்பாடுகள் குறித்து விரிவாக அவருக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பள்ளி மாணவன் போல, அத்தனை விஷயங்களையும் காது கொடுத்துக் கேட்டு மனசுக்குள் நிரப்பிக் கொண்ட ராகுல்ஜிக்கு, மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களிடையே கலந்துரையாட வேண்டும் என்கிற ஆவல் எழுந்திருக்கிறது. அங்கிருந்து கிளம்பிய அவர் வாகனம், கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டி கள அலுவலகம் நோக்கிப் புறப்பட்டிருக்கிறது.

மகளிர்க்கான நுண் கடன் திட்டங்கள் குறித்து பஞ்சப்பட்டி கள அலுவலகத்தில் அவருக்கு விளக்கிக் கூறப்

ராகுல் கேட்ட கேள்வி!



• 'எப்போ பிரதமராகப் போறீங்க?'



• 'அம்மாவும் வந்திருந்தா நல்லாயிருந்திருக்கும்!'

பட்டிருக்கிறது. பஞ்சப்பட்டி ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்றிருக்கும் கடனுதவிகள், திருப்பிச் செலுத்தி நிறைவு செய்தல், மீண்டும் அபிவிருத்திக்கென கடனுதவி அளிப்பது போன்றவற்றில் மிக அதிகளவு தொகையினைத் தந்துள்ளது பஞ்சப்பட்டி ஸ்டேட் பேங்க்தான் என்பது ராகுலுக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்து கரூர் மாவட்ட கள அலுவலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களுடனான கலந்துரையாடல். பெண்கள் கூட்டத்தின் மத்தியில் இயல்பாகச் சென்று அமர்ந்துவிட்டிருக்கிறார் ராகுல். சில பெண்களிடமிருந்து அவர்களது குழு அனுபவங்களை மொழி பெயர்ப்பாளர் உதவியுடன் தெரிந்து கொண்டிருக்கிறார். தலித் பெண்கள், விதவைகள், ஊனமுற்றோர் என பல்வேறுபட்டவர்களைச் சந்தித்ததில் அவருக்கு மிகுந்த மனநிறைவு. எல்லாம் முடிந்து மாலை நான்கு மணிக்கு மதுரையை நோக்கிக் கிளம்பியிருக்கிறார்.

"ராகுல் விடைபெறும் முன் என்னிடம் கடைசியாக, 'மேடம், இந்த மகளிர் சுய உதவிக் குழுவில் பெண்களை உறுப்பினராகச் சேர்த்து வருகிறீர்களே... உறுப்பினராகச் சேர்வதற்கு அவர்களது குறைந்தபட்ச - உயர்ந்தபட்ச வருவாய் என்ன என்கிற குறியீடு ஏதேனும் வைத்துள்ளீர்களா?' என்றார். ஒரு நிமிடம் நானே யோசிக்கலானேன். ஒரு வழியாகச் சமாளித்துக்கொண்டு, 'நீங்கள் கேட்டிருப்பது எனக்குள் புதிய ஆய்வினைத் தோற்றுவித்துள்ளது' எனக் கூறினேன். காரணம், மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களைப் பொறுத்தவரையில், உறுப்பினராவதற்கு வருவாய் குறைந்த பட்சம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று இதுவரையில் எங்கும் நிர்ணயிக்கப்படவே இல்லை. ராகுல் காந்தி கேட்ட கேள்வி எங்களுக்குள் புதிய சிந்தனையைத் தோற்றுவித்துள்ளது!" என்கிறார் 'வீடு' அமைப்பின் இயக்குனர் ராதா.

• ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

விலங்குகள்

தாத்தா குதிரை, தன் பேரனிடம் தான் மகத நாட்டு மன்னனின் பட்டத்துக் குதிரையாக (!) விளங்கியபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பெருமையுடன் நினைவு கூர்ந்தது.

“ஒருமுறை மன்னன் என்னைத் தவறான வழியில் செலுத்திவிட, எதிரி நாட்டுக்குள் நுழைந்துவிட்டேன். அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் கையில் ஆயுதங்களோடு மன்னனைக் கொல்ல வந்தார்கள். நான் வெகுவேகமாக அங்கிருந்து தப்பி மன்னனோடு அரண்மனைக்கு வந்து சேர்ந்தேன்” என்றபோது, அதன் மூக்கு கர்வத்தில் விடைத்தது.

“உடனே மன்னர் உன் முகத்தின் மீது தன் முகத்தை அழுத்திக் கண்ணீர் சொரிந்திருப்பாரே. தான் உனக்கு நன்றிக்கடன் பட்டதாகக் கூறி இருப்பாரே” என்றது


ராஜனிடம் விஷயத்தைக் கூறி முடித்தபோது, ஆனந்தின் முகம் உயிர்ப்பிழந்திருந்தது. அனைத்தையும் வெளிப்படுத்தியது தவறோ என்ற எண்ணம் கூட தோன்றத் தொடங்கியிருந்தது.

குற்ற உணர்ச்சியுடன் தலை நிமிர்ந்து பார்த்தவனுக்கு வியப்புக் காத்திருந்தது. ராஜன்



அருண் சரண்யா

11



குட்டிக் குதிரை...

"அப்படித்தான் செய்தான் அந்த முட்டாள் மன்னன்" என்று தாத்தா குதிரை கூற, குட்டிக் குதிரை அதிர்ச்சியுடன் பார்த்தது. "பின் என்ன? மன்னனைக் காப்பாற்றவா நான் அப்படி ஓடினேன்? என் உயிரைக் காத்துக் கொள்வதல்லவா அப்போது எனக்கு முக்கியமாகப்பட்டது?"



புன்னகைத்துக் கொண்டிருந்தான்.

எப்படி? எப்படி இது சாத்தியம்? மனைவி வேறொருவனைக் காதலித்திருக்கிறாள். தவிர திருமணத்திற்கு பிறகும் அவன் தன் காதலனையே மணந்து கொள்ளாததற்காக வருத்தப்படுகிறாள். இதையெல்லாம் அறிந்த ஒருவனுக்குக் கோபம் வரவேண்டாமா? குறைந்தது அதிர்ச்சியில் அவன் திகைக்க வேண்டாமா? மாறாகப் புன்னகை புரிவது எப்படி சாத்தியம்?

"கோகுலும் நான்தான் ஆனந்த். எங்கம்மாவும் எங்க தெரு சிநேகிதர்களும் என்னை கோகுல்னுதான் கூப்பிடுவாங்க" என்றான் ராஜன் மீண்டும் சிரித்தபடி.

அப்படியானால் அனுஷாக்கா 'கோகுல் ஐ லவ் யூ' என்று எழுதியது இவரை நினைத்துத்தானா? ஆனந்தின் முகத்தில் நிம்மதி வேகமாகப் பரவியது. வேகவேகமாக சாப்பிடத் தொடங்கினான். அடுத்த ஐந்தாவது நிமிடம் வேறு எதையும் சொல்லத் தோன்றாமல் "வரேன்" என்றபடி கிளம்பிச் சென்றான்.

'வளர்ந்துவிட்ட குழந்தை இவன்' என எண்ணிக்கொண்டான் ராஜன். தான் ஆனந்திடம் கூறியது முழுக்கவே உண்மைதான். ஆனாலும்...

"அதெல்லாம் இருக்கட்டும். 'கோகுல், நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கிட்டு இருக்கக் கூடாதா?'ன்னு எதுக்காக அக்கா தூக்கத்திலே சொல்லணும்? நீங்கதான் அவங்களைக் கல்யாணம் செய்துக்கிட்டாச்சே." இப்படி ஒரு கேள்வியை ஆனந்த் கேட்டிருந்தால், தான் என்ன பதில் கூறியிருக்க முடியும்? தனக்கே தெரியாத விடைகளை எப்படிக் கூறி இருக்க முடியும்?

பில்லுக்கான தொகையைச் செலுத்திவிட்டு உயிரியல் பூங்காவை நோக்கி நடந்தபோதே, அவன் மனதில் சிந்தனைகள் வட்டமிட்டன.

தன் வீட்டுப் பெயர் கோகுல் என்பதை எப்போது முதன்முதலில் அனுஷாவிடம் குறிப்பிட்டோம்? ஒருவேளை தன் அம்மா தன்னை அப்படிக் கல்யாணத்தின்போது கூப்பிட்டதை அவள் கவனித்திருக்கலாம். தானாக இதைக் குறிப்பிட்டது அனுஷாவிடம் அல்ல, ஸ்ரீலதாவிடம் என்பது இப்போது நினைவுக்கு வந்தது.

அக்காவுக்குத் திருமணமான பிறகு அவளோடு தங்க வந்த நாளிலேயே ஸ்ரீ கேட்டுவிட்டாள். "உங்கம்மா உங்களை கோகுல்னு கூப்பிடறாங்களே? ஒருவேளை உங்க பேரு கோகுலராஜனா? பிருத்விராஜன், ராஜராஜன்னுதான் கேள்விப்பட்டிருக்கேன். கோகுலராஜன்னு இபபோதுதான் கேள்விப்படறேன்."

ராஜன் சிரித்தான். "அம்மா என்னை சின்ன வயசுலருந்தே அப்படிக் கூப்பிட்டுப் பழக்கம், அவ்வளவுதான். என் பள்ளிப் படிப்பு முடியறவரைக்கும் என்னை கோகுல்னு கூப்பிட்டாத்தான் சட்னு திரும்பிப் பார்க்கத் தோணும். அதுக்கப்புறம்தான் ராஜன் மனசிலே முழுமை

யாகப் பதிஞ்சது. கோகுலாக இருக்கும் போது என் லட்சியம் என்ன தெரியுமா? ஒரு டாக்டராவதுதான்."

"அதைத்தான் அடைஞ்சிட்டீங்களே"

"விலங்குகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர் இல்லே. மனிதர்களுக்கு சேவை செய்யும் டாக்டராவதுதான என் லட்சியமாக இருந்தது."

ஸ்ரீலதா தோளைக் குலுக்கிக்கொண்டாள். "ஐய, அதிலே என்ன த்ரில் இருக்கு? நீங்க இப்படி இருப்பதிலேதான் எனக்குப் பெருமை. அதாவது மிஸ்டர் கோகுலை விட மிஸ்டர் ராஜனைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு"

உள்ளேயிருந்து அனுஷா இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் என்பது அடுத்த நாள் புரிந்தது. "எதற்காக கோகுல் தன் லட்சியத்தை மாத்திக்கிட்டாரு?" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியை ரசித்தவாறே "மெடிக்கல் காலேஜிலே எனக்கு சீட் கிடைக்கலே. நன்கொடையை வாரி வழங்கும் அளவுக்கு என் வீட்டு நிலைமையும் இல்லே. ஆனா ஒண்ணு அனு, ராஜனாக கால்நடை மருத்துவம் படிக்கத் தொடங்கிய பிறகு உள்ளன்போடு மிருகங்களையும் பறவைகளையும் நேசிக்கத் தொடங்கினேன்"

இப்போது ராஜன் யோசிக்கத் தொடங்கினான். 'கோகுலை விரும்பும் அனுஷா. அவனைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் எனத் தூக்கத்திலும் எண்ணும் அனுஷா' என்ன அர்த்தம்?

ஸ்ரீலதா குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது. 'மிஸ்டர் கோகுலைவிட மிஸ்டர் ராஜனைத்தான் எனக்குப் பிடிச்சிருக்கு.' ஆனால் அனுஷாவுக்கு ராஜனைவிட கோகுலைப் பிடித்திருக்கிறது. அதனால்தான் 'கோகுலைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமென' எண்ணுகிறாள்.

சட்டென ஒரு பொறி தோன்றியது. தான் விலங்குநல மருத்துவராக இருப்பது தான் ஸ்ரீலதாவுக்குப் பிடித்திருக்கிறது என்றால், அப்படி இருப்பதுதான் அனுஷாவுக்குப் பிடிக்கவில்லையோ?

தன் தொழில் குறித்து அவன் அக்கறையாக எதுவும் கேட்டதில்லை என்பதும், அவனாக எதையாவது கூறத் தொடங்கினால்கூட சட்டென்று அந்த இடத்தை

சு டோ கு



	6			4	9		7	2
	1		3	8				
7					5	1	3	
3	9				4			
		2		7		5		
4			8				1	6
	7	5	2					4
				5	6		9	
9	2		4	1			5	

இங்கே மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் தலா ஒன்பது கட்டங்கள் - அதாவது மொத்தம் 81 கட்டங்கள் உள்ளன. இவை 3 x 3 ஆக ஒன்பது பெட்டிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. 1 முதல் 9 வரையிலான எண்களை இந்தக் கட்டங்களில் நிரப்ப வேண்டும்.

மேலிருந்து கீழ், இடமிருந்து வலம், 3 x 3 என்று எந்த ஒன்பது கட்டங்களிலும், 1 முதல் 9 வரையிலான எண்களை ஒரே ஒரு முறைதான் பயன்படுத்த வேண்டும். நோ ரிபீட்டு!

விடை: 95ம் பக்கம்

விட்டு நகர்ந்துவிடுவாள் என்பதும் நினைவில் தோன்றின.

ஏன்? ஏன்? ராஜனுக்குக் குழப்பம் ஏற்பட்டது.

ராஜன் குனிந்துவிட்டு தலை துவட்டிக் கொண்டிருந்தான். பேப்பரைப் புரட்டிக்கொண்டிருந்த அனுஷாவைப் பார்த்து,

"ஸ்ரீயை எப்ப கூட்டிக்கிட்டு வரலாம்? கார்த்திக்கை மறுபடியும் கேட்டுப் பார்க்கட்டுமா...? என்ன அப்படிப் பார்க்கிறே? சில சந்தர்ப்பங்களில் நாமதான் விட்டு கொடுத்துப் போகணும்" என்றான்.

சில நொடிகள் மௌனத்தில் கழிந்தன. குக்கரில் வைத்த அரிசி முழுவதுமாக வேக இன்னும் பத்து நிமிடங்களாகும். அனுஷா அந்த அணுகுண்டை வீசினாள். "கார்த்திக் தன் வீட்டிலே ஒரு சின்ன மலைப்பாம்பை வளர்க்கிறார் தெரியுமா?"

"என்னது?" ராஜனின் முகத்தில் அதிர்ச்சி புலப்பட்டது.

"அந்தவரை சந்தோஷம்தான். 'வளர்த்தால் என்ன? அதுவும் ஒரு ஜீவன் தானே'ன்னு சொல்லிடுவீங்களோன்னு பயந்தேன்."

அனுஷாவின் இந்த பதில் ராஜனை உலுக்கியது. அனுஷா எண்ணப்போக்கு தொடர்பான தன் யூகம் சரிதானோ...? ஆனால், அவனை அதிகம் யோசிக்க விடாமல் அனுஷா கூறிய செய்தியின் தாக்கம் பெரிதாக இருந்தது.

"என்ன சொல்றே அனு? கார்த்திக் மலைப்பாம்பை வீட்டிலே வளர்க்கிறாரா?"

"அப்படித்தான் ஸ்ரீ நம்பிக்கிட்டிருக்கா."

நிலைமையின் தீவிரம் சிறிது சிறிதாக உரைக்கத் தொடங்கியது. தன் புகுந்த வீட்டில் கண்ணாடித் தொட்டியில் இருந்த மீன்களைப் பார்த்து மனம் முழுவதும் சந்தோஷப்பட்டவள் ஸ்ரீலதா. இப்போது அவள் கண்ணுக்கு மீன் மலைப்பாம்பாகத் தெரிகிறதா? கண்ணுக்கு அல்ல, மனதுக்கு. எதனால்? மேலும் யோசிக்க, ராஜன் சற்று தன்னிலை இழந்தான்.

"கார்த்திக் சரியான சாடிஸ்ட். உடனடியாகப் போய் அவரை எச்சரிக்கணும். நம்ம ஸ்ரீயின் வாழ்க்கை பாழாயிடக் கூடாது."

"கார்த்திக்கைப் பற்றி நான் கொஞ்சம் விவரமாக விளக்கினால்தான் உங்களுக்குப் புரியும். இப்போ சாப்பிட்டுட்டு கிளம்புங்க. சாயந்திரம் சொல்றேன். அப்படியே ஸ்ரீயை போய் கூட்டிக்கிட்டு வந்திடலாம்."

பா.ம.க.



அமைச்சராகி விட்டதால் பசுமைத்தாயகம் தொடர்பான பணிகளில் முன்பு போல் ஈடுபட முடியா விட்டாலும், மாதம் ஒருமுறையேனும் அதன் செயல்பாடுகள் குறித்து விரிவாக டிஸ்கஷன் நடத்துகிறார் அன்புமணி.

"கார்த்திக் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் ஸ்ரீயின் நிலைமை கவலைக்கிடமா இருக்கு அனு. வா, இப்பவே போய் அவளைக் கூட்டிட்டு வந்திடலாம்."

"தாராளமா அழைச்சிட்டுப் போங்க" என்று கார்த்திக் உடனடியாக சம்மதமளிக்க, ராஜனுக்கு எல்லை மீறிய வியப்பு.

இரவு உணவு முடிந்தது.

"நீ ஸ்ரீயோட இங்க படுத்துக்க. நான் அடுத்த அறைக்குப் போறேன்" என்றபடி நகர்ந்தான் ராஜன்.


தனிமையில் ஸ்ரீலதாவுக்கெதிரே உட்கார்ந்த அனுஷா, நேரடியாக அவள் கண்களைப் பார்த்தாள். "ஸ்ரீ, நீ சொல்லித்தான் ஆகணும். உன் மனசிலே இருக்கும் பாரத்தை வெளிப்படுத்தியே தீரணும். நான் உன் அக்கா மட்டுமில்லே... உன்னை அம்மா ஸ்தானத்திலே இருந்து வளர்த்தவடி.. ம்ம்ம், சொல்லு."

ஸ்ரீலதாவின் முகம் மெல்ல மெல்லத் தன் இறுக்கத்தைத் தளர்த்திக்கொண்டது. ஓவென்ற கதறலுடன் ஸ்ரீலதா கத்தினாள். "அக்கா, கார்த்திக் ஒரு மனுஷ ஜென்மமே இல்லை".

சத்தம் கேட்டு அங்கு வந்து கதவுக்கு வெளிப்புறம் நின்றுகொண்டிருந்த ராஜனின் காதுகளிலும் அவள் கூறியது தெளிவாக விழுந்தது.

(தொடரும்)

காதல் வளர்ந்த கதை!



வலைப்பதிவு :

காலை எழுந்து
சோம்பல் முறித்து
கூந்தலில் கட்டி முடிக்கிறாய்
நம்முடன் விழித்தே
பயணித்த இரவையும்!
கூந்தலில் சிக்கித் தொலைந்த
என்னையும்!

- ப்ரியன்

(Priyan4u.blogspot.com -வலைப்பதிவிலிருந்து)

புள்ளி விவரம் :


இந்த செகண்ட்ல உலகத்தோட மக்கள் தொகை என்ன... இந்த வருஷம் இதுவரை எத்தனை பேர் பிறந்திருக்காங்க, இறந்திருக்காங்க, இன்னிக்கு எத்தனை பேர் பிறந்திருக்காங்க, இறந்திருக்காங்க, இந்த வருஷம் இதுவரை எத்தனை புக் வெளியிட்டிருக்காங்க, எத்தனை பேர் சினிமா பார்த்திருக்காங்க, இந்த வருஷம் இதுவரை பிடிக்கப்பட்ட மீன்கள் எத்தனை டன், பூமியின் எடை, எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவங்க எத்தனை பேர், டீன் ஏஜ்லயே குழந்தை பெத்துக்கிட்டவங்க எத்தனை பேர், எத்தனை மில்லியன் சிகரெட் தயாரிக்கப்பட்டிருக்கு... இப்படி வகை வகையா புள்ளி விவரங்களின் மீட்டர் ஓடிக்கிட்டே இருக்கு இங்க! worldometers.info/-தான் இப்படி மீட்டர் போட்டுக் காட்டுற தளத்தோட முகவரி. எக்ஸ்பிரஸ் வேகத்துல ஓடுற மக்கள் தொகையைப் பார்க்கறப்ப பகீர்னு இருக்கு!

கல்யாணம் :

வெப்சைட் போடுறதுல புது ட்ரெண்டைக் கொண்டு வந்திருக்காங்க சுமித் - சுபர்ணா. ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போறாங்களாம். அதுக்கு ஒரு வெப்சைட் போட்டிருக்காங்க! sumeetandsubarna.weddingwindow.com/ எப்படி சந்திச்சாங்க! எப்படி லவ் பூத்துச்சு! எப்படி அதை எஸ்.எம்.எஸ். ஊத்தி வளர்த்தாங்க! போன வாரம் என்ன பண்ணுனாங்க! இந்த வாரம் என்ன பண்ணப் போறாங்க! ஹனிமூனுக்கு எங்க போகப் போறாங்கன்னு எல்லாத்தையும் வெப்சைட் பார்த்தே தெரிஞ்சுக்கலாம்! செம 'லவ்'லியான சைட் இது. முடிஞ்சா உங்க கல்யாணத்தை நெட்ல நேரடியா ஒளிபரப்புங்க! நாங்களும் பார்க்கலாம்ல!

- வலைஞன்

அட!



நீங்கள் கேட்டவை -தராசு

ராகுல் காந்தியின் தமிழக விஜயம் எப்படி...?

● பி.பாலாஜிகணேஷ்,
கோவிலாம்பூண்டி

? பத்திரிகைகளில் விளம்பரத்துக்கு ஒதுக்கப்படும் பகுதியைக் கணக்கிட்டு, சேவை வரி விதிக்கும் (மத்திய நிதியமைச்சரின்) புதிய நகல் திட்டம் எப்படி...?

! சேவை வரி என்பது அரசுக்கு வருவாயைக் கணக்கின்றி ஈட்டித் தரக்கூடிய காமதேனு - எதுவும் எல்லாமும் சேவையாகக் கருதப்படலாம்! அரசிடம் செல்வாக்குடைய சில துறைகள் தப்பிப் பிழைக்கும்; இதர துறைகள் சிக்கிக்கொண்டு தவிக்கும். பத்திரிகைத் துறையில் சேவை வரி என்பது பத்திரிகைச் சுதந்திரத்துக்குப் பாதகமாகக் கருதப்படும்.



• புறக்கணிப்பு புரோக்ராம்!



• 'சேவை' சிந்தனை!

● ஆர்.கே. ராமு,
குடியாத்தம்

? நயன்தாராவை விட அசினுக்குச் சரியான போட்டி ஷ்ரேயாதானே...?

! நயன்தாராவாவது பரவாயில்லை... 'தஸ்புஸ்ஸெ'ன்று மூச்சிரைக்க வந்து கொண்டிருக்கிறார். ஷ்ரேயா இப்போதுதான் ஸ்போர்ட்ஸ் ஷூவே வாங்கப் போகிறார். அவரோடு அசினை ஒப்பிட்டுப் பார்ப்பது ரொம்பப் பெரிய ஸின்!



• புத்தம்புது ஸ்போர்ட்ஸ் ஷூ!

● எம். சிவகுருநாதன்,
தஞ்சை

? 'பீஹார் மாநில கவர்னராக இருக்கும் பூட்டாசிங் எப்படித் தலைநகரில் இன்னமும் அரசு பங்களாவை வைத்திருக்க முடியும்' என்று உச்சநீதிமன்றம் காட்டமாகக் கேட்டு 'அவரைத் தூக்கி எறியுங்கள்' என உத்தரவிட்டுள்ளதே?

! Shame on Bhuta Singh! ஆனால்,

அரசியல்வாதிகள் வெட்கம், மானத்தை விட்டொழித்து ரொம்ப காலமாகி விட்டது.

● **எம். ராஜேந்திரன், லால்குடி**

? 'நாக்பூரில் இந்திய வீரர்களால் வேட்டையாடப்பட்டோம்' என்று இலங்கை அணி கேப்டன் கூறு கிறாரே...?

! மொஹாலி, ஜெய்ப்பூர், புனே ஆகிய இடங்களிலும் இந்திய அணிக்கு அபார வெற்றிதான். ஆனால், அணியின் ஒட்டு மொத்த வெற்றியாக இல்லாமல் ஒரு சிலரின் சாகஸத்தால் கிடைத்த வெற்றியாகவே தொடர்வது ஆரோக்கிய மானது அல்ல.

● **வி. மோகன், நெல்லிக்குப்பம்**

? பழ. நெடுமாறன் முதற்கொண்டு எல்லோரும் வீரப்பன் சமாதிக்குச் சென்று முதலாமாண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனரே... வீரப்பன் என்ன தியாகியா?

! வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட விதத்தில் இன்னும் சில சந்தேகங்கள் நீங்க வில்லை; வீரப்பனைப் பிடிக்கச் சென்ற காவல் படையினர் சிலர், அப்பகுதி மக்களுக்கு - பெண்களுக்குத் தீங்கிழைத்தனர் என்பதும் உண்மை. இதனால் திருடன் வீரப்பன் தியாகியாகிவிட மாட்டான். அப்படி ஒரு ராபின்ஹுட் இமேஜை உருவாக்க நினைப்பது மிகப்பெரிய குற்றம். நெடுமாறன் போன்றோர் இப்படி திசை தவறிப் போவது வருந்தத்தக்கது. மலிவான விளம்பரம் கிடைக்கும். மதிப்பு பெருகாது.



* தற்செயல் விளக்கம்!



* தமுக்குத் தம்பட்டம்!

● **கு. கணேசன், பனங்கோட்டூர்**

? "தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்குவோம்; ஆட்சிக்கு வராவிட்டால் இட ஒதுக்கீடுக்குப் போராடுவோம்" என்று கருணாநிதி இஃப்தார் விருந்தில் அறிவித்தது...?

! ஏன், ஜைனர்கள், சீக்கியர்கள், பார்ஸிகள் போன்ற சிறுபான்மையினர் என்ன பாவம் செய்தார்கள்? அப்புறம் ஒவ்வொரு மதத்துக்குள்ளேயும் ஜாதிப் பிரிவுகள் உள்ளனவே, அவற்றுக்கு ஏற்பவும் இடஒதுக்கீடு செய்யத்தானே வேண்டும். அரசியல்வாதிகள் இன்று வினை விதைத்தால், எதிர் காலத்தில் தினையா விளையும்?

● **கே.வி. ராமன், சென்னை - 73**

? தாவூத் இப்ராஹிமுடனான சந்திப்பு தற்செயலானது என்கிறாரே நடிகர் - நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் கோவிந்தா?

! தற்செயல் சந்திப்பானாலும் அது எந்தச் சமயத்தில்; யாருடன் நிகழ்கிறது என்பதும் முக்கியம்தான். நாம் எப்படிப்பட்ட இடங்களில் பழகுகிறோம் என்பதை வைத்தே நமது மதிப்பு, ஒழுக்கம் அளவிடப்படும்.

● **பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? ராகுல் காந்தியின் தமிழக விஜயம் பற்றி...?

! 'சரவணபவனுக்கு வந்தவர் சத்தியமூர்த்தி பவனுக்கு வரவில்லையே' என்று கோபப்படுகிறார்கள் கதர்ச்சட்டைக்காரர்கள்!

● **வி. ராதாகிருஷ்ணன், தஞ்சாவூர்**

? கதை சொல்வதில் வல்லவர் பாக்யராஜா? தென்கச்சியாரா?



• தப்புத் தாளம்!

! இப்போ அம்மா சொல்ற குட்டிக் கதைகளுக்குத்தாங்க மவுசு ஜாஸ்தியா இருக்கு!

● அ. அப்துல்காதர், விளாத்திகுளம் ❑

? விடுதலை என்ற உன்னத இலட்சியத்தை அடைய அஹிம்சை முறையை விட்டுவிட்டு பயங்கரவாதத்தைப் பயன்படுத்தும் மனப்பான்மை உலகின் எல்லா நாடுகளிலுமே பின்பற்றப்படுகிறதே?... இது ஏற்கத்தக்கதா...?

! நிச்சயமாக ஏற்கத் தக்கதல்ல. ஆனால், மக்களின் மனநிலை அறியாமல் ஒரு வல்லுவன் தன் ஆளுமையை அவர்கள் மீது திணிப்பதும் ஏற்கத்தக்கதல்ல. அறவழி - அஹிம்சா முறை போராட்டத்துக்கு ஒரு காந்தியோ, மார்ட்டின் லூதர் கிங்கோ, மண்டேலாவோ தேவை... பயங்கரவாதத்துக்கு ஒரு மிரட்டல் பேர்வழி போதும்!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம் ✱


? வரி வசூல், குடிநீர் வினியோகம் - பராமரிப்பு போன்ற உள்ளாட்சிப் பணிகளை, அரசு இனி மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப் போகிறதாமே... இதை வரவேற்கிறீர்களா?

! ஏற்கெனவே இப்பணிகளைச் செய்துவந்த அரசு ஊழியர்களின் ஊதியம் இனி தண்டம் என்பதாலும் சுய உதவிக் குழுக்களின் முதன்மை நோக்கமான - பெண்களிடையே ஆக்கபூர்வப் பணிகள், சுய சம்பாத்தியம் வளர்த்தல் ஆகியன தடைப்பட்டு பாதிப்புக்குள்ளாகும் என்பதாலும், இது போகாத ஊருக்கு டிக்கெட் வாங்குவதாகவே முடியும்.

● எஸ். மாலதி, மன்னார்குடி

? ஒருவருடன் சேர்ந்து வசிப்பது என்பது திருமணத்தை விட அதிக அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்று நடனக் கலைஞர் மல்லிகா சாராபாய் சொல்கிறாரே?

! அர்த்தமற்ற பிதற்றல்!



• விதைக்கின்ற வினை!

● ப. மகேஸ்வரமணி, சோழபுரம்

? அம்மாவின் புதுப் புது திட்டங்கள் 'அடுத்தும் வருவேன்' எனக் குறிப்பாக உணர்த்துவதைப் பார்த்தீரா?

! குறிப்பாக உணர்த்தும் நாசூக்கெல்லாம் கிடையாது. எல்லாம் பகிரங்கம் தான்! கண்டலேறு, ரெட்ஹில்ஸ், புழலேரி எல்லாம் பருவ மழையில் நிரம்பிவிட்ட பிறகு, சென்னைவாசிகளுக்கு தினந்தோறும் குடிநீர் வினியோகம் தீபாவளி பரிசாகத் தமுக்கடிக்கப்படும் கூத்தைச் சொல்வதா? 8.33 சதவிகித கட்டாய போனஸ் அறிவிப்பைக்கூட தயாள சிந்தையின் வெளிப்பாடாகத் தம்பட்டம் அடிப்பதைச் சொல்வதா! ○

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர் :

அ. அப்துல் காதர்,
37B சாலையம் தெரு,
விளாத்திகுளம் அஞ்சல்,
தூத்துக்குடி - 628 907.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர் :

எம். சம்பத்,
47, மலைவீதி தெரு,
வேலாயுதம்பாளையம் - 639 117.

காசுகொடுத்து வாங்கும் குடிநீரில் கரப்பான்பூச்சி! தரமுத்திரை பெற்ற தண்ணீரில் உயிருள்ள தவளை! சர்ச்சை வெடித்துக் கிளம்பும் முன்பே சுதாரித்துக் கொண்ட தமிழக அரசு, இதுவரை தண்ணீர் அடைத்து விற்கப்பட்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் கேன்களுக்கு அதிரடித் தடைவிதித்து விட்டது. கையோடு 'பபுள்டாப்' கேன்களை மாற்றாகப் பயன்படுத்தவும் ஆணை பிறப்பித்திருக்கிறது. பபுள்டாப் கேன்களில் அப்படி என்ன விசேஷம்? தண்ணீர் தெளிவாக இருக்கிறதா என்பதை அதில் கண்கூடாகப்



தண்ணீர் தண்ணீரே அல்ல!

- ஒரு எச்சரிக்கை ரிப்போர்ட்

பார்க்கலாம். அவ்வளவுதான்! தெளிவாக இருந்தால் மட்டுமே தரமான குடிநீரா? விளக்குகிறார் நீரியல் நிபுணர் டாக்டர் பி. ரவிச்சந்திரன்:

''நாம் தினசரி பயன்படுத்தும் பாலில் எத்தனை சதவிகிதம் கொழுப்புச் சத்து இருக்கிறது, எந்த முறையில் பதப்படுத்தப்பட்டது என்பதை பாக்கெட்டிலேயே அச்சிடுகிறார்கள். ஆனால் குடிநீராக விற்பனை செய்யப்படும் தண்ணீரை எந்த முறையில் தயாரித்தோம் என்பதை மட்டும் சொல்லிவிட்டு, அது எந்த தரத்தில் இருக்கிறது என்பது உள்ளிட்ட வாட்டர் ஃபேக்ட்ஸ் (water facts) எதுவும் சொல்லப்படுவதில்லை. லேபிள்களில் ஐ.எஸ்.ஐ முத்திரையை மட்டும் பார்க்கும் வாடிக்கையாளர்கள், இதைக் கவனித்து வாங்குவதில்லை. ஐ.எஸ்.ஐ முத்திரை பெற்ற தண்ணீர், பாதுகாப்பான குடிநீராக இருக்கலாமே தவிர, அது ஆரோக்கியமான குடிநீர் அல்ல. ஐ.எஸ்.ஐ தரச் சான்றுப்படி குடிக்க முடியுமா, முடியாதா, பாக்டீரியா நீக்கப்பட்டிருக்கிறதா என்பதற்குத்தான் தர முத்திரை தருகிறார்கள். உடல் ஆரோக்கியத்திற்கு (healthy choice) உகந்ததா என்பது பற்றி ஐ.எஸ்.ஐக்கு கவலை இல்லை. காரணம் ஐ.எஸ்.ஐயின் தண்ணீர் குறித்த தரநிர்ணய விதிகள் அத்தனையும் அரதப் பழசானவை'' என்று அதிர வைக்கிறார் இவர். அப்படியானால் பாதுகாப்பான தண்ணீரிலிருந்து ஆரோக்கியமான தண்ணீர் எப்படி வேறுபடுகிறது?

''ஆரோக்கியமான குடிநீரின் தலையெழுத்தை நான்கு அடிப்படைப் பண்புகள் நிர்ணயிக்கின்றன. அதில் முதலாவது,





தண்ணீரில் வாழும் கிருமிகள், பாக்டீரியாக்கள் மற்றும் நுண்ணுயிர்கள் முற்றாக நீக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும். அடுத்து தண்ணீரின் அமிலத்தன்மை (Acidic level). இதை பிஹெச் (ph) என்ற அளவுகோல் மூலம் அளக்கிறார்கள். குடிநீரின் பிஹெச் அளவு குறைந்தபட்சம் ஏழாக இருக்க வேண்டும். பிஹெச் அளவு குறையக் குறைய தண்ணீரின் அமிலத்தன்மை (நச்சுத்தன்மை) அதிகரிக்கும்.


மூன்றாவது தண்ணீரில் கலந்துள்ள இயற்கை உப்புக்கள். இவற்றைக் கண்டறிய, டிடிஎஸ் மொத்த கரைநிலைத் துகள்கள் (TDS - Total Dissolved Solids) எனும் அளவைப் பயன்படுத்துகிறோம். ஆரோக்கியமான குடிநீரில் டிடிஎஸ். அளவு 250 முதல் 350க்குள் இருக்க வேண்டும்.

அடுத்து ஓ.ஆர்.பி. (ORP-Oxidation Reduction Potential) எனப்படும் ஜீவனுள்ள தன்மை. அதாவது ஆக்ஸிஜன் மூலக்கூறுகள், ஹைட்ராக்ஸில் அயனிகளாக தண்ணீரில் நிலைகொண்டிருக்கும் தன்மையைக் குறிக்கும். இந்த ஓ-ஆர்.பி பற்றிய விழிப்புணர்வு, இந்தியாவில் படித்தவர்கள் மத்தியில்கூட இல்லை என்பதுதான் பரிதாபம். ஆரோக்கியமான குடிநீரில் ஓ-ஆர்.பி-யின் அளவு (-)125ஆக இருக்க வேண்டும். ஆரோக்கியமான தண்ணீருக்கே உரிய இந்தத் தன்மைகளும் அளவுகளும் நாம் காசு கொடுத்து வாங்கும் குடிநீரில் இருக்கிறதா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, இத்தன்மைகளின் அளவுகள் அதிகமுள்ள அல்லது குறைவாக உள்ள தண்ணீரைப் பருகி வந்தால், நமது உடல்நிலை சந்திக்க நேரும் விளைவுகள் என்ன என்ற கேள்வியும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

உடலில் உள்ள தண்ணீர் சிறுநீர், வியர்வை மூலம் வெளியேறியவுடன், அதை ஈடுகட்ட (replacement of water) நாம் அருந்தும் தண்ணீரின் தரமே உடல் ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கிறது. முக்கியமாக ரத்தத்தின் சராசரி பிஹெச் அளவான 7.4-ஐ, தொடர்ந்து பராமரிப்பதற்கு ஆரோக்கியமான தண்ணீர் அருந்துவது மட்டுமே வழி'' என்று கூறும் டாக்டர் ரவிச்சந்திரன், அமிலத்தன்மை அதிகமுள்ள தண்ணீரை அருந்துவதால் உடலில் நிகழும் மாற்றங்களைப் பட்டியலிடுகிறார்:

''இரத்தத்தில் பிஹெச் அளவு குறைந்தால், நுரையீரலில் இருந்து திசுக்களுக்கு ஆக்ஸிஜன் அயனிகள் எடுத்துச் செல்லப்படும் வேலை நின்றுவிடும். இதனால் ஒவ்வொரு திசுவிலும் வெளியேற்றப்பட வேண்டிய ஹைட்ரஜன் (அமிலம்) அப்படியே தங்கிவிடும். ரத்தத்தில் அமிலத்தன்மை உபரியாக அதிகரிக்கும்போது, அதைச் சமப்படுத்த எலும்பில் உள்ள சுண்ணாம்பு கரைய ஆரம்பிக்கும். இதனால் எலும்புகள் பலவீனமடைந்து முதுகுவலி, மூட்டுவலி,

• டாக்டர் ரவிச்சந்திரன்



• டாக்டர் ராவ்



• டீம் நிறுவன அயனைசேஷன் பிளான்ட்...



இடுப்புவலி ஆஸ்ட்டியோபோரோசிஸ் எனும் எலும்புத் தேய்மான நோய் போன்றவை ஏற்படும். இது ஆரம்பக் கட்டம் மட்டுமே. இதையும் மீறி அமிலத்தன்மை அதிகரிக்கும் போது உடலில் உள்ள கொழுப்பின் தன்மை கெட்ட கொலஸ்ட்ராலாக மாறிவிடும். இதன் விளைவாக உயர்ரத்த அழுத்தமும், இன்சுலின் வேலை செய்யாமல் 'இன்சுலின் ரெஸிஸ்டன்ஸ்' என்கிற நிலையும் ஏற்பட்டு சர்க்கரை நோயும் உருவாகும்.

அமிலத்தன்மை மேலும் பெருகினால் எலும்பில் உள்ள சுண்ணாம்புச் சத்து சிறுநீர் வழியே வெளியேற ஆரம்பிக்கும். இதன் விளைவாக கிட்னியிலும் பித்தப்பையிலும் கற்கள் உருவாகலாம். இவ்வாறு ரத்தத்தின் பிஹெச் அளவு குறைந்து அமிலத்தன்மை கட்டுக்கடங்காமல் உயரும்போது தோன்றும் இந்த நோய்களை ஆங்கில மருத்துவம் 'டி-ஜெனரேட்டிவ் டிசீஸ்' என்று அழைக்கிறது. கிட்டத்தட்ட உடம்பு துருப்பிடிப்பதைப் போலத்தான் இதுவும். இரும்பு துருப்பிடிக்காமல் இருக்க அதில் எண்ணெய் தடவுதல் போல, உடல் துருப்பிடித்து நோய்களின் பிடியில் சிக்காமல் இருக்க ஆன்டி-ஆக்ஸிடென்ட்ஸ் நிறைந்த (Alkaline water) தண்ணீரை அருந்துவதுதான் சிறந்த தீர்வு" என்கிறார்.

அப்படியானால் தண்ணீர் சந்தையில் தற்போது விற்கப்படும் அடைக்கப்பட்ட குடிநீரில் அல்கலைன் தன்மை கொண்ட தண்ணீரும் கிடைக்கிறதா என்றால், "கிடைக்கிறது! ஆனால் மாத பட்ஜெட்டில் 300 முதல் 400 ரூபாயைக் குடிநீர் வாங்கச் செலவிடும் நுகர்வோர்தான் எந்தத் தண்ணீரை வாங்குவது என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சரியான ஆரோக்கியமான குடிநீரைத் தேர்வு செய்ய முதலில் இங்கே நடைமுறையில் இருக்கும் தண்ணீர் சுத்திகரிப்பு முறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்கிறார்.

"அல்ட்ரா வயலெட் கதிர்கள் மூலம் பாக்டீரியாக்களை அழித்து, சிம்பிள் ஃபில்ட்ரேஷன் முறையில் வடிகட்டி பேக் செய்யப்படுவது யூவி சுத்திகரிப்பு முறை. தண்ணீரில், இறந்துபோன பாக்டீரியாக்கள் இதில் அப்படியே இருக்கும். இயற்கை உப்புக்கள் (மினரல்கள்) அப்படியே தங்கிவிடும். ஆனால் உடலுக்குத் தேவையான அளவு இருக்கும்படி இவற்றைப் பராமரிக்க முடியாது. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மினரல்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றைப் பிரித்தெடுக்கவும் முடியாது. முக்கியமாக பிஹெச் அளவு குறைந்து அமிலத்தன்மை கூடும். அடுத்து ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் (reverse osmosis) எனப்படும் நுண்ணிய வடிகட்டிகளின் வழியே தண்ணீரை அதிவேகமாகப் பாய்ச்சி வடிகட்டப்படும் முறை. இதில் மினரல்கள் சுத்தமாக நீங்கிவிடும். சுவையை இழந்து, பிஹெச் அளவும் குறைந்து விடும். இதில் மொத்த கரைநிலைத் துகள்களின் அளவை 60 முதல் 120க்குள் பராமரிக்க முடியும். இம் முறையில் தயாரிக்கப்படும் தண்ணீர்தான் இன்று ஒட்டுமொத்த தண்ணீர்ச் சந்தையை ஆக்கிரமித்துள்ளது. வளரும் குழந்தைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான கால்ஷியம், பொட்டாஷியம், மெக்னிஷியம் போன்ற இயற்கை உப்புக்களும் தாதுக்களும் தண்ணீரில் அயனிகளாக (IONS) இருந்தால் மட்டுமே உடலில் உள்ள திசுக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளும். ஆனால் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் சுத்திகரிப்பு முறை தண்ணீரை குழந்தைகள் பருகும்போது இந்தச் சத்துக்கள் கிடைக்காது.

தற்போது அறிமுகமாகியுள்ள அயனைசேஷன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்படும் தண்ணீர், உலக மக்களுக்கு ஆரோக்கிய கொடைபோல்

வந்துள்ளது. ஜப்பானியர்களின் கண்டுபிடிப்பான இது. இன்று உலகின் வளர்ந்த, வளரும் நாடுகளில் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இம்முறைக்குக் குடிநீர் தயாரிப்பு நிறுவனங்கள் மாற வேண்டும்.



• டீம் சேஃப் பாணி பியூரிஃபையர்

அயனைசேஷன் முறையில், சுத்திகரிப்புக்கு தேர்ந்தெடுத்த தண்ணீரில் எலக்ரோடுகள் மூலம் மின்னூட்டம் செலுத்தப்படும். அப்போது தண்ணீரில் பிணைந்தபடி இருக்கும் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் மூலக்கூறுகள், அயனிகளாக மாறி தனித்தனியே பிரிந்து விடுகின்றன. இப்படி அயனிகளாக பிரிந்த மூலக்கூறுகள் திரும்பவும் இணைந்து விடாமல் இருக்க, மின்னூட்டம் செய்யப்பட்ட தண்ணீரின் இடையில் ஓர் அதி நுண்ணிய மெமரன் திரை போடப்பட்டு, ஓஹெச் அயனிகள் (Hydroxyl IONS) நிறைந்த தண்ணீரை மட்டும் தனியே வடித்து குடிநீராக பயன்படுத்துகிறார்கள். இதுவே அல்கலைன் தன்மை நிறைந்த தண்ணீர்''என்று விளக்கும் டாக்டர் ரவிச்சந்திரன்,

''பாக்டீரியாக்கள் இந்த அதிநவீன தொழில்நுட்பம் மூலம் வடிகட்டப்பட்டு, மொத்த கரைநிலைத் துகள்களின் அளவு 250க்குள் இருந்தால்தான் தண்ணீரை அயனைஸ் முறையில் பிரித்தெடுக்கவே முடியும் என்பது கூடுதல் சிறப்பு. இது தவிர வளரும் குழந்தைகளுக்குத் தண்ணீர் மூலம் கிடைக்க வேண்டிய பொட்டாஷியம், மெக்னிஷியம், கால்ஷியம் உள்ளிட்ட மினரல்களை சரியான அளவில் ஓஹெச் அயனிகளில் உள்ளீடு செய்யலாம். தண்ணீரில் பூச்சிக்கொல்லி மருந்து இருந்தால் அதன் விஷத் தன்மையை போக்கி விடும் அற்புதம் அயனைசேஷன் முறையின் மற்றொரு சிறப்பம்சம். உதாரணமாக பென்சைன் பூச்சி மருந்து இருந்தால், அதை குளோரைடு தனியாகவும், ஹைட்ரஜன் தனியாகவும் பிரித்து, பூச்சி மருந்தின் ஃபார்முலாவை உடைத்து விடுவதால் விஷத்தன்மை செயலிழந்து விடுகிறது. அயனைஸ் முறையில் ஆரோக்கியமான குடிநீரைப் பெற முடியும் என்றபோதும் அதுபற்றிய ஆரம்பகட்ட விழிப்புணர்வு வாடிக்கையாளர்களிடம் இல்லை'' என்கிறார்.

தமிழகத்தில் டைட்டானியம் எக்யுப்மெண்ட் அண்ட் அநோட் லிமிடட் (Team) நிறுவனம் மட்டும் அயனைசேஷன் தொழில்நுட்பத்தில் குடிநீர் தயாரித்து விற்று வருகிறது. அயனைசேஷன் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் குடிநீர், அனைவரும் வாங்கிப் பயன்படுத்தும் விலையில் கிடைக்குமா? டீம் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ராவைச் சந்தித்தோம்:

''அயனைசேஷன் தொழில்நுட்பத்தில் மின்செலவு அதிகமென்றாலும், அதிக அளவில் தயாரிப்பதால் பாக்டீரியா நீக்கப்பட்ட தண்ணீரின் விலைக்கே நாங்களும் விற்பனை செய்து வருகிறோம். அயனைசேஷன் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு என்பது நம் மக்களிடம் குறைவாகவே உள்ளது. ஆனால், அருகில் உள்ள சிங்கப்பூர் அரசின் சுகாதார அமைச்சகம், அயனைசேஷன் தண்ணீரை 'ஹெல்த்தியர் சாய்ஸாக' அறிவித்துள்ளது. அந்நாட்டு அரசின் வேண்டுகோளுக்கிணங்க சிங்கப்பூர் மக்களுக்கு எங்கள் நிறுவனம் தண்ணீர் தயாரித்துத் தருகிறது! நமது அரசுகளும் இந்த நவீன தொழில்நுட்பத்தில் மக்களுக்குத் தண்ணீர் வழங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை'' என்றார் ராவ்.

''சாதாரண ஏழை, எளிய மக்களும் ஆரோக்கியமான குடிநீர் அருந்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அடிபம்பில் பொருத்திப் பயன்படுத்தும் விதமாக 'சேஃப் பாணி' என்ற பெயரில் அதிநவீன சுத்திகரிப்பு எந்திரங்களை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இலவசமாக வழங்கி வருகிறோம்'' என்று ராவ் சொல்வதைக் கேட்க, ஜில்லென்று தூய தண்ணீர் பருகியதைப் போல் மனம் குளிர்கிறது.

- ஸ்ரீசக்கரம்

படம்: **ஸ்ரீஹரி, டிஜிசண்முகம்**

வெற்றியின்




'டியர் சூர்யா... உங்களை நேரில் சந்திக்கிற வாய்ப்பு கிடைக்குதுன்னு வெச்சுக்கோங்க. அப்படியே கட்டிப்பிடிச்சி உச்சி மொகந்துடுவேன். டைரக்டர் சொல்ற 'ஸ்டார்ட்', 'கட்'டுக்கு நடுவுல வந்து நின்னு, நானும் சினிமாவுல இருக்கேன்னு காலத்தை ஓட்டுறவங்க இப்பவும் நிறையப் பேர் இருக்காங்கன்னுதான் நினைக்கிறேன்.

பேட் சக்ஸஸ், பெஸ்ட் ஃபெயிலியர்னு சொல்லுவாங்க. கொஞ்சம்கூட உழைக்காமல், ஈடுபாடு இல்லாமல் கடனேன்னு பண்ணின காரியம், வெற்றியடையும்போது, அந்த பேட் சக்ஸஸை ரசிக்கிறவங்கதான் இங்கே அதிகம். ஆனா 'கஜினி'யில உங்களுக்குக் கிடைச்சிருக்கறது, நீங்க கஷ்டப்பட்டு, ரொம்ப இஷ்டப்பட்டு உழைச்சதுக்குக் கிடைச்ச பெஸ்ட் சக்ஸஸ்.

உங்களால எனக்கு ஆகப்போற காரியம் எதுவுமில்லீங்க. அதனால மனசுல பட்டதை மறைக்காமல் சொல்றேன். நடிப்புக் கலையில் அப்பாவையே மிஞ்சிட்டீங்க. அப்பாவை மிஞ்சறதுதான் ஒரு பிள்ளைக்கு அழகு! கண் முன்னால காதலி அடிபட்டு சாகற கொடுமையைச் சகிச்சுக்க முடியாமல், 'அய்யோ நம்மளால எதுவும் செய்ய முடியலை'யேங்கிற பரிதவிப்பை கண்கள்ல தேக்கிக்கிட்டு, நீங்க நொறுங்கி அழுததைப் பார்த்துட்டு நொந்து போயிட்டேங்க. 'கஜினி' பார்த்துட்டு ரெண்டு நாள் தூக்கம் போச்சு. என்னைக் கேட்டால் இதுவரைக்கும் நீங்க நடிச்சதெல்லாம் ஒண்ணுமேயில்ல. இப்போதான் உங்க இன்னிங்ஸே ஆரம்பிக்குது. கலக்குங்க சூர்யா! உங்க ஒவ்வொரு முயற்சியையும் ரசிக்க நாங்க இருக்கோம்.'

வெளியே இடிஇடித்தபடி ஆனந்தமாய் அழுதுகொண்டிருந்தது அக்டோபர் வானம். சன் மியூசிக் சேனலின் லைவ் நிகழ்ச்சியில் பங்கேற்க புறப்பட்டுக்கொண்டிருந்த என் கைகளில் அத்தனை வேலைகளுக்கு நடுவிலும் அம்மா கொடுத்துவிட்டுப் போன ஒரு ரசிகரின் கடிதம். படித்து முடித்த கணத்தில் மனசுக்குள் இடிஇடிக்க, கண்களில் மழை.

பத்து வயதில் பாட்டி இறந்து போனபோது வாய்விட்டு அழுதிருக்







ரகசியம்!

கிறேன். அதன்பிறகு 'நேருக்கு நேர்' படப்பிடிப்பில் கொல்கத்தாவில். 'திருத்தமாக நடந்துவரத் தெரிய வில்லை. தலைமுடியை ஒழுங்காக வாரத் தெரியவில்லை. ட்ரெஸ்கூட போடத் தெரியவில்லை. அப்பா எத்தனை பெரிய பெயரெடுத்திருக் கிறார். அவருக்கு எவ்வளவு ஞாபக



சக்தி இருக்கிறது. நமக்கு என்ன ஆச்சு? மூளையே வேலை செய்ய மறுக்கிறதே! நாம் அழகாய் இல்லை. உடம்பு இல்லை. ஒரு ஷாட்டில் கூட தைரியமாக நடிக்க முடியவில்லை. கறுத்த இருளைப்போல முகத்தில் பயம் அப்படியே அப்பிக் கொண்டிருக்கிறது. நடிப்பிற்கு லாயக் கில்லாத தத்தியாக இருந்துகொண்டு எந்த தைரியத்தில் சினிமாவுக்கு வந் தோம்? கொல்கத்தாவிலிருந்து தப்பித்து வரமுடியாமல் தலையணையில் முகம் புதைத்து அழுத வெப்பம் மனசுக்குள் இன்னும் அப்படியே இருக்கிறது.

அதன் பிறகு என்னை நிஜ நடிகனாய் உருமாற்றிய 'நந்தா' படத்தைப் பார்த்து விட்டு எதுவுமே சொல்லாமல் மனசுக் குள்ளேயே புழுங்கிக்கொண்டிருந்த அம்மாவிடம், 'வாயைத் திறந்து இரண்டு வார்த்தையாவது சொல்லிடுங்க' என்று கெஞ்சியபோது கலங்கினேன். "எந்தத் தாய்... தன்னோட பையன் கண்முன் னால சாகறதைப் பார்த்து சகிச்சுக்க முடியும்! தயவுசெஞ்சு சாகற மாதிரி இனிமே நடிக்காதப்பா.'' அம்மா மௌனம் உடைத்து அழுதபோது ஆச் சர்யப்பட்டுப் போனேன். அம்மாவையே அழ வைத்துவிட்டானே இந்த நந்தா! இன்று நல்ல நல்ல கேரக்டர்களாக தேடித் தேடிப்போய் செய்வதற்கு 'நந்தா' மூலம் எனக்குப் பாட்டை அமைத்துக் கொடுத்த பாலாதானே இதற்குக் காரணம். அப் படிப்பட்ட பாலாவை நான்தான் எத் தனை தவறாக நினைத்தேன். இப்போதும் புகமையாக இருக்கிறது அந்தச் சம்பவம். அதை நினைத்தாலே பாகற்காயைப் போல மனம் கசக்கிறது.

"பாலா கண் கலங்கி அதற்கு முன் நான் பார்த்ததில்லை!"

இராமேஸ்வரத்தில் படப்பிடிப்பு ஆரம்பித்த பிறகு, 'நந்தா' படம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வர ஆரம் பித்திருந்த நேரம். 'ஏற்கெனவே இரண்டா வது ஹீரோவாக, நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு நடித்தாலும் பெயர் இன் னொருத்தருக்குப் போகிறதே... எப்படி யாவது ஒரு தனிப்பட்ட வெற்றியைக் கொடுத்துவிட வேண்டும்' என்று தவ மிருந்த நேரம். அப்போது ஒரு பத்திரிகை யில் வந்த செய்தி என்னை அதிர்ச் சியடைய வைத்துவிட்டது.

'நந்தா'வில் முக்கியமான பாத்திரத்தில் நடித்த ராஜ்கிரண் சாரின் படத்தைப் பெரிதாகப் போட்டு, எனது படத்தைச் சிறிதாகப் போட்டு, ராஜ்கிரணோடு சூர்யாவும் நடிக்கிறார் என்பதுபோல் அந்தச் செய்தி வெளியாகி இருந்தது. இதைப் படித்ததும் உடல் நடுங்கியது. 'அய்யோ! நந்தா நாமதானே! படத்தில் நாம் சின்னதாகப் போய்விடுவோமோ? ராஜ்கிரண்தான் பெரிய கேரக்டரோ? நம்மை வைத்து படத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல முடியாதோ?' மறுபடியும் மனக்கலக்கம். எனக்குள்ளிருந்து வெளி யேறி விட்டிருந்த பாதுகாப்பில்லாத உணர்வு, பட்டென்று என்னைப் பற்றிக் கொண்டது. பொறுமையில்லாமல் அன்று படப்பிடிப்பு முடிந்த கையோடு, அப்பா வுக்கு போன் செய்து எனது பயத்தைச் சொல்லிவிட்டேன்.

அப்பாவோ, அன்றிரவே பாலாவுக்கு போன் செய்து விசாரித்திருக்கிறார். "என்ன பாலா இப்படி செய்தி வருது... இதையெல்லாம் பார்க்க மாட்டீங்களா?" என்று கேட்டுவிட்டார். பாலா கண் கலங்கி நான் பார்த்ததே இல்லை. ஆனால் நான் அவரை கலங்க வைத்து விட்டேன். "அவசரப்பட்டு அப்பாகிட்ட போய் எதுக்கு டிஸ்கஸ் பண்ணினீங்க? அப்படியெல்லாம் விட்டுடு வேணா சூர்யா? படம் வந்த பிறகு ஏண்டா இப்படிக் கேட்டோம்னு வருத்தப் படுவீங்க பாருங்க" என்று மென்மையாக, மிக நாகரிகமாக ஒரு இங் கிலீஷ்காரனைப் போல பாலா என்னிடம் கேட்டார். அவர் நினைத்திருந்தால்



* 'நந்தா'வில் ராஜ்கிரணுடன்...

உரிமை எடுத்துக் கொண்டு என்னை கன்னாபின்னா வென்று திட்டியிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. அவரது பக்குவத்தைப் பார்த்து வெட்கப் பட்டேன். சின்னச் சின்ன விஷயங்கள்கூட மற்றவர்களை எப்படிக் காயப்படுத்தும் என்று கற்றுக்கொண்டேன். நமக்கு வாழ்க்கை கொடுக்கிற ஒருவர், அவரைப் போய் கேள்வி கேட்கிற மாதிரி அரைவேக்காடாக இருந்துவிட்டோமே.. மற்றவர்களைக் காயப்படுத்துகிற ஆளாக நாம் இல்லை. இருந்தும் நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன். 'நந்தா' என்னை நடிகனாக மட்டுமல்ல, நிறைவான மனிதனாகவும் உரு மாற்றியது.

முன்மாதிரியாக வாழ்ந்துகொண்டிருக்கும் அப்பா, பாசத்தை மட்டுமே பொழிந்துகொண்டிருக்கும் அம்மா, ''அண்ணா, அண்ணா'' என்று என் தோளில் சாய்ந்து கொள்கிற தம்பி, தங்கைகள்... எனது எல்லா முயற்சிகளையும் எதிர்பார்ப்போடு வரவேற்கிற ரசிகர்கள். ஒவ்வொரு கேரக்டருக்கும் உண்மையாக உழைக்க விரும்பும் நான். இந்த வாழ்க்கை எத்தனை அழகானது, அர்த்தமுள்ளது என்பதை ஒவ்வொரு கணமும் உணர ஆரம்பித்திருக்கும் தருணம். இதே சூர்யா அன்று பயங்களின் மொத்த உருவமாக, தன்னம்பிக்கையின் முகவரி தெரியாமல், படிப்பில் தட்டுத்தடுமாறி, எட்டு வைத்தும் எழுந்து நடக்க முடியாமல், முடங்கி முடங்கி ஒடுங்கிய ஒருவன். வசதியான சூழலில், பிரமுகர் வீட்டுப் பிள்ளையாக பிறந்தவனுக்குப் பிரச்னைகள் எதுவும் இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு, எல்லா இடத்திலும் எத்தனை பெரிய பீடத்திலும் பிரச்னைகள் உண்டு என்பதற்கு நான் ஒரு உதாரணம். வீட்டிலும் வீட்டிற்கு வெளியிலும் என்னைச் சுற்றி வளர்ந்து கொண்டேயிருந்த தன்னம்பிக்கையின்மை என்னும் கண்ணாடிச் சுவரை படிப்படியாக, பொடிப்பொடியாக என்னாலேயே தகர்த்தெறிய முடிந்திருக்கிறது என்றால், உங்களாலும் முடியும். தேடல் இல்லாத மனிதனாக, திசை புரியாத பறவையாக சிறகடித்துக்கொண்டிருந்த நான் இப்போது சரியான பாதையில் பயணத்தைத் தொடங்கியிருக்கிறேன். பயண வழியின் சக பயணியைப்போல் அல்லாமல், கடைசிவரை கூடவே பயணப்பட்டு வருகிற உயிர் நண்பனைப் போன்ற உங்களிடம் பகிர்ந்துகொண்ட என் பர்சனல் டைரியின் பக்கங்கள், உங்களை கொஞ்சமாய் பக்குவப்படுத்தி, பதப்படுத்தியிருந்தால், இந்த மழையைப் போலவே நீங்களும் ஈரமான இதயமுடையவர் ஆகிறீர்கள். சன் மியூசிக் சேனலின் லைவ் நிகழ்ச்சியில் கடைசி நேயர் என்னிடம் கேட்டார். "உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன சூர்யா?" ஒரு நொடிகூட யோசிக்காமல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பட்டென்று பதில் வந்து விழுந்தது– "நான் சந்தித்த தோல்விகள்'' நிறைவான மனதோடு நிகழ்ச்சி முடிந்து விடைபெற்று வெளியே வருகிறேன்.

இடைவிடாத அடைமழை!

தொகுப்பு : **ஆர்.சி.ஜெயந்தன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

சூர்யா பால்யகால கறுப்பு - வெள்ளை பட கலெக்ஷன் : **சிவகுமார்**

(முற்றும்)



ஒரு காக்கையைத் தேடி...

கையிலே சோற்றுக்கிண்ணம், கண்களிலே ஒரு தேடல், மனசுக்குள் ஒரு இறுக்கம் – இவற்றுடன் வீட்டுத் தோட்டத்தில் அலைந்துகொண்டிருந்தேன். எனக்குத் தேவை ஒரேயொரு காக்கையின் தரிசனம்.

அன்று அமாவாசை. பக்தியுருவான என் 'சக்தி'யானவள், என் பெற்றோருக்கு அமாவாசை திதிக்காகப் படையலிட்டு, நான் சாப்பிடுமுன் காக்கைக்குச் சோறு வைக்கச் சொல்லி, "தோட்டத்துப் பக்கம் போய் நின்னு கூப்பிடுங்க. காக்கா வரும்" என்ற உத்தரவைப் பிறப்பித்துவிட்டு, அதற்கு இடைப்பட்ட நேரத்தை வீணாக்காமல் டி.வி. சீரியல் ஒன்றில் மூழ்கியிருந்தாள்.

தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கால்கள் கடுத்ததும் 'கா...கா...கா...' என்று கத்தி என் தொண்டை வறண்டதும்தான் மிச்சம். ஒரு காக்கை கூட தலையைக் காட்டவில்லை.

'ச, காக்கா வராத இடத்துல வந்து வீடு கட்டியிருக்கான் பாரு நம்ம கோபாலு!' என்று என் வீட்டு கிரகப் பிரவேசத்தன்று ஒரு நண்பன் குறை கூறியதை நினைவுகூர்ந்தேன். 'சாலை வசதி, சாக்கடை வசதி, காற்று, தண்ணீர் வசதி உள்ள இடம்' என்று இந்த வீட்டு மனையை என் தலையில் கட்டிய அந்த ரியல் எஸ்டேட்காரன், 'காக்கை வசதி'க்கும் ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கலாம்!

காலையிலிருந்து பட்டினியாயிருந்த வெறும் வயிறு, 'என் கடமையைச் செய்ய விடுடா' என்று நினைவூட்டுவது போல் கிள்ளியது. என் வயிற்றுப் பசியைப் போக்குவது இப்போது ஒரு காக்கையின் கையில்... அல்ல, மூக்கில் அல்லவா இருக்கிறது!

இந்த நேரத்தில் என் மனைவியைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். ஆசாரமான குடும்பத்தில் அவதரித்த ஜென்மம். பஞ்சாங்கத்தையே வேதமாகப் பாவித்து, அதில் பட்டியலிட்டுள்ள அனைத்து விரதங்களையும் ஒன்றுகூட விடாமல் கடைப்பிடிப்பவள். சில வேளைகளில் அவளுடைய பக்திமார்க்கத்தை நான் விமர்சிக்கப் போய், நானும் 'கட்டாயப் பட்டினி' விரதம் இருக்க நேர்ந்ததுண்டு.

"என்ன, இன்னுமா காக்கா வரலே?" - உள்ளேயிருந்து மனைவியின் குரல்.

"ஒரு காக்காகூட கண்ணுல தென்படல விமலா. சாதத்தை சுவத்து மேல வச்சுட்டு வந்துடட்டுமா?" என் பசிக் கொடுமை எனக்கல்லவா தெரியும்!

"என்ன அவசரம் வேண்டிக்கிடக்கு? காக்கா கொத்தாம நீங்க சாப்பிடக் கூடாதுன்னு தெரியுமில்ல?" என்று சம்பிரதாயத்தை நினைவுபடுத்தி என்னை அவள் கொத்தினாள்.

நாம் காக்கைக்கு வைக்கும் சோற்றை நமது பித்ருக்கள் காக்கை உருவில் வந்து சாப்பிட்டுவிட்டுப் போவதாக ஐதீகம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், பித்ருக்களின் பசியை அதிகப்படுத்தும் விதமாக, தன் வருகையைத் தாமதப்படுத்

தும் இந்த காக்கை ஜென்மம் எனக்குச் சத்ருக்களாக அல்லவா ஆகிவிட்டது!

என் மனப்புலம்பல் அந்த சனீஸ்வரனின் திருச்செவிகளில் விழுந்திருக்க வேண்டும்... திடீரென்று தொலைவில் கா...கா...கா... என்று ஓர் இனிய (?) ஓசை!

எங்கிருந்தோ பறந்து வந்து, எங்கள் தோட்டத்தை ஓர் வட்டமடித்து விட்டு, பக்கத்து வீட்டு காம்பவுண்ட் சுவரின் கோடியில் வந்து உட்கார்ந்தது ஒரு காக்கை.

கையிலுள்ள சோற்றை அது பார்க்கும்படி, கிண்ணத்தை அதன் பார்வையில் படும்படியாக 'டிஸ்ப்ளே' செய்தேன். சுவரை நெருங்கவும் பயம், தனக்குச் சோறிட வருகிறானா அல்லது பிடிக்க வருகிறானா என்ற ஐயப்பாடு அதன் மனத்தில் எழுந்து திடீரென்று பறந்து போய் விட்டால்? மேலதிகாரிகளைக் கூட நான் 'காக்கா' பிடிக்க விரும்பாதவன் என்று அதற்குத் தெரிந்திருக்க நியாயமில்லையே? ஈஸ்வரனின் அருள்பெற்ற வாகனமானாலும், அதுவும் ஒரு 'ஐந்தறிவு' பறவைதானே?

என் நல்ல நோக்கத்தைப் புரிந்து கொண்டு அது அவ்விடத்திலேயே



அமர்ந்திருந்தது போல் தெரிந்தது. முதலில் அதனுடன் நல்லுறவு கொள்ள வேண்டும். மனிதநேயத்தை விட, இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் 'பறவைநேயம்' முக்கியமானது அல்லவா?

என் நேயத்தைப் புரிந்துகொள்ளும் சக்தி அந்த ஐந்தறிவுப் பறவைக்கு இருக்கிறதோ என்னவோ, என நினைத்து அதன் பார்வையில் படும்படியாக முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, மெல்ல காம்பவுண்ட் சுவரை நெருங்கி, கையிலிருந்த சோற்றை அதன் மீது வைத்தேன். (காக்கைக்கு அன்னமிடும் முன் அந்த இடத்தில் நீர் தெளித்து, சுத்தமாக்கிய பிறகே வைக்க வேண்டும் என்ற சடங்குகளைப் புறக்கணிக்க வேண்டிய சூழ்நிலை. 'சோறு வைக்கு முன் நமக்கு ஏதோ 'தண்ணி' காட்டுகிறானே இவன்? என்ற சந்தேகம் காக்கையின் மனத்தில் உதித்து விட்டால் அது தப்பித்து ஓடிவிடும் சாத்தியக்கூறுகள் உண்டல்லவா?)

சுவற்றின் மீது வைத்த சோற்றை அது பார்த்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டு, மெல்ல நகர்ந்துபோய் மெல்லிய குரலில் மனைவியைக் கூப்பிட்டேன். "விமலா! காக்கா வந்துட்டுது! இவ்வளவு நேரமா ட்ரை பண்ணினதுல இப்பத்தான் வந்திருக்கு... இங்கே வாயேன்!"

டீவி. பார்த்துச் சிந்திய கண்ணீரைத் துடைத்தவாறே கதவருகே வந்து நின்றவள்,

"அந்த காம்பவுண்ட் மேல உங்களை யார் சாதம் வைக்கச் சொன்னது?" என்றாள்.

அவள் குரலில் இருந்த வெறுப்பு எனக்குப் புரிந்தது. அது பக்கத்து வீட்டுச் சுவர். இவளுடைய எதிரியின் ஆளுகைக்குட்பட்ட கோட்டைச்சுவர்!


காக்கை அங்கேயே உட்கார்ந்திருக்கட்டும்... காம்பவுண்ட் சுவரின் மீது இவளுக்குள்ள கடுப்பைப் பற்றிய கதையைப் பார்ப்போம்.

பக்கத்து வீட்டுக்காரி பங்கஜமும் இவளும் ஒரு காலத்தில் அந்நியோன்னியமான சிநேகத்தில் இருந்தவர்கள்தான். எங்கள் வீட்டில் முதன் முதலாக 'கேபிள் கனெக்ஷன்' வாங்கியதால் ஏற்பட்ட பொறாமையால், அந்த பங்கஜம் அக்கம் பக்கத்து வீடுகளில் என் மனைவியைப் பற்றி வயிற்றெரிச்சலைக் கொட்ட, அந்த எரிச்சலானது அதிகமான 'செல்சியஸ்' அளவில் மகா எரிச்சலாக உருவெடுத்து, இவள் காதுகளில் வந்து பாய்ந்து விட்டது. அவ்வளவுதான், இருவருக்கும் வாசலில் கோலம் போடுவதில் போட்டி உருவாகி, காய்கறி வண்டிக்காரனிடம் பேரம் பேசுவதுவரை போட்டியானது தொடர்ந்ததில்... சிநேகம் குலைந்து போனது.

இவ்வாறு பகையாளியாகிவிட்ட அந்தப் பங்கஜத்தின் காம்பவுண்ட் சுவர் மீது தன் அருமைச் சமையலில்(!) உருவான ஒரு பிடிச்சோறு வைக்கப்படுவதை இவள் பொறுத்துக் கொண்டாயிருப்பாள்?

"முதல்ல அந்தச் சுவத்து மேல வச்ச சாதத்தை எடுங்க!" ஆத்திரத்தோடு அவள் ஆணையிட, எனக்குப் பதிலுக்கு ஆத்திரம் வந்திருக்க வேண்டியதுதான்

சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து மருத்துவர்களுக்கான ஒரு புதிய சிடி வெளிவந்துள்ளது. மூளை தொடர்பான நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிய இந்த சிடி பயன்படுத்தப்படும்.



நியாயம். ஆனால், என் வயிற்றுப் பசியின் நிலையைக் கருதியும், இன்னும் அங்கே உட்கார்ந்திருந்த காக்கையின் நலன் கருதியும் பொறுமை காத்து, "விமலா! சத்தம் போடாம நீ உள்ளே போ! நம்ம சத்தத்தைக் கேட்டு இந்த காக்காவும் பறந்துடப் போவுது! மெதுவா நான் அந்த சோத்தை எடுத்து வேற எங்காச்சும் வச்சுடுறேன்..." என்றேன்.



சுடோகு விடை

5	6	3	1	4	9	8	7	2
2	1	9	3	8	7	4	6	5
7	4	8	6	2	5	1	3	9
3	9	1	5	6	4	7	2	8
6	8	2	9	7	1	5	4	3
4	5	7	8	3	2	9	1	6
1	7	5	2	9	3	6	8	4
8	3	4	7	5	6	2	9	1
9	2	6	4	1	8	3	5	7

''காக்கா எங்கே?'' இது அவளுடைய அடுத்த கேள்வி.

''அதோ... அந்தச் சுவத்து கடைசியில் உட்கார்ந்திருக்கு பாரு! எவ்வளவு அழகா ரெக்கையை நீவிக்கிட்டு...''

பார்த்தாள்; கண்ணைச் சுருக்கினாள்; மீண்டும் பார்த்தாள்; முகத்தைச் சுருக்கினாள்.

"இந்தக் காக்காவை உங்களை யார் கூப்பிடச் சொன்னது?"

அதிர்ந்தேன். என்ன சொல்கிறாள் இவள்?

''என்ன விமலா? ரொம்ப நேரமா கஷ்டப்பட்டு ஒரு காக்காவைக் கூப்பிட்டு உக்கார வச்சிருக்கேன்... இந்தக் காக்கா, அந்தக் காக்கான்னு தரம் பிரிக்கிறியே...?'' என்று முணுமுணுத்தேன். 'அமாவாசை சோற்றைத் தின்னும் புனிதத்தகுதி சில காக்கை இனத்துக்கு மட்டுமே தரப்பட்டிருக்கிறதோ...? அண்டங்காக்கையை வீட்டில் அண்டவிடக்கூடாது என்று அடிக்கடி விரட்டுவாளே இவள்... இது அந்த இனமாக இருக்குமோ?'

"நீ நினைக்கிற மாதிரி அது அண்டங்காக்கா இல்லே விமலா! சாதாரண காக்கா! அதோ பாரு, கழுத்துல வெள்ளையா... தலையைச் சாய்ச்சுப் பாக்கறதை...!"

காக்கையைப் பற்றிய என் நேரடி வர்ணனையை அவள் விரும்பவில்லை.

"இந்தக் காக்காவுக்கு சோறு வைக்கக் கூடாது! முதல்ல அடிச்சு விரட்டுங்க அதை!"

அதிர்ந்தேன். ஆத்திரம் பொங்கக் கேட்டேன். "என்ன பைத்தியக்காரத் தனமா பேசறே? ஏன் இந்தக் காக்காவுக்கு என்ன? இவ்வளவு நேரமா கஷ்டப்பட்டு அதிர்ஷ்டவசமா ஒரு காக்கா வந்திருக்கு. இதையும் விரட்டச் சொல்றியே... உனக்கென்னடி பைத்தியமா?"

எங்கள் பேச்சுச் சத்தத்திலும் அந்தக் காக்கை பறந்து விடாமல் அப்படியே உட்கார்ந்திருந்தது என்றால் அது உண்மையிலேயே 'செவிப்புலன் செயல்படா' பறவையாகத்தான் இருக்க வேண்டும்!

"இது அந்த பங்கஜம் மூதேவிகிட்ட தினமும் சாதம் தின்னுற காக்கா! அவளோட காக்காவுக்கு நான் ஏன் சாதம் வைக்கணும்?"

அடிப்பாவி! எனக்கு ஏற்கெனவே இருந்த பசி மயக்கம், இவளுடைய தீர்மானத்தைக் கேட்டதால் அதிகமாகி விட, தலையைச் சுற்றியது.

மயக்கத்தினிடையே சற்று, அந்த துரதிருஷ்டம் பிடித்த காகம் இருந்த இடத்தைப் பார்த்தேன். அதைக் காணோம்! எனக்குச் சாபம் விட்டவாறு பறந்து போய்விட்டிருக்கும்! ○

சடகோபன் ரமேஷ் ஷாக்!

கேரளாவுக்கு மாறிட்டேன்!



ஸ்டார் விஜய்யில் வெள்ளிதோறும் இரவு பத்து மணிக்கு ஒளிபரப்பாகவிருக்கும் 'கலக்கப் போவது யாரு' என்னும் நகைச்சுவை நிகழ்ச்சியை சின்னிஜெயந்துடன் இணைந்து வழங்கவிருக்கிறார் கிரிக்கெட் ப்ளேயரான சடகோபன் ரமேஷ்!

"என்ன பாஸ், கிரிக்கெட்ல சான்ஸ் கிடைக்கலைன்னு டீ.வி.க்கு வந்துட்டீங்களா" என்றோம். பதறிவிட்டார்.

"இல்லையில்லை. இனி நான் தமிழ்நாட்டுக்காக ஆடப் போறதில்லை. ஸ்டேட் மாறிட்டேன். கேரள அணிக்காக ஆட ரெடியாயிட்டேன்." என்று எடுத்த எடுப்பிலேயே 'ஷாக்'கடித்தார்.

"தமிழ்நாட்டுக்காக என்னதான் உயிரைக் கொடுத்து விளையாடினாலும் இந்திய அணியில இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் ரொம்ப மங்கலா இருக்கு. ஆஷிஷ் கபூர்னு ஒரு ப்ளேயர் தமிழ்நாட்டுக்காக எவ்வளவோ நல்லா விளையாடியும் யாரும் அவரை ஏறெடுத்துப் பார்க்கலை. 'டக்'குனு பஞ்சாப்புல போய் விளையாடினார். உடனே இந்தியன் டீம்ல செலக்ட் ஆனார். நிலைமை இபபடியிருக்கும்போது எப்படி தமிழ்நாட்டுக்காகத் தொடர்ந்து ஆட முடியும் சொல்லுங்க? இங்க சாதிக்கறதை விட்டுட்டு கேரளாவுக்காக ஆடறதை நினைச்சா கஷ்டமாத்தான் இருக்கு. என்ன பண்றது. இப்படி செஞ்சாவது இந்தியன் டீமுல மறுபடியும் இடம்பெற முடியுமான்னு ஏங்கிட்டு இருக்கேன்" என்றவரிடம் 'வாய்ப்புகள் அமைந்தும் அதைத் தமிழ்நாடு ப்ளேயர்ஸ் சரியாகத் தக்க வைத்துக் கொள்வதில்லையே?' என்று கேள்வி எழுப்பினால் பலமாக மறுக்கிறார்.

"கடைசியா நான் ஆடின ஸ்ரீலங்கா டூர் டெஸ்ட் மேட்ச்சுல செஞ்சுரி போட்டேன். காயம் காரணமா வெளியில வந்த என்னை அப்படியே ஒதுக்கிட்டாங்க. தமிழ்நாடு ப்ளேயர்ஸ் என்றாலே இவனை எப்படி கவிழ்க்கலாம்னு காத்திட்டிருந்தா நாம என்ன பண்ண முடியும்? இந்த விஷயத்துல தமிழ்நாடு கிரிக்கெட் அசோஷியேசன் நம்ம ப்ளேயர்ஸை கட்டிக் காத்திருக்கணும். அப்படிக் காப்பாத்தாதபோது என்னை மாதிரி ப்ளேயர்ஸ் அடுத்த மாநிலத்துக்குத் தாவாம எப்படி இருக்க முடியும்?" என்றார் கனத்த இதயத்தோடு.

- சநகன்

மங்கையர் மலர்

திருமண மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!





மீரா - கிருஷ்ணன்



SHS மணி, வடிவீஸ்வரம், நாகர்கோவில்

நான் மங்கையர் மலர் பத்திரிகையை வெகு காலமாகப் படித்துக் கொண்டிருப்பவன். எனது மூத்த மகனின் திருமணம் மங்கையர் மலர் விளம்பரம் மூலமாகத் தான் 2001ம் வருடம் நடந்தது. இப்பொழுது இரண்டாவது மகனின் திருமணமும் மங்கையர் மலரின், திருமண மலர் விளம்பரம் மூலமாகத்தான் நடைபெற்றது. திருமண விளம்பரத்திற்காக நான் அனுப்பிய தொகை சிறியது. ஆனால் அதனுடைய பிரதிபலனோ மகத்தானது.

மங்கையர் மலரின் திருமண மலர் விளம்பரம் மூலம் கிடைக்கும் பலனும், திருப்தியும், வேறு இடத்தில் கிடைப்பது மிக அரிது.

இப்படிக்கு,
SHS மணி

அனைத்து இல்லங்களையும் அலங்கரிக்கும் மங்கையர் மலரின் திருமண மலர் பகுதியில் நீங்களும் விளம்பரம் செய்து பயனடையலாமே!

உடன் அணுகவும் :

மானேஜர், திருமண மலர் பகுதி, கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032
தொலைபேசி : 2225 1522 / 0623 / 1324 தொலைநகல் : 044-2225 1021
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalaronline.com

திருமண மலர் விளம்பரக் கட்டணம்

முதல் 30 வார்த்தைகளுக்கு	ரூ.400.00
30க்கும் மேற்பட்ட வார்த்தை ஒவ்வொன்றுக்கும் தலா	ரூ. 15.00
வண்ணத்தில் 'ஹை லைட்'' செய்து வெளியிட	ரூ.100.00

*கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ / சென்னை காசோலையாகவோ / வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ '**மங்கையர் மலர்**' என்ற பெயரில் எடுத்து அனுப்பலாம்.*



No. 1041/57 * Registered No. TN/PMG (CCR) 572/03-05 *
Licensed to post without prepayment under PMG's Licence
No. WPP 358/03-05 * Registered as a Newspaper in Srilanka